37



# சக்தி

## மாத வெளியீடு

★

பொருள் அடக்கம்


அடுத்த யுத்தப் பேச்சு . . . தலையங்கம் 1
காலச் சுழல் . . . . . . . குறிப்புகள் 4
புரட்சி மகள் . . . . . . . வேங்கடாசலம் 5
பிரிவி கவுன்ஸில் . . . . . சட்ட மாணவன் 9
தூரத்துப் பச்சை . . . . . . . தி. ஜ. ர. 12
கோணல் பல் . . . . . . . ஜான்ஸ்டன் 15
குருதேவர் பெருந்தன்மை . . ஸௌந்திரம் 17
நட்சத்திர உதயம் . . . . . . . தாம்ஸன் 22
நெருப்பு . . . . . . . . . செந்தாமரை 28
பெண் . . . . . . . . . சுரேஷ் சந்திரர் 29
மலேயாவில் விடுதலைப் புயல் ஆர். எச். நாதன் 32
இ. தே. ரா. போட்டோ படங்கள் . . 37-44
சிற்பியின் காதல் . . . . . . . . சுரபி 45
[illegible]வின் புதிய குடியரசு . . ராமனுதன் 53
அதிகார அலங்கோலம் . . கி. உ. ஆசிரியர் 58
மின்சாரக் கனவு . . . . . ஜஹூருல் ஹக் 61
கறுப்புப் பூனை . . . . . பகவதிசரண் வர்மா 65
கண்ணீர் அம்மன் . . . . . . கிருஷ்ணையர் 71
பிச்சைக்காரர் தந்திரம் . . . . . டோக்கி 74
புத்தக உலகம் . . . . . சுப. நாராயணன் 78


✻


பார்த்திபஹூ கார்த்திகைமீ
மலர்: 12 இதழ்: 8

அணா 8


அசோகா
சுகந்த பாக்குத் தூள்
M. K. கிருஷ்ண செட்டி
அசோகா பாக்டரி, கோயமுத்தூர்
88854
சென்னை 600 008

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி
## லிமிடெட்

**மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்**

எங்களுடைய விசேஷமான நூல்கள் :

| 5,00,000 நூற்கும் கதிர்கள் | ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல். | நம்பர் 80 வரை நூல்கள் |
|---|---|---|

●

**நாங்கள் சப்ளை செய்வது:**

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய கார்க்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

# ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மானேஜர்கள்




## 1957-ல் ஒரு சந்தோஷ தினத்திற்கு 1945-ல் திட்டம் போடப்படுகிறது

"என் குழந்தைகளின் கலியாணச் செலவுகளை என்னால் தாங்க முடியுமா?"
இக் கேள்விக்குப் பதில் நீர் இப்போது செய்யும் காரியத்தைப் பொறுத்ததாகும்.

சிறு சேமிப்புக்காரர்கள் 5 ரூபாய்க்கு ஒரு ஸெர்டிபிகேட்டையாவது, ஒன்று 4 அணா, 8 அணா, 1 ரூபாய் மதிப்புள்ள ஸேவிங்ஸ் ஸ்டாம்புகளையாவது வாங்கலாம். ஸெர்டிபிகேட்டுகளும் ஸ்டாம்புகளும் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற யாதொரு ஏஜெண்டினிடமாகிலும், ஸேவிங்ஸ் பீரோ, தபால் ஆபீஸுகள் ஆகிய இந்த இடங்களிலானும் கிடைக்கும்.

கலியாணங்கள் என்றால் பணச் செலவுதான். பல வருஷங்களுக்கு முன்னால் முன் யோசனையுடன் திட்டம் போட்டு பணம் சேர்த்து, அதைப் புத்திசாலித்தனமாய் வட்டிக்குப் போட்டுவைத்தால்தான் உமது குழந்தைகள் பெரியவர்களாகும்போது தங்கள் கலியாண வாழ்க்கையை சரியான வகையில் க்ஷேமமாய் ஆரம்பிக்க முடியும்.

## நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்

- பிரதி 10 ரூபாயும் 12 வருஷங்களுக்குப் பிறகு 15 ரூபாய் ஆகிறது.
- தனிவட்டி 4 1/6 சதவீதம். இதற்கு இன்கம் டாக்ஸ் கிடையாது.
- இரண்டு வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட் விஷயத்தில் 18 மாதங்களுக்குப் பிறகு) அதுவரையில் சேர்ந்துவந்த வட்டியுடன் பணமாக மாற்றிக் கொள்ளலாம்.

A.A.A. 126.

குடிசைத் தொழிலை ஆதரியுங்கள் !

# "SCABIOL"

Magic Cure for all Skin Diseases

## ஸ்கேபியால்

சொறி சிரங்கு, முகப்பரு, வேனல்கட்டி,
கரப்பான், சேத்துப் புண் முதலியவை
களுக்கு இணையற்ற நிவாரணி

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் : **THE MADURA COTTAGE INDUSTRIES**

Manufacturers & Representatives

17, Perumal Tank Street, : MADURA

எதிர்பாராத தீவிபத்துகளினால்

எத்தனையோ நஷ்டங்கள் !

*

அவற்றிற்கெல்லாம் ஈடு கொடுப்பதே எங்கள் அரிய சேவை!

*

விவரங்களுக்கு எழுதுங்கள் :-

**பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்**

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ் : மதுரை

கிளை ஆபீஸ்கள் :

பம்பாய் : லாயிட்ஸ் பாங்க் பில்டிங் ஹாரன்பி ரோடு
அகமதாபாத் : 1761, காந்தி ரோடு
கல்கத்தா : 26, டல்ஹௌஸி ஸ்குயர்
ராவல்பிண்டி : லாயிட்ஸ் பாங்க் காம்பவுண்ட் எட்வர்ட்ஸ் ரோடு

**தீவிபத்து சம்பந்தமான சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்**

**மொத்த ஆஸ்திகள் ரூ. 53,00,000-க்கு மேல்**

பிரதம ஏஜண்டுகள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட், மதுரை etc.


ஸ்ரீமதி. எம். எஸ். சுப்புலக்ஷ்மி
நடிக்கும்
மீரா
ரிகார்டுகள் எல்லா
எச். எம். வி.
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்
"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்" ரிகார்டுகள்
சிறந்த சங்கீதம் ÷ சீரிய ஒலிப்பதிவு
HIS MASTERS VOICE
M. SAMUEL
தி கிராமபோன் கம்பெனி லிமிடெட்
டம்-டம் - பம்பாய் - மதராஸ் - டில்லி - லாகூர்

பார்த்திப
மலர் 12

# சக்தி

கார்த்திகை
இதழ் 8

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

## அடுத்த யுத்தப் பேச்சு

முந்திய உலக மகாயுத்தம் நடந்து முடிந்தபோது, உலகத்துக்கு நிரந்தர சமாதானம் ஏற்பட்டு விட்டதாகச் சொன்னர்கள்; 'யுத்தங்களை யெல்லாம் ஒழிக்கும் யுத்தம் நடந்து முடிந்தது' என்று அகமகிழ்ந்தார்கள். உலக மக்களில் பெரும்பாலோர் இதை நம்பவும் நம்பினேம். இந்த யுத்த முடிவிலோ அப்படியெல்லாம் இல்லை; இப்போதே-கோரபயங்கர சர்வ நாச யுத்தம் ஒன்று நடந்த அடியிலேயே-அடுத்த யுத்தம் பற்றிய பேச்சுத் தொடங்கி விட்டது; அதன் அபசகுனக் குறிகளும் காண்கின்றன.

போன யுத்தத்தில் ஜயித்த நாடுகள், ஜெர்மனியிடம் காத்திருந்து யுத்த நஷ்ட ஈடு வாங்கச் சம்மதித்தன. இந்த யுத்தத்திலோ, கைமேல் யுத்தக் கடனைத் தண்டிக்கொள்ளும் முயற்சியே நடக்கிறது. பாட்ஸ்டாம் முடிவின் முக்கியமான ஓர் அம்சம் என்ன என்று நினைக்கிறீர்கள்? ஜெர்மனி பட்ட யுத்தக் கடனைத் தண்டல் செய்ய, ஜெர்மனியின் மூலதனக் கைத்தொழில் இயந்திரங்களை யெல்லாம், நேச நாடுகள் தங்களுக்குள் பங்கு போட்டு இப்போதே எடுத்துக் கொண்டு போய்விடத் திட்டம் போட்டு விட்டன.

சீனவிலே, பொது உடைமை சர்க்காருக்கும் சியாங் சர்க்காருக்கும் நடக்கும் சண்டையில், கம்யூனிஸ்டுகளுக்கு ருஷ்யாவும் சியாங்குக்கு அமெரிக்கா முதலிய ஐக்கிய நாடுகளும் ஆதரவு செய்கின்றன. இரானிலே, வட பகுதியில் உள்ள சில மக்கள் புரட்சி தொடங்கி யிருக்கிருர்களாம். அவர்களுக்கு ருஷ்யா உதவி செய்கிறதாம். தென் பகுதியிலே உள்ள அமெரிக்க, பிரிட்டிஷ் துருப்புகள் 'நாங்கள் இரானைக் காலி செய்துவிட்டுப் போகிறோம், போகிறோம்' என்கிருர்களே யொழிய, போகிற சேதியை இதுவரையில் காணேம். பாலஸ்தீன் பிரச்னையில் அரபுகள் கட்சியை ஆதரித்துப் பலப்படுத்தவே, அகில உலக அரபு லீக் அமைந்து வேலைசெய்ய பிரிட்டன் ஊக்கமளித் திருக்கிறதாம். ஆனல், ருஷ்யாவோ யூதரிடம் சிறிது சலுகை காட்டுவதுபோல் தோன்றுகிறது. சலுகையோ, இல்லையோ, பாலஸ்தீன் பிரச்னையை ஐந்து பெரிய வல்லரசுகள் மகாநாடு கூட்டித்தான் தீர்க்க

வேண்டும் என்று, இப்போது ருஷ்யா பாத்தியம் கொண்டாடுகிறதாம்.

இவை போக, 'அணுக்குண்டு சம்பந்தமான சாஸ்திரீய தத்துவங்களை ருஷியாவுக்குச் சொல்வோமே யொழிய, அதைச் செய்யும் இயந்திர விவரங்களையெல்லாம் சொல்லமாட்டோம்' என்று அமெரிக்காவும் பிரிட்டனும் கண்டிப்பாய்க் கூறிவிட்டன. இதெல்லாம் எதைக் காட்டுகிறது? ஒருபுறம் ருஷ்யாவுக்கும் மறுபுறம் பிரிட்டன்-அமெரிக்கா நாடுகளுக்கும் பரஸ்பர அவநம்பிக்கையும் முரண்பாடுகளும் வலுத்து வருகின்றன என்பதையே அல்லவா?

'நியூஸ் ரிவ்யூ' என்ற பிரபல லண்டன் வாரப் பத்திரிகையில், ராணுவ உத்தியோகஸ்தரான 'மேஜர்' ஒருவரின் கடிதம் ஒன்று இச்சமயம் வெளியாகியிருக்கிறது. பிரிட்டனின் தற்போதைய மனோநிலை எப்படியிருக்கிறது என்பதை அது காட்டுகிறது. "இன்று பிரிட்டனில் வலுத்திருக்கும் ஒரு மனப்பான்மையைக் கண்டு, புத்தி சுவாதீனமுள்ள ஒவ்வோர் ஆங்கிலேயனும் வெட்கித் தலைகுனிய வேண்டும். 'அடுத்த யுத்தம்' வரப்போவதாகப் பேசுகிறார்களே, அந்த மனிதர்களின் மனப்பான்மையைத்தான் குறிப்பிடுகிறேன். அடுத்த யுத்தம் ருஷியாவுக்கு எதிராய் நடக்கப் போகிறதாம். இப்படிப் பேசுவோர் பிரிட்டனில் ஏராளமாயிருக்கிறார்கள். ஆங்கிலேயரின் இந்த மனப்பான்மையைத் திருத்தியாக வேண்டும்" என்று, அந்த மேஜர் கூறுகிறார்.

### ஓட்டு மோசடி

ஓட்டுப் போடுவதை இடுக்கு வழியாய்க் கவனிக்கும் காவல் அதிகாரிகளை எடுத்துவிடச் சர்க்கார் தீர்மானித்தது நல்ல காரியம். இந்த அதிகாரி தங்கள் ஆசாமி என்று சொல்லி, ஓட்டர்களைச் சில அபேட்சகர்கள் பயமுறுத்திய துண்டு. ஆனால், காவல் அதிகாரியை எடுத்துவிட்டால், இன்னொரு தீமை இருக்கிறது. அதைத் தடுக்கவும் சர்க்கார் ஒரு வழி கண்டுபிடிக்க வேண்டும். இது ஒரு முனிசிபல் தேர்தலில் நடந்தது. ஓர் அபேட்சகர் ஓட்டர்களுக்கு ஏராளமாய்ப் பணம் கொடுத்தார். இருந்தாலும், பல ஓட்டர்களிடம் அவருக்கு நம்பிக்கையில்லை. அவர்களுடைய ஓட்டுச் சீட்டுகளையெல்லாம் பெட்டியில் போடாமல் வெளியே கொண்டுவரச் சொல்லிவிட்டார். வெளியே வந்த இந்தச் சீட்டுகளையெல்லாம் திரட்டி நம்பிக்கையான இன்னோர் ஓட்டரிடம் கொடுத்து, ஒரே கொத்தாய்த் தமது பெட்டியில் கொண்டுபோய்ப் போடச் செய்தார்!

—டி. ஆர். எம்., (மெட்ராஸ் மெயில்)

இப்போது நடந்து முடிந்த யுத்தம் வருமுன் என்ன நடந்தது? ஸ்பெயினிலே, அச்சு நாடுகளுக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் ஒரு பலாபலப் பரிட்சை நடந்தது. அச்சு நாடுகள் பகிரங்கமாகக் கலகக்கார பிராங்கோவுக்கு ஆள் பலமும் ஆயுத பலமும் உதவின. ஐக்கிய நாடுகள், சோஷலிஸ்டு சர்க்காருக்கு இப்படிப் பகிரங்க உதவி செய்யாவிட்டாலும், மறைமுக ஆதரவு அளிக்கத்தான் அளித்தன. ஸ்பெயின் போர்க்களத்திலே, அச்சு நாடுகளின், ஆயுதங்களும் படைப் பயிற்சியும் ஐக்கிய நாடுகளின் ஆயுதங்களும் படைப் பயிற்சியும் பரீட்சை செய்யப்பட்டுப் பெரிய யுத்தத்

துக்கு ஒத்திகை பார்க்கப்பட்டன என்றுகூடச் சொல்லலாம். இன்று இரானும் சீனவும் இப்படி ஒத்திகைப் போர்க் களங்களாய்த்தான் ஆகி வருகின்றனவோ?

சென்ற இரண்டு உலக யுத்தங்களும் ஒன்றுக்குமேல் ஒன்று பயங்கரமாய் நடந்து உலக மக்களை யெல்லாம் நிலைகலங்கித் தவிக்கச் செய்துவிட்டன. உலகம் முழுவதுமே ஒரு யுத்தகளம் போல் துன்பத்தில் உழன்று துடித்து விட்டது. இப்படியிருக்க, மீண்டும் ஒரு யுத்தம் வருமோ என்று நினைக்கும் போதே, நெஞ்சம் கலங்குகிறது. வெல்ஸ் போன்ற தீர்க்கதரிசியும், ஜோட் போன்ற தத்துவதர்சியும், 'அடுத்த யுத்தம் வருமானல், மனிதப் பூண்டே சர்வ நாசம் அடையவேண்டியது தான்' என்று எச்சரிக்கிருர்கள். இந்த நிலையில், ஜயித்த வல்லரசுகள், இப்போதே அதிகாரச் சதுரங்கம் ஆடி வருவது, பெரிய அபசகுனமாகும். யுத்தம் நடக்கும்போது, அவை சொன்ன உன்னத தத்துவங்களெல்லாம் எங்கே போயின? உலக நாடுகளெல்லாம் தத்தமக்குள் சுதந்தரமாய், பொதுவிலே ஒரு கூட்டுறவாய், புதுவாழ்வு வாழ வழி என்ன?

நாட்டை நாடு அடிமைப் படுத்திச் சுரண்டும் ஏகாதிபத்திய வெறி தொலைந்து, சிறியதும் பெரியதும், வலுத்ததும் இளைத்ததும் சமபங்காளிகளாய்க் கூடிய சர்வதேச அரசாங்கம் ஒன்று ஏற்பட மார்க்கம் என்ன? உலகத்துக்கே தலைமை தாங்குவதாய் இறுமாந்திருக்கும் பிரிட்டன், அமெரிக்கா, ருஷ்யா இந்த மூன்று வல்லரசுகளும் முதலில் தங்களுக்குள்ளே ஒற்றுமைப் படவேண்டுமானல், பிற நாடுகள் எவற்றிலும் தாங்கள் நுழைந்து சதுரங்க மாடாமல் ஒதுங்க வேண்டும். அந்த அடையாளத்தை இதுவரையில் காணேம்.

✲

## குரங்கு மனிதன்

ஏரோப்பிளேனை ஆதியில் செய்தவர்களின் ஞானம், தீரம், உறுதி இவைகளைப் பார்க்கையில், அவர்கள் மகா வீரர்களாய்த் தோன்றுகிருர்கள். இன்றே குண்டுகள் போடவும், நிராயுத பாணிகளான மக்களை நசுக்கிச் சித்திரவதை செய்யவும், அது உபயோகமாகிறது. ஒரு நாவலாசிரியர் சொல்வதுபோல, 'தற்கால யுத்தம் எந்தக் கதிக்கு வந்திருக்கிறது? குழந்தை குட்டிகளை இழுத்துக் கொண்டு தலை தெறிக்க ஓடுவதே இந்தக் கால யுத்தம்' இது முட்டாள்களின், அல்லது பிசாசுகளின் காரியமே யாகும். அதி மனிதன் ஏரோப்பிளேனைக் கண்டு பிடித்தான்; குரங்கு மனிதன் அதைக் கைப்பற்றிக் கொண்டுவிட்டான்.

—ஸி. .இ எம். ஜோட், (பம்பாய்க் கிரானிக்கின்.)

## பாம்பும் தவளையும்

'பாம்புக்கு முன்னல் தவளை கூத்தாடட்டும். ஆனல், பாம்பு தவளையை விழுங்காமல் பார்த்துக்கொள்' என்பது பழமொழி. அதே போல, நீ உலகத்தில் வாழ். ஆனல், கேவலம் உலகப் பற்றுள்ளவனுக இராதே.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

# காலச்சுழல்

**அநாவசிய அட்டகாசம்:** இந்திய தேசிய சேனை வீரர்களிடம் அனுதாபம் செலுத்த நாடெங்கும் கூட்டங்கள் நடந்தன. அதிகாரிகள் தலையிடாத இடங்களிலெல்லாம் கூட்டங்கள் மிக்க அமைதியாகவே நடந்திருக்கின்றன. தலையிட்ட இடங்களிலோ அநாவசியப் பொருள் சேதமும் உயிர்ச் சேதமும் ஏற்பட்டுவிட்டன. இன்று நாட்டிலே தேசிய உணர்ச்சி கொந்தளித்துக் கொண்டிருக்கும் நிலையில், இம்மாதிரி அமைதியான ஊர்வலம், கூட்டங்களிலெல்லாம் போலீஸார் குறுக்கிடுவார்களானல், வீண் கஷ்ட நஷ்டங்களை விளைப்பவர்களாவார்கள்; பேச்சுச் சுதந்தரம் என்பதும் வெறும் கேலிக்கூத்தாய்ப் போகும். கல்கத்தாவில் இரண்டு மூன்று நாள் பெரும் பயங்கரம் நடந்திருக்கிறது. பம்பாயிலும் அதைப் பின்பற்றித் தொல்லை விளைந்திருக்கிறது, நமது மாகாணத்தில் மதுரையில் இந்த அவதி நேரிட்டிருக்கிறது. அங்கங்கே சர்க்கார் இந்த விஷயங்களைப் பற்றிப் பொதுவிசாரணை நடத்த வேண்டும். இம்மாதிரி நிகழ்ச்சிகள் மீண்டும் நடக்காதபடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். உயிரிழந்த நிரபராதிகளின் குடும்பங்களுக்குக் கஷ்ட நிவாரண உதவியும் புரிய வேண்டும். சர்க்கார் இந்தக் காரியங்களைச் செய்வார்களா?

**ஜான் ஏமரி:** ஜான் ஏமரி, மாஜி இந்தியா மந்திரி ஏமெரியின் மகன். ஜான் ஏமெரி, ஜெர்மன் ரேடியோவில் யுத்த காலத்தில் ஐக்கிய நாடுகளுக்கு விரோதமாய்ப் பிரசங்கம் புரிந்து துரோகம் செய்தாராம். இது சம்பந்தமாக விசாரணை நடக்க ஆரம்பித்தது. அவர் பிரிட்டிஷ் பிரஜையல்ல, ஸ்பெயின் பிரஜையாகி விட்டார் என்று ஓர் ஆட்சேபம் கோர்ட்டிலே திடீரென்று கிளப்பப் பட்டது. விசாரணை தற்காலிகமாய் நிறுத்தப்பட்டது. ஜான் ஏமெரியின் சகோதரர் ஒருவர் ஸ்பெயினுக்கு ஓடி, அவர் ஸ்பெயின் பிரஜைதான் என்று ஸ்தாபிக்க, ருசுவெல்லாம் தேடப் புறப்பட்டார். அந்த விஷயம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இப்போது ஜான் ஏமெரி தம் மீது சாட்டப்பெற்ற குற்றங்களை யெல்லாம் ஒப்புக் கொண்டு விட்டாராம். அவருக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டு விட்டது. செல்வாக்கினல், அந்தத் தண்டனை நிறைவேற்றப்படாமல் போகலாம். நிறைவேற்றப்படவேண்டுமென்று யாரும் விரும்பத் தேவையு மில்லை. மரண தண்டனையே அநாகரிகம் என்ற கொள்கை வலுத்துவரும் இக்காலத்தில், எவருக்குமே மரண தண்டனை கூடாதுதான். ஆனல், மாஜி இந்தியா மந்திரி இச்சமயம் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று மட்டில் கூற விரும்புகிறேம். அவருடைய ஆட்சியில் இந்தியாவில், எத்தனை பெற்றேர், இன்று அவர் தவிப்பதைவிட அதிகமாய்த் தவித்திருப்பார்கள் என்பதை மட்டில், அவர் எண்ணிப் பார்த்தால் போதும். தந்தை ஏமெரிக்கு நமது மனப் பூர்வமான அனுதாபம்.

# இந்தியாவின் புரட்சி மகள்

*ஜி. வேங்கடாசலம்*

சேத்துப்பட்டில் 'கில்கிரைஸ்ட்' என்று ஒரு கட்டிடம் இருக்கிறது. ஒற்றை மாடியும் விசாலமான அறைகளும் குளிர்ச்சியான தாழ்வாரங்களும் உடைய கட்டிடம். இதுதான் அம்மு ஸ்வாமிநாதன் குடும்பத்தாருடைய சென்னை வாசஸ்தலம். 'கில்கிரைஸ்ட்' கட்டிடம் ஹாரிங்டன் ரஸ்தாவிலே இருக்கிறது. இந்த ரஸ்தா ஒரு காலத்தில் சென்னையிலே உயர்ந்த வகுப்பு ஐரோப்பியர்கள் வசிக்கும் பிரதேசமா யிருந்து வந்தது. அவர்களுக் கிடையே அந்தக் காலத்தில் இரண்டே இரண்டு சுதேசிக் குடும்பங்கள் மட்டும் புகுந்து விட்டன. அவை இந்த ஸ்வாமிநாதன் குடும்பமும் செருவாரி கிருஷ்ணன் குடும்பமும்தான். இன்று அநேக விஷயங்கள் இந்திய மயமாகி விட்டன அல்லவா; அந்த மாதிரியே பெரிதும் இந்திய மயமாகிவிட்டது இந்தப் பிரதேசமும். கிருஷ்ணனின் குடும்பம் கூட இந்தப் பிரதேசத்தை விட்டுக் கிளம்பி, அடையாருக் கருகேயுள்ள புதிய ஐரோப்பியக் காலனிக்குக் குடிபோய் விட்டது. ஆனால், ஸ்வாமிநாதனின் குடும்பமோ சேத்துப்பட்டை விடாமல் பற்றிக்கொண் டிருக்கிறது. ஜாகை 'பாஷன்' மாறுதலை, அது சட்டை செய்யவில்லை.

தந்தை ஸ்வாமிநாதன் ஒரு தமிழர். தமது காலத்தில் தென்னிந்தியாவின் தலை சிறந்த கிரிமினல் வக்கீலாகத் தொழில் புரிந்து, பெரும் செல்வம் சேர்த்தவர். அதிகமாகப் பேசமாட்டார். எப்போதும் யோசனையி லாழ்ந்திருப்பார். பாண்டித்தியம் மிகுந்தவர். தம் குடும்பத்தைவிட, சட்ட விஷயங்களிலேயே அதிக ஈடுபாடு உள்ளவர். "தமக்கு எவ்வளவு குழந்தைகள், தம்முடைய மனைவி நகரில்தான் இருக்கிறாரா, தாம் கோர்ட்டுக்கு வருமுன்னே சாப்பிட்டாரா இல்லையா என்றவிஷயங்கள் கூட, அவருக்குத் தெரியாதே" என்று சில சமயம் அவரைப்பற்றித் தமாஷாய்ச் சொல்லுவார்கள். உண்மையிலே அவர் சகல இன்பங்களையும் வெறுத்தார்; தம்முடைய தொழில் காரியாலயம், புஸ்தகங்கள், வழக்குகள் இவைகளுக்குள்ளே தான் ஓயாது உழைத்துக் கொண்டு, வாழ்ந்தார். கொஞ்சம் கூடப் படாடோபம் இல்லாதவர். திறமை மிகுந்த பாரிஸ்டர். மனச் சாட்சிக்கு விரோத மில்லாமல் கடுமையாய் உழைத்தார். வக்கீல்களுக்குள்ளே, அவருக்கு விரோதியே கிடையாது; கிரிமினல் தரப்பில் அவரை மிஞ்சியவரும் கிடையாது.

தாய் ஸ்வாமிநாதன் மலையாளத்துப் பெண். எக்காலத்தும் தம் இளமை குன்றாமல் காப்பாற்றிவரும் ரகஸ்யத்தை எப்படியோ அவர் கண்டுபிடித்திருக்கிறார். இதைக் கண்டு, காலேஜ்

**இந்திய தேசிய சேனையில் சேர்ந்து வேலை செய்த வீரப் பெண்ணான காப்டன் லட்சுமியின் வாழ்க்கைச் சரித்திரம் காதலும் வீரமும் சோகமும் நிறைந்ததாகும். இந்தக் கட்டுரை 'மை லிந்தியா'வி லிருந்து எடுக்கப் பெற்றது.**

சிறுமிக ளெல்லாம் அசர்ந்து போய்விட்டார்கள்; பணக்கார மாத ரெல்லாம் பொருமை கொண்டு விட்டார்கள். சென்ற முப்பது வருஷ காலமாக, நகரெங்கும் பொழுது போக்குச் சங்கங்களி லெல்லாம் அம்மு ஸ்வாமிநாதனைப் பற்றியேதான் பேச்சு. ஐம்பது வயதை நெருங்கியிருந்தும் இன்னமும் புதுமை பொலியக் காப்பாற்றப்பட்ட அவருடைய மேனியும் முகமும் கண்டு, இளைஞரும் முதியரும் அதிசயித்து வருகிறார்கள். வாலிப வயதிலே, அவர் ஒரு நாகரிகச் சீமாட்டி. தற்செயலாய்ச் சென்னையின் பொது வாழ்விலே, அவர் கலந்து கொண்டார். அவரை அப்படிப் பொது வாழ்வுக்கு இழுத்தவர் மாலதி பட்டவர்த்தன் (இப்போது மாலதி சௌரோஜி). ஒதுக்கமாய்ச் செல்வர்களுக்கிடையே சுக போகங்களோடு கவலையற்று வாழ்ந்த அம்மு ஸ்வாமிநாதனை, சந்தடி மிகுந்த இந்திய அரசியலுக்கு இழுத்து விட்டவர் மாலதிதான்.

ஸ்வாமிநாதனுக்கு நான்கு குழந்தைகள்: இருவர் ஆண்; இருவர் பெண். மூத்த மகன் கோவிந்தன், தந்தையைப் போலவே, பாரிஸ்டர் ஆகியிருக்கிறார். ஆனால், தந்தையைப் போல் இல்லாமல், எல்லாரோடும் கலகலப்பாய்ப் பழகுகிறார். விளையாட்டுகளில் திறமையுள்ளவர். ரேடியோப் பிரசங்கம் செய்வார். ஓரளவு சகல கலா வல்லவர். நண்பர்கள் 'சட்ஸ்' என்று அழைக்கும் சுபராம், கொஞ்சம் விசித்திர வாலிபர். அவருக்கு எதிலும் விசேஷ ஆஸ்தையோ, திறமையோ கிடையாது. கல்கத்தாவிலுள்ள ஒரு வியாபாரக் கம்பெனியில் சேர்ந்திருக்கிறார். இருவரும் லாகூர் சந்தானம் சகோதரிகளை மணந்திருக்கிறார்கள். இருவரும் ஒற்றை நாடி ஆசாமிகள்; மணந்த பெண்களோ நல்ல பருமன். ஸ்வாமிநாதனின் கடைசிப் பெண் மிருணாளினியைத் தான் எல்லாருக்கும நன்றாய்த் தெரியும். அவள் ஒரு 'மிக்கி மௌஸ்' (சுண்டெலி) போன்றவள். அவள் கற்க முயலாத வித்தையே கிடையாது. நாட்டியமாடிப் பார்த்துவிட்டாள்; நடித்தும் பார்த்து விட்டாள். கடைசியாய், தன்னுடைய சகல பிரச்னைகளையும் தீர்க்கும் பரிகாரமாக, ஒரு கோடீசுவரரை மணம் புரிந்து கொண்டுவிட்டாள்.

ஆனால், பெண்களுக்குள்ளே மூத்தவரான லட்சுமிதான், குடும்பத்திலேயே மிக்க வசீகரம் உள்ளவர்; அனைவரிலும் அருமை வாய்ந்தவர். பதினஞ்சு பதினாறு வயதா யிருக்கும் போதே, தமக்கென்று திட்டமான ஒரு பிரகாசத்தோடு, அவர் வாழத் தொடங்கினார். மலையாளத்துப் பெண்களுக்கே அலாதியாய் உள்ள ஓர் அழகு அவருக்கிருந்தது. செவந்த நிறம். நல்ல லட்சணம். பிரகாசமான கருவிழிகள். லளிதமான வாய். திரண்ட உதடுகள். புன்சிரிப்பிலே குழிந்த கன்னங்கள். ஆரோக்கியக் கட்டுள்ள தேகம். பதினேழு வயதிலே, லட்சுமி ஒரு சுந்தர கன்னிகையா யிருந்தார். பளிச்சென்ற புத்திக் கூர்மையும், குறுகுறுப்பான நடையும், பேச்சிலே மென்மையும், பழக்கத்திலே சரளமும் உள்ள அவர், தம்முடைய காலேஜ் நாட்களில் எவரையும் வசீகரம் செய்யக் கூடியவரா யிருந்தார். காலேஜ் பையன்களுக் கெல்லாம், அவரிடத்திலே விசேஷ மதிப்பு. அவர்

கம்பீரமாய் நடந்துகொள்வார்; நட்போடு நாகரிகமாய்ப் பேசுவார். இதனால், இளைஞரும் முதியரும், செல்வரும் எளியரும், ஆண்களும் பெண்களும் அவரிடம் மிக்க அன்பு செலுத்தினர்கள்.

இத்தனை யெல்லா மிருந்தும், அவர் ஒரு பிடிவாதமான பெண்; உள்ளத்திலே ஒரு புரட்சிக்காரி. வீட்டிலே செல்வ போகங்கள் நிறைந்திருந்தும், அவர் தனித்துச் சுயேச்சையாய் வாழவே விரும்பினர். தமக்கென்று ஒரு வாழ்க்கையை வகுத்துக்கொண்டு, ஏழைமக்களுக்குச் சேவைபுரிய நாட்டம் கொண்டார். இதற்காக, அவர் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்து படித்தார். பரிபூர்ண டாக்டராய்ப் பட்டம் பெற்று வெளியே வந்தார். ஆனால், விதி யாரை விட்டது? அவர் விஷயத்தில், வாலிபத்திலேயே, அது சில விபரீத லீலைகளைப் புரிந்து விட்டது. அவருக்கு இருபது வயது நிறையு முன்பே, ஓர் ஆகாய விமானியிடம் அவர் காதல் கொண்டு, விமானியை யணந்து கொண்டார். அந்த விவாகம் திருப்திகர மில்லாமல் போய்விட்டது. பெங்களூர்ப் பையனுக்கும் சென்னை யுவதிக்கும், வாழ்விலே பொருத்தம் போதவில்லை. அவர்களுடைய வாலிப இன்பக் கனவுகளெல்லாம் சிதறிப் போயின.

லட்சுமி மீண்டும் காதல் கொண்டார். கேரளத்துக் கிருஸ்தவ வாலிபரான சகோதர டாக்டர் ஒருவரை, அவர் காதலித்தார். இதனால் குடும்பத்தார் எரிந்து விழுந்தார்கள்; ஊரார் வம்பளந்தார்கள்; புருஷனே விவாக ரத்துச் செய்து கொள்ளக் கண்டிப்பாய் மறுத்துவிட்டார். இத்தனையையும் கண்டு, தானும் தன் காதலரும் சேர்ந்தாற்போல் 'ஹரகிரி' செய்துகொள்ளக்கூட, லட்சுமி ஒரு சமயம் முயற்சி செய்தார். அது பலிக்க வில்லை. அதன்மேல், அவர் மேல்நாட்டுக்கு ஓடிப் போய்விட முயன்றார். அதுவும் பலிக்க வில்லை. இதன்பின், தம் காதலருடன் போய்ச் சேர்ந்து கொள்வதற்காக, என்ன வந்தாலும் சரியென்று துணிந்து, அவர் சிங்கப்பூருக்கு ஓடிவிட்டார். சொற்ப வயதான முப்பது வருஷங்களுக்குள், அவருடைய வாழ்க்கையிலே பரவசமான காதல், சோகம், உல்லாசம், வீரச் செயல் முதலியஎல்லாவற்றையும் அவர் அனுபவித்துவிட்டார். கூச்சம் மிகுந்த, அமைதிவாய்ந்த, வசீகரமான சிறு பெண்ணயிருந்த காலத்திலே லட்சுமியைக் கண்டவர்கள், அவர் ஒரு நாள் இப்பேர்ப்பட்ட துணிச்சலும் வீரமும் காட்டுவார் என்று கனவும் கண்டிருக்க மாட்டார்கள்.

ஆனால், இன்று எங்கும் அதே பேச்சாயிருக்கும் இந்திய தேசிய சேனையிலே சேர்ந்து அதன் முக்கிய அங்கத்தினர்களில் ஒருவராய் அவர் உழைக்கத் தொடங்கியபோதுதான், அவரது உள்ளத்திலே இயல்பாய்க் கிடந்த உண்மையான புரட்சிக் கனல் வெளிப்படத் தொடங்கியது. அந்த ராணுவத்தின் பெண்கள் பகுதியான ஜான்ஸி ராணி படைக்கு அவர் தலைவியு மானர். இந்த இந்தியப் புரட்சிப் படையின் காரியங்களைப் பற்றியும், இதன் பிரதம அமைச்சரான காலஞ்சென்ற சுபாஷ் போஸின் செயல் பற்றியும், என்ன அபிப்பிராய பேதம் வேண்டுமானலும் இருக்கலாம்; இந்தியப் படையின் அதிகாரிகளில் ஏதோ சில சுயநலக்காரர்களைத் தவிர, மற்றப்

பெரும்பாலான அத்தனை பேரும், தங்கள் நாட்டுக்குச் சுதந்தரம் சம்பாதிக்க வேண்டுமென்ற மிக உன்னத நோக்கத்தால் தூண்டப் பட்டவர்களே யாவார்கள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்கமுடியாது. இந்தச் சேனையின் குண தோஷங்களையோ, இது சாதித்த காரியங்களையோ பற்றி எவரும் ஆராய்வது சாத்திய மல்ல; புத்திசாலித்தனமுமல்ல. ஏனெனில், இந்தச் சேனையைப்பற்றி நமக்குத் தெரிந்துள்ள தகவல்கள் அற்பமாகவும் ஒருதரப்பாகவும் இருக்கின்றன; தவிர, இதன் சில தலைவர்கள் மீது குற்றம் சாட்டிப் பொது ராணுவக் கோர்ட் ஒன்றின் முன்பு ஒரு விசாரணையும் நடந்து கொண் டிருக்கிறது.

ஜான்ஸிராணி படையின் தலைவியாகக் காப்டன் லட்சுமி செய்த வேலையும் ஜப்பானியருடன் அவர் புரிந்த வீரச் செயல்களும் பற்றி இன்று நாம் சொல்வதெல்லாம் வெறும் ஹேஷ்யங்களாய்த்தான் இருக்கமுடியும். அந்தப் படைக்கு ஊக்கமளிப்பதிலே, அவர் பெரும் பங்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்; அரைகுறையான பயிற்சியும் அரைகுறையான ஆயுதங்களும் பெற்று, அரைகுறையாய் வாழ்ந்து முடிந்த அந்தப் படையை, அவர் நேரே கண்காணித்து நிர்வகித் திருக்கிறார்; செஞ்சிலுவைப் படைகள், கஷ்ட நிவாரணப் படைகள், முதல் சிகிச்சைப் படைகள், அவசர வைத்திய நர்ஸுகள், நடமாடும் ஆஸ்பத்திரிகள் ஆகியவைகளை யெல்லாம் அவர் ஏற்பாடு செய்திருக்கிறார் - இந்த விஷயங்கள் அனைத்தும் இந்தியப் பொது ஜனங்களுக்கு இப்போது நன்றாய்த் தெரியும். அவர் ரேடியோவில் மிக்க திறமையாய்ப் பிரசங்கங்கள் புரிந்திருக்கிறார் என்பதும் நன்றாய்த் தெரிந்த விஷயமே.

லட்சுமி ராஜத் துவேஷம் புரிந்ததாகவோ, அந்நிய ஆட்சிக்கு விரோதமாகக் கலகம் புரிந்ததாகவோ, விசாரணை நடக்கலாம். அப்படி விசாரிக்கும் கோர்ட்டார், அவருக்கு என்ன தண்டனை விதித்தாலும் சரிதான்; உலகெங்கும் உள்ள சுதந்தரப் பிரியர்கள் அனைவரும் மட்டில், இந்தியாவின் புரட்சி மகள் என்றும் ஆசியாவின் நைட்டிங்கேல் என்றுமே அவரை வாழ்த்துவார்கள். சமீபத்திலே (நவம்பர் 5வ), பம்பாய்ப் பத்திரிகை ஒன்றில் அவருடைய டைரி பிரசுரிக்கப்பட் டிருக்கிறது. அந்த டைரி பரபரப்பூட்டத் தக்க ஒரு தஸ்தாவேஜியாகும். அதைப் படிக்கப் படிக்க மிக்க ருசியா யிருக்கிறது. 'ஜேய் ஹிந்த்!' என்பதே இந்திய தேசிய ராணுவத்துக்கும் லட்சுமிக்கும் யுத்த கோஷமா யிருந்திருக்கிறது. அதே பெயரையே, லட்சுமி தன் டைரிக்கும் சூட்டியிருக்கிறார். வாழ்க 'ஜேய் ஹிந்த்!'

✲

### மனிதனை அறிய மூன்று வழிகள்

ஒரு கடற்படை அதிகாரி சமீபத்தில் இப்படிச் சொன்னார்: "ஒரு மனிதன் எப்படிப் பட்டவன் என்று அறிய மூன்று வழிகள் உண்டு: ஒன்று - கடற்படைப் பயிற்சிக் கல்லூரியில் படிப்பது; இங்கே நான்கு வருஷத்தில் ஒரு மனிதனை அறியலாம். இரண்டு - சீட்டிலே சூதாட்டம் ஆடுவது; இங்கே நாலுமணி நேரத்தில் ஒரு மனிதனை அறியலாம். மூன்று - யுத்தகளத்தில் போரிடுவது; இங்கே நாலு நிமிஷத்தில் ஒரு மனிதனை அறியலாம்."

—எபிஷென்ஸி மகஸீன்



அவளுக்கு பெருமையே
ஆம். பெருமைப்படத்தான் செய்வாள் அவள்
அழகி, நவநாகரீகப் பெண். எல்லாவற்றிற்கும்
மேலாக அவள் தன் கணவனை வசப்படுத்தும்
ரகசியத்தை நன்கறிந்திருக்கிறாள். அந்த ரகசியம்
தான் என்ன? காலையிலிருந்து மாலை வரை வேலை
செய்து களைத்து வரும் கணவனை ஒரு கப்
நரஸூஸ் காபி அளித்து திருப்தி செயவதே.
நரஸுஸ்
'இந்திய தயாரிப்பில் தலை சிறந்தது'
INJTM.

# மங்கை

## பெண்களின் புத்தகம்

குடும்பப் பாதுகாப்பு, குழந்தை வளர்ப்பு, தையல் வேலை, சமையல், கவிதை கட்டுரை, கதைமுதலிய பல விஷயங்களுடன் வருஷத்தில் பனிரண்டு புத்தகங்கள்

பதிப்பாசிரியர்: குகப்ரியை

ஒரு புத்தகத்தின் விலை

ரூபாய் ஒன்று தபால் செலவு தனி

ஒரு வருஷத்தில் வெளிவரும் 12 புத்தகங்களுக்கும் ரூ. 12 முன் பணம் அனுப்புபவர்களுக்கு, தபால் செலவின்றி அனுப்பப்படும்

கட்டுரைகள் தேவை. வெளியிடப் பெறுபவைகளுக்கு சன்மானம் அளிக்கப்பெறும்

வெளியிடுவோர்:

**சக்தி காரியாலயம்**

ராயப்பேட்டை : சென்னை

---

1872-ல் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 73-ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மக்களால் உபயோகிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருவதுமான

மதுரை

## M. காதர் சாஹிப் & ஸன்ஸ்

—"யானை மார்க்"—

- சந்தனாதித் தைலம்
- அரைக்கீரை தைலம்
- மிளகாய்த் தைலம்

குளிர்ச்சி, கூந்தலழகு ஆரோக்கியம் தருபவை

- நாஷனல் பிளவர் டஸ்ட்

(உடுப்பு, ரிக்கார்டு பெட்டிகளில் அந்து, பாச்சை முதலிய வைகளை அணுகவொட்டாமல் பரிமள வாசனை தரக்கூடியது)

மற்றும் வாசனைப்பாக்கு, தசாங்கம், ஸ்னான பவுடர், ஊதுவத்திகள், சந்தன பில்லைகள், சந்தன பவுடர், பன்னீர் வகையராக்களும் கிடைக்கும்.

சரக்குகள் வாங்கும்பொழுது எமது 'யானை' டிரேட் மார்க்கை கவனிக்க கோருகிறோம்.

M. KHADER SAHIB & SONS.,

MANUFACTURING PERFUMERS : : MADURA

# பிரிவி கவுன்ஸில் அப்பீல்

சட்டமாணவன்

பிரிவி கவுன்ஸில் என்று சொன்னால், கடைசி அப்பீல் செய்யும் முடிவான கோர்ட் என்றுதான் நம்மில் பெரும்பாலோர் நினைப்போம். அது கடைசி அப்பீலை விசாரிப்பது வாஸ்தவம். ஆனால், பிரிவி கவுன்ஸில் இந்த ஒரு காரியத்துக்காக மட்டுமே ஏற்பட்டதல்ல. தவிர, பிரிவி கவுன்ஸிலர்கள் அத்தனை பேரும் சேர்ந்த சபையும் அந்த அப்பீல் கோர்ட்டாய் அமைவதில்லை. இந்தப் பிரிவி கவுன்ஸில் எப்படி ஆரம்பித்தது, எவ்வாறு வேலை செய்கிறது, என்னென்ன காரியங்களைக் கவனிக்கிறது, இதற்கும் இந்தியாவுக்கும் உள்ள சம்பந்தங்கள் என்ன என்ற விவரங்கள் ருசிகரமானவை யாகும்.

பிரிட்டனுக்குப் பெரிய சாம்ராஜ்யம் ஏற்படாமல், ஒன்றிரு சிறு தீவுகள் மட்டுமே சொந்தமாயிருந்த மிகப் பழமையான காலத்திலேயே, பிரிவி கவுன்ஸில் தோன்றிவிட்டது. ஆனால், அப்போது, பிரிட்டிஷ் மன்னருக்கு ஆலோசனை சொல்லும் ஒரு சபையாகவே, அது இருந்து வந்தது. முதல் எட்வர்ட் மன்னரின் பிரிவி கவுன்ஸில்தான், தற்போதைய பிரிவி கவுன்ஸிலின் தந்தை என்று சொல்லுகிறார்கள்.

*பிரிவி கவுன்ஸில் என்பது என்ன? அது எப்படி வேலை செய்கிறது? இந்தியாவிலிருந்து எந்த வழக்குகளில் எந்த நிலைமைகளில் அப்பீல் செய்து கொள்ள முடியும்? கிரிமினல் வழக்குகளில், பிரிவி கவுன்ஸிலே அப்பிலுக்கு அனுமதி கொடுப்பதுண்டா? இந்த விஷயங்களை விளக்குகிறது இந்தக் கட்டுரை.*

இன்று பிரிவி கவுன்ஸிலர்களின் தொகையை இவ்வளவுதான் என்று திட்டமிட்டுச் சொல்லமுடியாது. ராஜ குடும்பத்தினர்களெல்லாம் பிரிவி கவுன்ஸிலர்கள் தான். பிரிட்டனின் தற்போதைய மந்திரிகள், மாஜி மந்திரிகள், ஆர்ச்பிஷப்புகள், லண்டன் பிஷப், ராஜாங்கத்துப் பெரிய அதிகாரிகள், லார்டு சான்சலர், காமன்ஸ் சபைத் தலைவர், கடற்படைத் தலைவர், காலனிகளின் பிரதம மந்திரிகள் ஆகியவர்கள் அனைவரும் பிரிவி கவுன்ஸிலர்கள்தான். இவர்களைத் தவிர, ஏகாதிபத்தியத்துக்குச் சிறந்த சேவை செய்த பலருக்குக் கௌரவப் பட்டமாகவும், பிரிவி கவுன்ஸிலர் என்ற பெயரை, பிரிட்டிஷ் மன்னர் அளிக்கிறார். பிரிவி கவுன்ஸிலுக்கு அதிகார பூர்வமான தலைவர், லார்டு பிரஸிடெண்ட் என்ற மந்திரிதான். பிரிவி கவுன்ஸிலர்களுடைய பெயர்களுக்கு முன்னே 'மகாகனம்' (ரைட் ஆனரபிள்) என்ற கௌரவப் பட்டத்தைச் சேர்த்தே அழைப்பார்கள்.

பிரிவி கவுன்ஸில் பூராவும் கூடி, எந்த விவகாரத்தையும் கவனிப்பது வழக்கமில்லை. பிரிவி கவுன்ஸிலுக்குப் பற்பல கமிட்டிகள் உண்டு. ஆனால், அந்தக் கமிட்டிகளில் பெரும்பாலானவை கூடுவதே அபூர்வம். பிரிவி கவுன்ஸிலின் வியாபார போர்டு என்ற கமிட்டியை இதற்கு உதாரணமாய்ச் சொல்லலாம். பிரிவி கவுன்ஸிலின் மிக முக்கியமான கமிட்டி, நீதி பரிபாலனக்

கமிட்டிதான். சட்டம் படித்த லார்டுகள், மாஜி ஜட்ஜிகள் ஆகியவர் மாத்திரமே இந்தக் கமிட்டியில் இருப்பார்கள். இந்தியா, டொமினியன்கள், காலனிகள் ஆகியவற்றிலிருந்து வரும் வழக்குகளின் முடிவான அப்பீலை, பிரிவி கவுன்ஸில் விசாரித்து முடிவு செய்யும். பிரிவி கவுன்ஸிலின் அப்பீலுக்கு மேலே வேறு அப்பீலே கிடையாது.

இந்தியா, பர்மா, காலனிகள் ஆகியவைகளிலே உயர்ந்த ஜட்ஜி பதவி வகித்து அனுபவம் பெற்ற சிலரும், பிரிவி கவுன்ஸிலின் நீதிபரிபாலனக் கமிட்டியில் நியமிக்கப் படுகிறார்கள். இந்தக் கமிட்டியில் எப்போதுமே ஓர் இந்தியர் இருந்துவர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. தற்போது இந்தக் கமிட்டியில் உள்ள இந்தியர் ஸர் மாதவன் நாயர்.

இந்தப் பிரிவி கவுன்ஸிலே ஏகாதியத்தியத்தின் முடிவான அப்பீல் கோர்ட்டாயிருப்பது, சில குடியேற்ற நாடுகளில் உள்ள பலருக்குப் பிடிக்கவில்லை. ஏகாதிபத்தியத்துக்கு உட்பட்ட சகல நாடுகளும் சம பங்காளிகள் என்றால், லண்டனில் பிரிவி கவுன்ஸில் இருப்பது ஏற்றத் தாழ்வைக் காட்டுவதல்லவா? இதுதான் அவர்களது அதிருப்திக்குக் காரணம். கானடா நாட்டிலிருந்து இப்போது பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்து கொள்வதே கிடையாது. கானடாவில் இப்போது கானடாவுக்குச் சொந்தமாய்த் தனியான பிரிவி கவுன்ஸில் இருக்கிறது. தவிர, பிரிட்டனுக்குள்ளே வரும் வழக்குகளின் கடைசி அப்பீலை, இந்தப் பிரிவி கவுன்ஸில் விசாரிப்பதில்லை. அதை லார்டுகள் சபையின் ஒரு கமிட்டிதான் விசாரிக்கும்.

இந்தப் பிரிவி கவுன்ஸில் சொல்லும் முடிவு ஒரு ஜட்ஜ்மெண்ட் ரூபத்தில் இருக்காது; மன்னருக்கு ஆலோசனை சொல்லும் ஓர் அபிப்பிராய ரூபத்தில்தான் இருக்கும். "மாட்சிமை தங்கிய மன்னருக்கு நாங்கள் வணக்கமாகச் சொல்லும் ஆலோசனை யாவது" என்றே அதன் வாசகம் தொடங்கும். இது சம்பிரதாயம்; அவ்வளவுதான். மன்னர் இந்த ஆலோசனையை நிராகரிக்கும் வழக்கமே இப்போது கிடையாது. இந்த ஆலோசனை ஒரு தீர்ப்பைப் போலவேதான் நடவடிக்கைக்கு வரும். பிரிவி கவுன்ஸில் போர்டாருக்குள்ளேயே அபிப்பிராய பேதம் ஏற்பட்டால் என்ன செய்வது? பெரும்பான்மையோரின் அபிப்பிராயமே முடிவானதாகும். எதிரிடையான இரண்டு வித அபிப்பிராயங்களை மன்னருக்குத் தெரிவிக்கக் கூடாதாம். ஆகையால், சிறுபாலோரின் அபிப்பிராயம், போர்டாரின் ஆலோசனையில் குறிக்கப்படுவதே யில்லை. ஆகையால், பிரிவி கவுன்ஸிலில் அபிப்பிராய பேதமுள்ள சிறுபான்மை ஜட்ஜிகள் என்றுமே மௌனமாயிருக்க வேண்டியதுதான்.

பிரிவி கவுன்ஸிலுக்கு வரும் வழக்குகள் அநேக சமயங்களில் மிக்க விசித்திரமாயிருக்கும். ஒரு சமயம் ஸ்வாஜிலாந்து என்னுமிடத்திலிருந்து ஒரு வழக்கின் அப்பீல் பிரிவி கவுன்ஸிலுக்கு வந்தது. மலைஜாதியார் மூன்று பேர் மீது ஒரு கொலை வழக்கு. நிரபராதியான ஒரு மனிதனை அவர்கள் கொன்றுவிட்டார்களாம். எதற்காக? பயிர் நன்றாய் விளைவதற்குக் களப்பலி

யாகவே இப்படிக் கொலை செய்களாம். கொலையைச் செய்துவிட்டு, தங்கள் ஜாதியைச் சேர்ந்த ஒரு வைத்தியரிடம் போய், தாங்கள் சுத்தம் பெற என்ன செய்யவேண்டும் என்று ஆலோசனை கேட்டார்களாம். கன்னிப் பசுங் கன்று ஒன்றைக் கொன்று, அதிலிருந்து சில மாமிசப் பகுதிகளை உண்டால், சுத்தம் ஏற்பட்டுவிடும் என்று அவர் சொன்னாராம். இதெல்லாம் அதிகாரிகளுக்குத் தெரிந்து, கொலை வழக்குத் தொடர்ந்தார்கள். எதிரிகளுக்கு மரண தண்டனையும் விதிக்கப்பட்டது.

ஸ்வாஜிலாந்திலுள்ள பிரிட்டிஷ் கோர்ட்டார், சுதேசி மாமூல்களைப்பற்றி அறிந்து கொள்வதற்காக, அஸெஸர்கள் நியமித்துக் கொள்ள வேண்டும். இந்த அஸெஸர்களின் ஆலோசனையைக் கேட்டுக்கொண்டே, கோர்ட்டார் பிரஸ்தாப வழக்கில் தீர்ப்புச் சொன்னார்கள். என்றாலும், அந்த அஸெஸர்களின் ஆலோசனை பகிரங்கமாகக் கேட்கப்படவில்லையாம். நீதிவிசாரணை பகிரங்கமாய் நடக்கவேண்டும் என்ற தத்துவத்துக்கு இதனால் பங்கம் நேர்ந்துவிட்டது என்று பிரிவி கவுன்ஸில் முடிவு செய்துவிட்டது. தண்டனையும் ரத்தாகிவிட்டது.

இனி; இந்தியாவிலிருந்து எந்த நிலையில் பிரிவி கவுன்ஸிலுக்கு ஒரு வழக்கில் அப்பீல் செய்து கொள்ளலாம் என்பதைப் பார்ப்போம். இந்தியாவின் மிக உயர்ந்த ஓர் ஹைகோர்ட் தீர்ப்பின்மேல் தான், பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். அதற்குப் பின்வரும் மூன்று நிபந்தனைகளில் ஒன்று தேவையாகும்: (1) வழக்குக்கு வந்துள்ள விஷய மதிப்பு, வெவ்வேறு பிரதேசங்களில் வித்தியாசப் படுமானால், அப்பீல் உரிமை தானாகவே உண்டு; (2) வழக்கு விஷயம் பொதுஜனங்களுக்கு மிக்க முக்கியமும் அக்கறையும் உள்ளது என்று ஸ்தல ஹைகோர்ட்டார் கருதி, அப்பீல் செய்ய விசேஷ அனுமதி கொடுத்தால், அப்பீல் செய்து கொள்ளலாம்; (3) பிரிவி கவுன்ஸில் கமிட்டியிடமே அப்பீலுக்கு அனுமதி பெற்றும் அப்பீல் செய்துகொள்ளலாம்.

என்றாலும், கிரிமினல் வழக்குகள் சம்பந்தப்பட்ட மட்டில் ஒரு சம்பிரதாயம் வெகுகாலமாக இருந்து வருகிறது. அதாவது, பொதுவாய், கொடுங் குற்றங்கள் சம்பந்தப்பட்ட கிரிமினல் வழக்கு அப்பீல்களைப் பிரிவி கவுன்ஸில் விசாரிக்க விரும்பவில்லை. "நாங்கள் கிரிமினல் அப்பீல் கோர்ட்டாக இங்கே உட்கார்ந்திருக்க வில்லை" என்று லார்டு டனெடின் என்ற பிரிவி கவுன்ஸில் ஜட்ஜி அடிக்கடி கூறியிருக்கிறார்.

கிரிமினல் வழக்குகளில் ஸ்தல ஹைக் கோர்ட்டார் விசேஷ அனுமதி கொடுத்தால் தான், அப்பீலைப் பிரிவி கவுன்ஸில் ஏற்பது வழக்கம். அந்த வழக்குகளில், தானே நேரே அப்பீல் அனுமதிகொடுப்பது பிரிவி கவுன்ஸிலின் வழக்கமில்லை. ஆகையால், ஒரு கிரிமினல் வழக்கில், பிரிவிகவுன்ஸிலுக்கு அப்பீல் செய்து கொள்ள விசேஷ அனுமதி தர, ஸ்தல ஹைக்கோர்ட்டார் மறுத்துவிட்டால், அப்பீல் ஆசை இனி முடிந்தது என்று தான் கொள்ளவேண்டும்.

✱

# தூரத்துப் பச்சை

தி. ஜ. ர.

பரந்த இந்தத் தமிழ்நாட்டில் ஒரே ஒரு ரசிகர் கிடையாதா என்று வெகுநாளாய் நான் வருத்தப் பட்டுக்கொண்டிருந்தேன். 'இதோ இருக்கிறேனே' என்று ஒரு கடிதமூலம் அவர் (அப்படிப் பட்ட ஒரு ரசிகர்)தமது இருப்பை எனக்கு நிரூபணம் செய்தார். 'ரஸிகர் என்ருல் யார்?' என்று நீங்கள் கேட்கக் கூடும். என் கதை கட்டுரைகளைப் புகழ்பவர் தான் எனக்கு ரஸிகர். அவற்றை இகழ்பவரோ, அலட்சியம் செய்பவரோ யாராவது இருந்தால், அவர்களெல்லாம் அரஸிகர் என்பது எனது திடமான தீர்மானம்.

அப்போது ஒரு முக்கியப் பத்திரிகையில், என் கட்டுரைகளுக்கு அக்ரஸ்தானம் இருந்து வந்தது. எங்கேயோ ஒரு கிராமத்தில் இருந்துகொண்டிருந்த அந்த நண்பர், என் கட்டுரைகளை விடாமல் படித்துவந்திருக்கிருர். "வாரத்துக்கு வாரம் ஓயாமல் முதல்பக்கத்திலே எழுதுகிருனே; இவன் ஏதோ பெரிய ஆசாமியாய்த்தான் இருக்கவேண்டும்" என்று அவருடைய மூளை வேலை செய்திருக்கிறது. எழுதினர் ஒரு கடுதாசி. அதிலே என்னை ஆகாய மளாவப் புகழ்ந்துவிட்டார்.

எதிர்பாராத அந்தக் கடிதத்தைப் படித்துப் படித்து, நான் இறும்பூதெய்தினேன். அந்த மனிதர் பெரிய ரஸிகர் என்று நான் களித்தேன். இருவரும் பரஸ்பரம் கடிதங்கள் பரிமாறிக் கொண்டோம். அவருடைய உருவம் பேச்சு, நடை, உடை, பாவனைகளை யெல்லாம் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று, நான் ஒரு தினுசாக உருவகம் செய்து கொண்டேன். என்னைப்பற்றி அவரும் ஏதோ இதே மாதிரியே கற்பனை செய்துகொண்டிருந்திருக்கிருர். நண்பரின் மனோராஜ்ய 'தி. ஜ. ர'வுக்கு முதிய தோற்றமும் பூஜிதமான மீசை தாடிகளும் இருந்திருக்குமெனத் தோன்றுகிறது. கடைசியில், நிஜமான 'தி. ஜ. ர'வை அவர் சந்தித்தார். அப்போது இருவரும் திடுக்கிட்டோம்; இருவரும் மயக்கம் தெளிந்தோம். நிஜ 'தி. ஜ. ர' தாடி மீசை இல்லாத சாமான்ய ஆசாமி என்பதை அவர் அறிந்தார். அந்த ரஸிகர் வந்தால் கலை, இலக்கியங்களைப் பற்றிய அருங் கருத்துக்களைப் பளிச்சுப் பளிச்சென்று பரிமாறிக் கொள்ளும் அருமையான சம்பாஷணை விருந்துகளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த 'தி. ஜ. ர'வும் ஏமாந்தார். இப்போது, நான் அவருக்கு 'நம்ம தி. ஜ. ர. தானே' ஆகிவிட்டேன். நானும் அவரை ரஸிகர் பீடத்திலிருந்து இறக்கிவிட்டேன். தாட்சண்யமென்ன இதில்?

**'தூரத்துப் பச்சை கண்ணுக்கு இனிமை' என்பது ரொம்ப உண்மை.** காலமும் தூரமும் பிரித்து வைத்த சங்கதிகளுக்கே

'தூரத்துப் பச்சை கண்ணுக்கு இனிமை' என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. அதிலே ஒரு பெரிய மனோ தத்துவம் இருக்கிறது. 'தூரத்துப் பச்சை' யை எல்லாரும் பரிகசிக்கிருர்கள், என்ருலும், எல்லாருக்குமே அது 'கண்ணுக்கு இனிமை' யாய்த் தான் இருக்கிறது. என்ன காரணம்?

தனி மதிப்பு. ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் பத்துத் தலையோடு ஒரு மனிதன் இருந்தான் என்றால் கூட, நம்மால் நம்ப முடிகிறது. நம் காலத்தில், நமது ஊரில்தான் அதிசயங்கள் எதுவும் நடக்க முடியாது; புனிதமான எதுவும் இருக்க முடியாது; பெரிய மனிதன் எவனும் ஆக முடியாது. நமக்கு எதிரே இருக்கிற மனிதனுக்கும் நம்மைப்போலவே, கை, கால், தலை எல்லாம் இருக்கிறது; நம்மைப்போலவேதான் அவனும் நடக்கிறான், பேசுகிறான், சாப்பிடுகிறான், தூங்குகிறான். இதையெல்லாம் நேரே நம் கண்ணாரக் கண்ட பிறகும், அவனிடம் ஏதோ விசேஷமிருக்கிறதென்று நம்மால் எப்படி நம்ப முடியும்? முடியவே முடியாது. தமிழ் நாட்டுத் தலைவர் என்றால், நமக்குப் 'புழக்கடைப் பச்சிலை'. கல்கத்தா, பம்பாய்த் தலைவர்கள் என்றால், இங்கிருந்தபடியே கன்னத்தில் போட்டுக் கொள்ளத் தயார். நம் வ. வெ. சு., பாரதி, ராஜமையர், சிதம்பரம் பிள்ளை என்றால், நாம் தயா தாட்சண்யமாய்த்தான் மதிப்புச் செலுத்துவோம். வட நாட்டு 'இந்திய ஸ்காட்டு, இந்திய ஷேக்ஸ்பியர், இந்திய ஷெல்லி' களிடமோ நமக்கு அபார பக்தி.

எனக்கு நெருங்கிய நண்பரான ஒரு பிரசுரகர்த்தரிடம் ஒருசமயம் பேசிக்கொண்டிருந்தேன். ஏதாவது புஸ்தகம் எழுதிக் கொடுக்கும்படி, என்னை அவர் தொல்லைப் படுத்திக்கொண்டேயிருந்தார் என்ன புஸ்தகம் எழுதுவது? லெனின் சரித்திரம், ஸ்டாலின் சரித்திரம், ரூஸ்வெல்ட் சரித்திரம், ஸன் யெட்ஸன் சரித்திரம் - எதையாவது எழுதலாமே என்று அவர் யோசனை சொன்னார். இந்த வேலைதான் இப்போது வெகு மும்முரமாகப் போட்டி போட்டுக் கொண்டு நடந்து வருகிறதே? உலகோத்தமர்கள், உலக வீரர்கள், உலக சம்பவங்களைப்பற்றி, நம் நாட்டார் தெரிந்து கொள்ளவேண்டியதுதான்; இல்லையென்று சொல்ல முடியாது ஆனால், நம்முடைய ஐதிகங்களை அஸ்திவாரமாகக் கொண்டு, நமது சுபாவத்துக் கிசைந்த வளர்ச்சி பெற உதாரண புருஷர்களாய்க் கொள்ளத்தக்க இந்திய உத்தமர்கள், தலைவர்கள், வீரர்களைப் பற்றி, விஸ்தாரமாய் விளக்கும் புஸ்தகங்கள் வேண்டாமா? இதை நான் நண்பரிடம் கேட்டேன்.

"ஓ! உங்கள் இன்ன தலைவரைவிட ஒரு ஸன்யெட் ஸன்னின் வாழ்வு எத்தனையோ வீரச்செயல்களும் ஆச்சர்யமும் நிறைந்ததாயிற்றே!" என்று அவர் அலட்சியமாய்க் கூறினர்.

"பலாத்காரமே வீரமென்றால், அத்தகைய வீரச்செயல்களிலும், ஆச்சர்ய சம்பவங்களிலும், எங்கள் ஒரு வ. வெ. சு., ஒரு சவர்க்கார், ஒரு பகத்சிங் முதலியவரது வாழ்வு எந்த விதத்திலும் குறைந்ததல்ல. அவர்களின் வாழ்க்கை ரகசியங்களில் எவ்வளவோ ஆச்சர்யங்கள் வெளிவரவில்லை. காந்திஜியின் இயக்கத்தினால் முன்னணிக்கு வந்த ராஜாஜி போன்றோரின் தனிப்பட்ட வாழ்க்கையில் நடந்துள்ள சில சிறு சம்பவங்கள், அவர்களது இணையற்ற தீரத்தையும், அறிவுப் பிரகாசத்தையும் காட்டக் கூடியனவாயிருக்கின்றனவே; அவற்றையெல்லாம் திரட்டிக் கோவை செய்து எழுதினால்தான் ருசியாயிராதா?" இதுதான் என் பதில்.

"யார் இதை யெல்லாம் சேக ரித்து எழுதுவது?,"

"அந்த ஆளைக் கண்டு பிடிப் பதுதான் உங்கள் மாதிரி பிரசுர கர்த்தர்களின் வேலை" என்று சொல்லி நான் நகர்ந்தேன்.

தூரத்தால் பிரிந்த கதைகளிலும் மனிதர்களிடமும் மட்டி லுமே நமக்கு இப்படிப் பிரேமை என்று நினைக்க வேண்டாம். காலத்தால் எட்டிப்போன சங் கதிகளிலும் இப்படித்தான் பிரேமை இருக்கிறது. மைக்கேல் ஆஞ்சலோ என்ற மகா பிரபல மான இத்தாலிய சிற்பி, ஒரு கலா சாலையில் பயின்றுகொண் டிருந் தார். அந்தக் காலத்துக் கலா ரஸிகர்க ளெல்லாம், அதற்கும் முந்திய பண்டைக் காலக் கலைப் பொருள்களையே புகழ்ந்து கொண் டிருந்தார்கள்; புதிது எதுவானாலும் அதைத் தூஷித்து வந்தார்கள். ஆஞ்சலோ ஒரு யுக்தி செய்தார். அருமையான ஒரு சிற்பத்தைச் செதுக்கினார். அதன் ஒரு கையை மாத்திரம் வெட்டி எடுத்துக் கொண்டார். கை போன சிலையை, ஊருக்குப் புறம்பாக யாருமறியாமல் ஓர் இடத்தில் பூமிக்குள் புதைத்து விட்டார். கொஞ்ச நாளைக்கெல் லாம் சில வேலையாட்கள் தற் செயலாய் அந்த இடத்தில் மண் வெட்டியபோது, இந்தச் சிலை அகப்பட்டது. கலா ரசிகர்க ளெல்லாம் இதை ஏதோ ஒரு புராதனச் சிலையென்று நினைத்து, 'ஹா! ஹூ!' என்று புகழ்ந் தார்கள். ஆஞ்சலோ தம்மிடம் இருந்த கையைக் காட்டி, தாமே அதைச் செதுக்கியவன் என்று நிரூபித்தபோது, அந்தக் கலா ரசிகர்க ளெல்லாம் திணறிப் போய்விட்டார்கள்.

பழமையையும் வெளி நாக ரிகங்களையும், நாம் என்ன பிர மாதமாய் வெளுத்தாலும் சரி தான்; நம்மையும் மீறிப் பழமைப் பிரேமையும் தேசாந்தர சங்கதி களில் நம்பிக்கையும், நமக்கு உண்டாகத்தான் உண்டாகின் றன. காரணம் என்ன? அது தான் காலத்தின் ரகஸ்யம்; வெளி யின் ரகஸ்யம். 'வெட்ட வெளி தன்னை மெய்யென் றிருப்போர்க் குப் பட்டய மேதுக்கடி - குதம் பாய், பட்டய மேதுக்கடி?' என்ற பெரிய வேதாந்த ரகஸ்ய மும் இதில்தான் அடங்கியிருக் குமோ, என்னவோ! நமக் கென்ன தெரிகிறது!

*

### படேலிடம் கிலி

சர்தார் வல்லபாய் படேல், ஜில்லா பிளீடராக இருந்தபோது, கோர்ட் அதிகாரிகளுக் கெல்லாம் அவரிடம் பெரும் கிலி. கிரிமினல் சட்டத்திலே அவர் அவ்வளவு நிபுணர். அதிகாரிகளின் குற்றங்களை லேசில் விட மாட்டார்.

இவருக்குப் பயந்து, போர்ஸாத் ரெஸிடெண்ட் மாஜிஸ்திரேட் ஒரு வர், தமது கோர்ட்டை ஆனந்து என்னுமிடத்துக்கு மாற்றிக் கொண்டார். வல்லபாயும் அமைதியாக, ஆனந்துக்குக் குடியேறினர். ஆனால், மாஜிஸ்திரேட் தமது கோர்ட்டை மீண்டும் போர்ஸாதுக்கு மாற்றிக் கொண்டு விட்டார்!

—யூஸுப் மேஹர் அலி, (பம்பாய்க் கிரானிக்கிள்)

# கோணல் பல்

க. எம். ஜான்ஸ்டன், எம். டி.

கோணல் பல் முளைப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவைகளை ஆராய்வோம்.

குழந்தைப் பருவத்தில் முதலில் முளைக்கும் பற்களிலே சில பற்கள், தள்ளித் தள்ளி வந்து அதிக இடத்தைப் பிடித்துக் கொள்ளுகின்றன. பின்னல், முளைக்கும் பற்களுக்கு இடம் போதாமல் போகிறது. அவை தான் கோணல் பற்க ளாகின்றன.

கோணல் பல் முளைப்பதற்கு மிக முக்கியமான ஒரு காரணம், சிறு வயதில் நாம் கைக்கொள்ளும் யோசனையற்ற சில துர்ப் பழக்கங்கள் தான். அந்தத் துர்ப்பழக்கங்களால், தாடையில் திரும்பத் திரும்ப அமுக்கம் ஏற்படுகிறது. முளைக்கும் பற்கள் நிலை தவறுகின்றன.

சில சிறுவர்கள் எப்போதும் தாடையில் கையைக் குத்திக் கொண்டு உட்கார்ந் திருப்பார்கள்; அல்லது, கன்னத்தைக் கைக்குள் புதைத்துக்கொண்டு, குப்புறக் கிடந்து படித்துக் கொண் டிருப்பார்கள்.

தாய்மாரும் ஒரு தவறு செய்வதுண்டு. சிசுக்களை அவர்கள் எப்போதும் கவிழ்த்துப் போடுவார்கள். இதனல், தலையணையிலோ, மெத்தையிலோ, மோவாய்க் கட்டை பலமாய் அழுந்துகிறது.

**கோனல் பல், மனிதர்களின் முக லட்சணத்தையே கெடுத்து விடுகிறது. தாய்மார்கள் மட்டில் ஜாக்கிரதையாய் இருந்தால், பெரும்பாலும் கோணல் பல் கோரத்தைத் தடுத்து விடலாம். அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டிய எச்சரிக்கைகளைச் சுட்டிக்காட்டும் இந்தக் கட்டுரை 'நல்வழி' யில் காணப்படுகிறது.**

குழந்தையை இப்படித் தான் கிடத்த வேண்டும் என்று சில டாக்டர்களும் சொல்லுவார்கள். எதற்காக என்றால், நீங்கள் பக்கத்தில் இல்லாத சமயத்தில், அதற்குத் தொண்டையில் கக்கல் எதுவும் வந்து விக்கிக் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனல், குப்புறக் கிடத்தினல் தலையணையில் தலையின் பக்கம் படும்படியாகக் கிடத்த வேண்டுமே தவிர, ஒரு போதும் தாடை படத்தக்க விதமாக அல்ல. இந்த விதத்தில் ஏற்படும் அமுக்கம், குழந்தையின் மெல்லிய முக எலும்புகளுக்கும் தாடைகளுக்கும் பெருந் தீங்கு செய்யக் கூடிய தாகும்.

இரண்டாவது காரணம், பால் பல்லைப் பிடுங்குவதில் உண்டாகும் விபரீதம். ஒரு பல்லை நீங்கள் பிடுங்கலாம். அப்போது அதற்கு அடுத்துள்ள பல் சிறிது சிறிதாக அந்த ஒழிந்த இடத்துக்குத் தள்ளிக்கொண்டு வரும். இதனல் அந்த இடத்துக்குரிய நிலைப் பல் முளைக்கையில், அது நெருக்கியடித்துக் கொண்டு வரவேண்டியிருக்கிறது. பின்னே அது கோணமல் என்ன செய்யும்? ஏதாவது பால் பல் வெகு காலமாக விழாமல் இருந்தாலும், வாய்க்குள்ளே இப்படி இட நெருக்கடி ஏற்படலாம்.

இவ்வளவும் போக, குழந்தையைக் கன்னத்தில் அடிப்பது கெடுதல் என்று சொல்லத் தேவை இல்லை என்று எண்ணுகிறேன். அது அக்கிரமம் என்பது வேறே விஷயம்.

நாக்குக் கடித்தலும் ஒரு காரணம். இந்தக் கடிப்பு வேலை அடிக்கடி நடந்தால், மேல் வாய்ப் பற்களும் கீழ்வாய்ப் பற்களும் ஒட்டப் பொருந்தாத காரணத்தால், அவைகளில் சில பற்கள் நேராக வளர முடியாமல் போகின்றன.

வாயினால் சுவாசித்தலும், விரலைச் சப்புதலும் கெடுதலான பழக்கங்கள். பல்லின் அடியில் உள்ள எலும்பு நல்ல நிலைமையில் இருக்காவிட்டால், இந்தப் பழக்கங்களால் தீங்கு உண்டாகலாம். அது நன்றாக இருப்பதற்குக் குழந்தையின் உணவில் கால்ஸியம், பாஸ்பரஸ், அயோடைன், வைடமின்கள் ஆகியவைபோதிய அளவு இருத்தல் அவசியம்.

இந்தக் கோணல் பல் விஷயத்தில் உடம்பின் கிளாண்டுகள் கூடச் சம்பந்தப்பட்டிருக்கின்றன; விசேஷமாக, தைராய்ட், பிட்சூயிட்டரி இந்த இரண்டையும் குறிப்பிடலாம்.

சிறு வயதில் கணை நோயாவது, ஏதேனும் எலும்புருக்கி நோயாவது வந்திருக்கலாம். அவற்றாலும் கோணல் பல் முளைக்கக் கூடும்.

வாயில் பல் அரும்புகள் அளவுக்கு அதிகமாகவோ குறைவாகவோ கட்டுவதும் ஒரு காரணம். அதிகப்படியான அரும்புகள் தான், பின்னால் குட்டிப் பற்களாகி, கோணி நிற்கின்றன.

உங்கள் வீட்டிலே யாருக்காவது கோணல் பல் இருக்கிறதா? போங்கள் உடனே ஒரு பல் வைத்தியரிடம். ஒரு வேளை அவர் அதை நேராக்க முடியலாம்.

✲

### டில்லி விசாரணைக் காட்சி

பண்டித ஜவஹர் பாரிஸ்டர் உடுப்பு அணிந்திருந்தார். இருந்தாலும், உணர்ச்சியற்ற வக்கீலாகத் தோன்றவில்லை. இன்னமும் ஜவஹராகவே, கீழ்நாட்டு மாணிக்கமாகவே, தமதுள்ள உணர்ச்சியை ஒளிக்கச் சக்தியற்றவராய்த்தான் தோன்றினார். அவர் கண்களிலே கண்ணீர் தளும்பிக் கொண்டிருந்தது. அதை அவர் அடக்கிக் கொண்டிருந்தார்.

புலாபாய் வழக்கம்போலவே உறுதியும் உரமும் தன்னம்பிக்கையும் உள்ளவராய் நின்றார்.

ஸர் டேஜ்பகதூர் மனம்புழுங்கினாலும், வெளிக்கு உக்ரமாய்த்தான் இருந்தார். பிராஸிகியூஷனின் பலவீனத்தைக் கண்டு உள்ளுக்குள்ளே சிரிப்பதுபோல் காணப்பட்டார்.

ஆனால், ஷாநவாஸ், ஷெகால், டில்லான் ஆகிய மூவரும், அமைதியாய், சுதந்தரமடைய இந்தியா கொண்டுள்ள உறுதியைச் சிந்தனையிலே கொண்டவர்களாய்த் தோன்றினார்கள்.

இந்த எதிரிகளை இவர்களுடைய உறவினர்கள் வந்து சந்தித்த காட்சியை எப்படி வர்ணிப்பேன்! நீங்கள் நம்பினால் நம்புங்கள்; நம்பாவிட்டால், போங்கள்: அந்த நேரத்திலே அங்கேயிருந்த அத்தனை பேரின் கண்களுமே சில கண்ணீர் முத்துக்களைச் சிந்திவிட்டன.

—ஜிப்ஸி, (ஓரியண்ட்)

# குருதேவர் பெருந்தன்மை

சௌந்திரம் ராமச்சந்திரன்

மகாகவி தாகூருக்குத் தனி மனிதனின் சுயேச்சையே வாழ்க்கையின் லட்சியமா யிருந்தது. மனிதன் தெய்வத்தின் அம்சம்; மனிதத்தன்மை தெய்வீகமானது. 'மனிதனை மனிதனாக நடத்து' என்று அவர் பலமுறையும் சொல்வதுண்டு. ஒரு மனிதனுக்கு மற்ற மனிதனை அடிமைப் படுத்தவோ தன் கொள்கைகளை அவன்மீது பலவந்தமாகச் சுமத்தவோ அதிகாரம் கிடையாதென்பது, அவருடைய திடமான கொள்கை. கடவுள் இயற்றிய சட்டமே யானாலும், தெய்வமே தலைவனாக வந்தாலும், கண்மூடித் தனமாகப் பின்பற்ற அவருக்குச் சிறிதும் பிடிக்காது. பகுத்தறிவுள்ள மனிதன் எதையும் அலசி, ஆராய்ந்து பார்த்து, அது தன் புத்திக்கு நியாயமென்று பட்டால் மாத்திரமே, அவன் அதை அங்கீகரிக்கலாம். பெரும்பாலோர் செய்வதால், ஒரு காரியம் நியாயமாகி விடாது; பலர் பின்பற்றுவதனால் மாத்திரமே, ஒரு தலைவனுடைய லட்சியம் சரியானதாகி விடாது. எந்தக் கொள்கையும் தர்க்கத்துக்கும் புத்திக்கும் ஒத்திருக்க வேண்டும் என்பது தாகூரின் அபிப்பிராயம். தனி மனிதனுக்கு அரசியல் சுதந்தரம் மட்டும் போதாது; சமூக, சமுதாய, ஆத்மீக சுதந்தரமும் பரிபூர்ணமாயிருக்கவேண்டும். தனி மனிதனின் வளர்ச்சிக்குத் தடையாயிருக்கும் எதையும் தகர்த்தெறிய வேண்டும் என்று அவர் சொல்லுவார்.

அவர் சொன்னது வெறும் வாய் வேதாந்தம் அல்ல. வேறு பலருக்குத் தங்கள் கொள்கைகளை மற்றவர் மாறுபேசாமல் அனுசரிக்க வேண்டும் என்ற பேரவா இருப்பதுண்டு. தங்கள் கொள்கைகளின் குண தோஷங்களைப் பிறர் ஆராய்ந்தாலும், அல்லது குறைகூறிக் கண்டித்தாலும், வந்தது அனர்த்தம்; அவர்கள் சகிக்கமாட்டார்கள். குருதேவரோ, உலகில் யாருக்கும் அஞ்சாமல், தமது அபிப்பிராயத்தை வெளியிட்டது மட்டு மல்ல; அதுபோல் நடப்பவரைக் காணும்போது-அவர்கள் தமக்கே எதிரா யிருந்தாலும் கூட - அவர்களை மெச்சிப் புகழ்ந்தார்.

தற்காலப் படிப்பு முறையில் குருதேவருக்குச் சிறிதும் நம்பிக்கை யில்லை. தம் அபிலாஷைக் கிணங்கச் சிறுவருக்கும் வாலிபருக்கும் கல்வி பயிற்றவே, அவர் 'சாந்தி நிகேதனம்,' 'விச்வ பாரதி சர்வகலாசாலை' முதலிய வற்றைத் தொடங்கினர். இதை நாம் அறிவோம். மேலே சொன்ன அவரது கொள்கையை, அவர் எப்படிக் காரியாம்சத்திலும் காட்டினர் என்பதற்கு, கீழே வருவது ஓர் உதாரணமாகும்.

**காந்திஜிக்கும் தாகூருக்கும் அபிப்பிராய பேதம். அச்சமயம் தாகூரின் விச்வபாரதியில் ஓர் அற்புத சம்பவம் நடந்தது. அந்தச் சம்பவத்தில் நேரிலே சம்பந்தப்பட்ட ஒரு முக்கியஸ்தர் நண்பர் ஜி. ராமச்சந்திரன். அவருடைய மனைவியாரின் இந்தக் கட்டுரை, அந்த உருக்கமான வரலாற்றை விவரிக்கிறது.**

விச்வபாரதி தொடங்கிய சமயம். மகாத்மா காந்தியின் 'ஒத்துழையாமை'த் திட்டத்தைப் பின்பற்றி, பல சர்க்கார்க் கலாசாலைகள், கல்லூரிகளிலிருந்து விலகிய பல மாணவர்கள், விச்வபாரதியில் சேர்ந்திருந்தார்கள். அவர்களில் பலரும் கதர் தரித்த 'காந்திப் பித்தர்கள்'. இந்தக் கோஷ்டியின் தலைவர் ஸ்ரீ. ஜி. ராமச்சந்திரன். அச்சமயம் குருதேவர் 'மாடர்ன் ரெவ்யூ'வில் 'ஒத்துழையாமை இயக்கத்'தை வெகு பலமாகத் தாக்கி எழுதியிருந்தார். அதை இந்தக் கோஷ்டியார்களால் சகிக்க முடியவில்லை. 'காந்திஜி கூறுவதே சரி; குருதேவரின் கொள்கை தவறு' என்று இவர்கள் சாதித்தார்கள். 'குருதேவர் கூறுவது தான் சரி' என்று வாதித்த கூட்டத்தின் தலைவர் காலஞ் சென்ற ஸ்ரீ. காளி மோஹன் கோஷ். இரு கூட்டத்தாருடைய வாதப் பிரதிவாதங்களும் முற்றின. வகுப்பிலும், சாப்பாட்டு விடுதியிலும், விளையாட்டு மைதானத்திலும் இது தான் பேச்சு. காரசாரமான வாதங்கள். சாந்தி நிகேதனத்தின் 'சாந்தி' குலைந்தது. புரொபஸர்கள் மூலம் இது தாகூரின் காதுக்கும் எட்டியது. அவர் ராமச்சந்திரனுக்கு ஒரு சீட்டு அனுப்பினர். இதுபோல் பயமில்லாமல் தங்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை மாணவர்கள் கூறுவது தமக்குச் சந்தோஷமே என்றும், ஆனல் உக்ரமான சச்சரவோடு மட்டும் நில்லாமல் மாணவர்களின் பொதுக் கூட்டமொன்று கூட்டி, இரு கட்சியார்களும் தங்கள் தங்கள் கொள்கைகளுக்குரிய காரணங்களை விளக்கினல் பலனுண்டென்று தாம் கருதுவதாயும், அப்படிக் கூட்டம் கூட்டினல் தாமும் அந்தக் கூட்டத்துக்கு வருவதாயும், அந்தச் சீட்டில் கண்டிருந்தது. ராமச்சந்திரனுக்குச் சிறிது தயக்கம் தான் ஏற்பட்டது. வேறு எந்தக் கலாசாலையிலாவது தலைவரின் முன்னிலையிலேயே அவரை மாணவர்கள் குறைகூற முடியுமா? அப்படிச் செய்தால், அந்த மாணவர்களுக்குத் தண்டனையோ, டிஸ்மிஸோ கைமேல் பலனய்க் கிடைக்காதா? ஆனல், குருதேவரின் வழியே வேறு.

மாணவரின் மகாசபை கூடியது. ஒருவர் பாக்கி யில்லாமல் வந்திருந்தார்கள். 'இந்தியாவின் தற்கால நிலைமையில் காந்திஜியின் திட்டம்தான் நமக்குத் தகுந்தது' என்ற ஒரு தீர்மானத்தை, ராமச்சந்திரன் பிரேரணை செய்தார். காளிமோஹன் கோஷ் அதை எதிர்த்தார். இரு கட்சியாரும் தங்கள் வாக்குச் சாதுரியம் முழுவதையும் காட்டி, உரிய காரணங்களை விளக்கி, தத்தம் கட்சியின் கொள்கைதான் சரியென்று வாதாடினர்கள். ஒருவருக்கொருவர் சளைக்க வில்லை. ஏக கரகோஷம். மாணவர்களுக்குப் பின்னே அமர்ந்து பிரசங்கங்களை மிகவும் ரசித்துக் கேட்டுக்கொண்டிருந்த தாகூரும, கர கோஷங்களில் கலந்து கொண்டார். ஓட்டு எடுக்கப் பட்டது. ராமச்சந்திரனின் கட்சிக்குத்தான் ஜயம்.

இதற்குப் பிறகு, தாம் பேச அனுமதி கேட்டார் குருதேவர். அவருடைய பேச்சில் ஆத்திரமோ அகங்காரமோ இல்லை. தர்க்க பூர்வமாய்ப் பேசினர். "இந்தக் கூட்டம் எனக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது" என்ற பீடிகையுடன், அவர் சொன்னதாவது: "உங்களுடைய மனே வளர்ச்

சிக்குத் தடையோ, புதுக் கொள்கைகளைக் கண்டு பயமோ உங்களுக்கு உண்டாகுமானால், சாந்திநிகேதனத்தின் அடிப் படையான லட்சியமே அழிந்து போகும். உங்களில் ஒவ்வொரு வருமே என் கொள்கைகளை அங்கீகரியாதவரா யிருந்தாலும், உங்களுக்குச் சாந்திநிகேதனத் தில் உரிமையுண்டு; இடமுண்டு; ரட்சணையுண்டு. இன்று உங்க ளில் ஒரு கட்சி ஜயித்ததாக எண்ணுகிறேம். ஆனால், என் மாணவர்கள் என் அரசியல் கொள்கையே முழுத் தவறென்று சிறிதும் அச்சமில்லாமல் தீரமாய் வாதிக்க முன் வந்தது, எனக்கே மகத்தான வெற்றியாகும். என் கொள்கை தவறென்று நான் ஒப்புக்கொள்ளப் போவ தில்லை. ஆனால், உங்கள மனதில் நியாய மாகத் தோன்றும் ஆட்சேபங் களை வெளியிட்டுச் சொல்லும் தைரியம் உங்களுக்கு இருக்க வேண்டும் என்பதே என் ஆசை. இந்தத் தைரியத்தையும் சுதந் தரத்தையும், சாந்திநிகேதனம் என்றும் உங்களுக்கு அளிக்கு மாக!''

குரு தேவர் சுமார் ஒரு மணி நேரம் பேசினர். அதன் சார மாவது: ''உற்சாகத்தினலும், பரபரப்பினலும் கண்மூடித்தன மாய் நடக்கலாகாது. ஒத்துழை யாமை ஒரு முட்டுக்கட்டை மட் டுமே யாகும். அது சில விஷயங் களுக்கு நல்லதுதான். ஆனால், அதனல் மட்டும் சுயராஜ்யம் வருமென்று சொல்வது சரியல்ல. ஐரோப்பாவில் ஜனங்களின் சுய நலமே பிரதானமாயுள்ள குறு கிய திருஷ்டியால், மேல் நாட்டு நாகரிகம் மற்றவர்களுக்குத் தீமையாய் முடிந்ததுபோல, ஒத் துழையாமைக் கொள்கையும் ஜனங்களுக்குத் தன் தேசமே முக்கியம் என்ற குறுகிய மனே பாவத்தைக் கொடுக்குமோ என்று பயப்பட இடமேற்பட் டிருக்கிறது. இயந்திர சக்திகளை முழுதும் புறக்கணிப்பது தவரு கும. அதனல் உண்டாகும் பாத கங்களைத் தடுத்து, அதன் வளர்ச்சியையும் உபயோகத்தை யும் கட்டுப் படுத்தி, மனிதஜாதிக் குப் பயனுள்ளதாகச் செய்ய வேண்டும். தியாக வாழ்க்கைமட் டுமே சுயராஜ்யத்தைக் கொண்டு வராது.கால,தேச, வர்த்தமானங் களை ஒட்டி நடக்கவேண்டும். பிரத்யட்ச நிலைமைகளை உண்மை யாயும் தெளிவாயும் உணர வேண்டும். காந்திஜி இந்தியா வின் இணையற்ற தலைவர். அவ ருடைய சக்தி அபாரமானது. பொது ஜனங்கள் ஆடுகளைப் போல் கண்மூடித்தனமாய் அவ ரைப் பின்பற்றுவதில் பயனில்லை; தீமையு முண்டு. தங்கள் லட்சி யம் என்ன? அதை அடைய வழி என்ன? தங்கள் முன்னிருக் கும் திட்டம் சரியானது தானு? இவைகளை யெல்லாம் ஜனங்கள் சீர்தூக்கிப் பார்க்கும்படி செய் வது அவசியமாகும்.''

குருதேவரை 'ரட்சகர்த்தா' என்று காந்திஜி அழைத்தது எவ்வளவு பொருத்தம்! கௌதம புத்தருக்குப் பின்பு, பாரததேவி பெற்றெடுத்த மக்களில், இத்தனை பெருமிதமும் உலகமுழுதும் ஒரே குடும்பமென்ற இத்தனை விசால நோக்கமும் உள்ளவர் தாகூர் தான் என்பதில் சந்தேகமென்ன? அன்றிரவு குருதேவர் வீரநாத மாய்ப் பொழிந்த முடிவுரை, அவருடைய பழைய மாணவர் களின் செவிகளில் இன்னமும் ஒலித்துக் கொண்டுதான் இருக் கிறது:

"நான் சொல்கிறேன், என்னுடைய அபிப்பிராயம் என்பதற்காக மட்டும், ஒன்றையும் நீங்கள் அங்கீகரிக்கக் கூடாது. உங்களுடைய சொந்த புத்தி, சொந்த சக்தி பூர்வமாக, ஒவ்வொரு பிரச்சினையையும் நீங்கள் ஆராய வேண்டும். முடிவில் அது உங்களுடைய அபிப்பிராயத்துக்கு ஒவ்வாததா யிருந்தால், என் கொள்கையையும் புறக்கணிக்க நீங்கள் அஞ்சலாகாது. நான் இந்த வித்யாநிலையத்தின் தலைவன் என்பதற்காக, என் கொள்கைகளை யெல்லாம் நீங்கள் பின்பற்ற வேண்டும் என்று நிர்ப்பந்திக்கவோ, உங்கள் மனச் சுதந்தரத்தைக் கட்டுப் படுத்தவோ, எனக்குச் சிறிதும் அதிகாரம் கிடையாது; உரிமையும் கிடையாது. உங்கள் மனச் சுதந்தரத்தை, உலகின் மிகச் சிறந்த பொக்கிஷம் போல் காத்து ரட்சிப்பதே என் கடமையாகும்; அதுவே விசுவபாரதியின் ஆதர்சமு மாகும்!"

உலகத்திலே ஆயிரக் கணக்கில் குருக்கள் உண்டு. சிஷ்யர்களுடைய மனோபாவத்தை, நயத்திலோ பயத்திலோ தம் கொள்கைகளுக் கிணங்கப் பண்படுத்துவதே, அவர்களுடைய லட்சியமா யிருக்கிறது. அப்படி யிருக்க, மனிதனின் மனச் சுதந்தரமே சகலத்திலும் மேலானது என்று கூறியது மட்டு மல்ல, காரியத்திலும் காட்டிய நம் குருதேவரை நினைக்கும்போதே, நம்முடைய மனதில் பெருமையும் அன்பும் பக்தியும் பொங்கித் ததும்புகின்றன அல்லவா!

காந்திஜியிடம் அவருக்கிருந்த நட்பும், மதிப்பும், நம்பிக்கையும் எல்லையற்றவை. ஆனால், இணையற்ற கர்மவீரராகிய காந்திஜியின் சத்தியாக்கிரக சக்தியினால் பாமர ஜனங்களுக்கு ஆவேசம் உண்டா யிருந்தது கண்டும், காந்திஜியின் திட்டத்தில் சில அம்சங்கள் தேச நிலைமைக்கு பொருத்த மற்றதென்று தமக்குத் தோன்றிய காலத்திலே தமது முழுச் சக்தியும் கொண்டு அந்த அம்சங்களை எதிர்க்க, குருதேவர் சிறிதும் பின் வாங்கியதில்லை. அதனால் தமது செல்வாக்கு குறையுமே, காந்தி பெருமான் பெயர் கேட்டால் பரவசமாகும் மக்கள் தம்மை ஏசுவார்களே என்பதைப்பற்றி, அவருக்குத் தயக்கமே கிடையாது. மனிதனுடைய பகுத்தறிவினால் தான், அவன் மாக்களை விட மேலானவனாய் இருக்கிறான். அதை அவன் உபயோகிக்கா விட்டால், அவன் மிருகத்துக்குச் சமானமே என்பது அவருடைய திடமான கொள்கை. அதனால் தான், முடிசூடா மன்னரான காந்திஜி, குருதேவருக்குச் 'சுதந்தர ரட்சகன்' என்ற பெயரைச் சூட்டினார்.

✲

### இரண்டுவிதக் கணக்கு

இதுவரையில், உலகெங்கும் மண்ணிலிருந்து எடுத்த மொத்தப் பெட்ரோலியம் 90 ஆயிரம் கோடி காலன்களாம். இதைக் கேட்கும் போது, 'அடே அப்பா!' என்று நாம் பிரமிப்போம். ஆனால், இதையே மற்றொரு கணக்குப் போட்டுக் காட்டி யிருக்கிறார்கள். இத்தனை பெட்ரோலியமும் பிடிக்கக்கூடிய ஒரு பெரிய தொட்டி கட்டுவதாக வைத்துக் கொள்ளுங்கள். அது ஒரு மைல் நீளம், ஒரு மைல் அகலம், ஒரு மைல் உயரம்தான் இருக்குமாம். 'பூ! இவ்வளவுதானா?' என்று இப்போது தோன்றுகிற தல்லவா?



# குடும்பத்தில் அழகைப்பாதுகாத்தல்

“நீ பார்க்கிற படத்தைப்போலவே அவ்வளவு அழகாக இருந்தாள் என் தாய். ஆனால், அவள் சருமம் எவ்வளவு மிருதுவாயும் அழகாயுமிருந்த தென்பதைப் படம் காட்டமுடியாது” என்று தாய் கூறுகிறாள். தாய் தன் சருமத்தை அதிக ஆச்சரியகரமாகக் காப்பாற்றியிருக்கிறாள். தன் மகளும் அவ்வாறே செய்யவேண்டுமென்று விரும்புகிறாள். சுத்த நீரில் பியர்ஸ் சோப்பை உபயோகித்து அழகைப் பாதுகாத்துக் கொள்ளும் ரகசியத்தை அவள் தன் மகளுக்குக் கற்பித்திருக்கிறாள். இந்த புத்திமதி அழகைத் தலைமுறை தத்துவமாக நிலைத்திருக்கச் செய்யும்.




# பியர்ஸ் சோப்

TG. 40-50 TM A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND

கும்பகோணம்

## டி.எஸ்.ஆர். & கம்பெனியின்

*

கோகுல் கூந்தல் தைலத்தை
கூந்தல் வளர்ச்சிக்கும்

சிரசின் குளிர்ச்சிக்கும்
சந்தனுதி, அரைக்கீரை விதைத் தைலங்களையும்
உபயோகியுங்கள்

மதருஸ் ஸிட்டி ஏஜண்டு:
**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்**
திருவல்லிக்கேணி
மதருஸ்

ஸ்டாக்கிஸ்ட்:
**B. பால பட்டாபி**
வைஸ்யாள் தெரு
கோயம்புத்தூர்

---

உன்னத தயாரிப்புகள்!

மோஹன்ராம்

## பெட்ஷீட்டுகள்

## டவல்கள்

●

*Stockists :*

## மனோஹரன் ஸ்டோர்ஸ்

181, கீழவாசல் : : மதுரை

தந்தி : 'Harantalky' போன் : நெ. 219

# நட்சத்திர உதயம்

டி. தாம்ஸன்

ஜோ என்பவன் ஒரு தறிகாரன். அதிலும் அவ்வளவு திறமைசாலி யல்ல. ஆகையால், நாளாவட்டத்தில், அவனுடைய சகாக்க ளெல்லாம் அவனைவிடக் கொழுத்த சம்பளமும் சமூக அந்தஸ்தும் பெற்றுவிட்டார்கள். ஆனால், ஜோ ஒரு விதத்தில் அதிர்ஷ்டசாலி. அவனுடைய மனைவி பானி, கொஞ்சம் செட்டுக்காரி; வேடிக்கை விநோதங்களில் அவள் செலவழிப்பதேயில்லை. என்றாலும், முதல் குழந்தை பிறந்தவுடனே, வயிற்றை இன்னும் கொஞ்சம் இறுக்கிக் கட்டிக் கொள்ள வேண்டியதாயிற்று.

"இதைச் சகித்துத் தொலைய வேண்டியதுதான். என்றோ ஒரு நாள், இது பெரிசாய் வளர்ந்து தானே தன் பாட்டைப் பார்த்துக் கொள்ளாதா?" என்றான் ஜோ.

"சகித்துத் தொலைவதா! இது சாமி கொடுத்த பாக்கிய மாக்கும்" என்றாள் பானி.

"சரி; அப்படியே இருக்கட்டும். இதற்கு என்ன பெயர் வைப்பது?" என்று கேட்டான் ஜோ.

"ஹெக்டர் என்று பெயர் வைக்கலாம்" என்றாள் மனைவி.

"அதைவிட எலிஜா என்ற பெயர்தான் நன்றாயிருக்கிறது" என்றான் புருஷன்.

"இரண்டும் வேண்டாம். சாம் என்று கூப்பிடுவோம்" என்று அவசரமாய்ச் சொன்னாள் மனைவி. சாம் என்றே குழந்தையைக் கூப்பிட லானார்கள்.

வெகு சீக்கிரத்திலே விஷயம் விளங்கிவிட்டது. சாம் ஒரு மன்மதனாக வளர வில்லை. கயிறு போல் தடித்த செம்பட்டை மயிர், ஒன்றரைக் கண் பார்வை, திட்டமான முட்டிக்கால் இந்த லட்சணங்களோடு காட்சியளித்தான் சாம்.

"சாம் பார்க்க அழகாயில்லையே!" என்று ஏங்கினான் ஜோ.

"அதனால் பரவா யில்லை. என்னுடைய நல்ல குணம் அவனுக்கு இருக்கிறது. அது போதும்" என்று சமாதானம் சொன்னாள் பானி.

இந்தச் சம்பாஷணையின் அர்த்தமெல்லாம் விளங்கிவிட்டவன் போல, குழந்தை பல்லைக்காட்டினான்.

"உண்மைதான். இதனால் என்ன கெடுதல்? வாரம் பூராவும் உழைக்கப் போகிறவனுக்கு, எந்தக் கால் இருந்தாலும் ஒன்று

கள்ளி வயிற்றிலே அகில் பிறக்குமோ என்னவோ, தெரியாது. ஜோ வயிற்றிலே சாம் பிறந்து விட்டான். இது ஒரு விகடநடிக நட்சத்திரம் உதயமானது பற்றிய கற்பனை. இந்த மாதிரி நட்சத்திர உதயங்கள் இன்று உலகெங்குமே நிகழ்பவை தான்; ஆங்கில நாட்டில் மட்டிலு மல்ல. ஆங்கிலப் பெயர்களை உங்களுக்கு இஷ்டமானபடி மாற்றிக் கொண்டு, சிற் சில சிறு வர்ணனை மாறுதல்களும் செய்து விட்டீர்களானால், நட்சத்திரம் உங்கள் பக்கத்திலே உதயமாகியிருக்கக் கண்டாலும் காண்பீர்கள்.

தானே'' என்று திருப்தி செய்து கொண்டான் ஜோ.

சாம் வளர்ந்தான்; கரப்பான், கக்குவான், காய்ச்சல், இன்னும் பால ரோகங்கள் எத்தனையுண்டோ அத்தனையும் சம்பாதித்துக்கொண்டு வளர்ந்தான்.

"இவை யெல்லாம் அவனைக் கொல்ல முடியாது" என்றான் ஜோ.

"கொல்லமுடியும் என்று யார் சொன்னார்கள்?" என்று பானி கேட்டாள்.

"இல்லை. ஒரு பேச்சுக்குச் சொன்னேன்" என்றான் ஜோ.

"இப்படி யெல்லாம் பேசக் கூடாது. சாமிக்குக் கோபம் வந்துவிடும்" என்றாள் பானி.

காலக்கிரமத்தில் சாம் பள்ளிக்கூடத்துக்குப் போனான்-அழுது கொண்டேதான். பரீட்சைகளில் தேறினான்-பிரகாச மில்லாமலே. எந்தப் பாடத்திலும் சரி; அவனைப் பிற பையன் எவனும் மிஞ்ச முடிய வில்லை; வகுப்பில் கடைசி இடத்தை, அவன் யாருக்கும் விட்டுக் கொடுக்க வில்லை. உபாத்தியாயர்களுக்கு, அவன் பெயரை எடுத்தாலே பெருங் கிலியா யிருந்தது. மக்குக் குழந்தைகளுக்காகப் பிரத்தியேகமாய் நடக்கும் கலாசாலைக்கு, இவனை அனுப்பும் படி, இவனுடைய பெற்றோரை, உபாத்தியாயர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

"என்னத்துக்காக அப்படி அனுப்பவேண்டும்? சில பேரைத் தூக்கிவிட, வேறு சில பேர் வேண்டாமோ? எல்லாருமே உச்சியிலே இருக்க முடியுமா?" என்றான் ஜோ.

"உண்மை. தறி இழுப்பதற்குக் காலேஜ் படிப்பா வேண்டும்?" என்று கேட்டாள் பானி.

தன்னால் முடிந்த மட்டில் வகுப்பு வகுப்பாய் உழுத பின்பு, சாம் வயதடைந்து விட்டான். பிறகு, தன் தகப்பனார் வேலை செய்யும் பஞ்சாலையில், தானும் நுழைந்தான். தகப்பனுக்கு எவ்வளவு திறமையுண்டோ அவ்வளவு திறமையாகவே, சாமும் வேலை செய்தான்.

இதற்கிடையில் குடும்பம் சும்மா இருக்குமா? அது வளர்ந்து கொண்டே போயிற்று. சாம் இருபது வயதடைந்த போது, அவனுக்கு இரண்டு சகோதரிகளும ஒரு சகோதரனும் ஏற்பட்டு விட்டார்கள். எல்லாரும் லட்சணத்தில் இவனை விட அபிவிருத்தி யானவர்கள் தான். "போகப் போக, நாம் அபிவிருத்தி யடைந்து கொண்டே வராவிட்டால், நாம் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான்" என்றான் ஜோ.

ஜோ, சாம் இருவரும் தான் பஞ்சாலையில் வேலை செய்கிறார்கள்; மற்றவர்களையாவது இதை விட மேலான தொழில்களுக்குப் பயிற்சி செய்விக்க வேண்டுமென்று, பானி எண்ணினாள். "குட்டிகளுக்கு வாத்திமைப் பயிற்சி கொடுக்கலாம் என்று எனக்கு ஆசை" என்று அவள் சொன்னாள்.

"அது நமக்குக் கட்டாது" என்றான் ஜோ.

"அப்படியானால், ஓய்ந்த வேளையில் நான் நாலு வீடு கூட்டுகிறேன். நீங்கள், ஓட்டலில் தட்டுத் தூக்குங்கள்" என்றாள் பானி.

குடும்ப மந்தையில் உள்ள மற்றவர்கள் எல்லாம், தங்கள் வர்க்கத்தை விட்டு வெளியேறி உயர்ந்த அந்தஸ்தை அடையும் பொருட்டு, ஜோ, சாம் இருவரும் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டு உழைத்தார்கள்.

விஷயங்கள் திட்டப்படி நடைபெற்றன. கிளேடி, கிரிஸ்டைன் இருவரும் வாத்தியார்கள் ஆனார்கள். ரோலந்து, ஒரு பாங்கியின் கவுண்டரிலே உட்கார்ந்து கொண்டான். இவர்கள் மூவரும் உள்ளூர் கோல்ப் பந்தாட்டச் சங்கததில் அங்கத்தினர்கள் ஆனார்கள். சாம் ஈடுபடும் விளையாட்டு, இவர்களுக்குப் பிடிக்கவே யில்லை. அது என்ன விளையாட்டு என்று கேட்கிறீர்களா? எலி பிடிப்பதுதான்.

பந்தாட்டத்திலே திறமை பெறுவதற்காக, வாரா வாரம் ஞாயிற்றுக் கிழமை தவறாமல், அவர்கள் ஊக்கமாய் முயற்சி செய்து கொண்டே வருகையில், நாற்றமெடுத்த நாயையும் பூனையையும் இழுத்துக் கொண்டு, இவன் எலி வேட்டைக்குக் கிளம்பி விடுவான்.

"எலி வேட்டைக்கும் நரி வேட்டைக்கும் என்ன வித்தியாசம் என்று எனக்குத் தெரியவேயில்லை. கொள்கை சம்பந்தப்பட்ட மட்டில், இரண்டும் ஒன்றுதானே" என்று அவன் சொன்னான். குட்டிகள் "ஐயே!" என்று மூக்கைச் சுளித்தார்கள். ரோலந்து, தன் காலரை இழுத்துவிட்டுக் கொண்டான்.

சாம் அடுப்பங்கரை மூலையில் நின்ற வண்ணம், அவர்களைப் பார்த்துக் கோணல் விழி விழித்தான்: "சரி; நான் இதை விட்டு விடுகிறேன். மண்ணாய்ப்போன உங்கள் பந்தாட்டச் சங்கத்தில் நம் ரோலந்து என்னை மெம்பராய்ச் சேர்த்து விடுவானா, சொல்லுங்கள்" என்றான். சட்டென்று விவகாரம் முடிந்து விட்டது. அவன் வழியிலே அவன் போனான்; இவர்கள் வழியிலே இவர்கள் போனார்கள். அன்று முதல், அவர்களுக் கிடையிலே ஒரு பெரிய பிளவு ஏற்பட்டு விட்டது.

உள்ளூர் ஓட்டல் ஒன்றில், இரவு நேரத்தில் தட்டுத் தூக்கும் சிப்பந்தியாக, ஓய்ந்த நேர வேலை செய்ய, சாம் ஏற்றுக்கொண்டான். இதிலிருந்து, அந்தப் பிளவு மேலும் விரிந்து விட்டது. யாரும் அவனை ஒரு வார்த்தை சொல்ல வில்லை. ஆனால், தகப்பனுக்கு மாத்திரம் திடீரென்று கடுமையான ஜலதோஷம் பிடித்து விட்டது.

"அம்மா, உனக்கு நான் வாரத்துக்கு ஏதாவது கொஞ்சம் பணம் தருகிறேன்" என்றான் சாம்.

"நல்ல பையன். நீ நல்லது தான் நினைக்கிறாய். உன்மேல் குற்ற மில்லை. உன் துரதிர்ஷ்டம்!" என்றாள் தாய்.

சாமின் கோணல் பார்வை, அதிகக் கோணலாயிற்று: "என்னைப்பற்றிக் கவலைப் படாதே, அம்மா. சேற்றிலே புரளும் பன்றி சந்தோஷமா யில்லையா? அந்த மாதிரியே நானும் சந்தோஷமாய்த்தான் இருக்கிறேன்" என்றான் சாம்.

"பேஷ்!" என்றான் ரோலந்து.

உண்மையைச் சொன்னால், சாம் நெசவிலே எவ்வளவு மட்டமோ அவ்வளவு மட்டமாய்த் தான் சிப்பந்தி வேலையிலு மிருந்

தான். என்ருலும், வாடிக்கைக் காரர்களுக் கெல்லாம் சாமைக் கண்டால், அலாதியான ஒரு பிரீதி. ஓட்டல் முதலாளி, வெகு சீக்கிரத்திலே, சாமுக்கு முழு நேர உத்தியோகம் ஒன்று தருவ தாக முன்வந்தார். இரவிலே தட் டுத்தூக்குவதோடு பகலிலே ஏதா வது சில்லறை வேலை செய்ய வேண்டி யிருக்கும் என்று அவர் சொன்னர். சம்பளமோ நல்ல சம்பளம்; வேலையோ சுலபம். சாம் ஒப்புக்கொண்டான். பக லிலே வெகு அமைதியாய்ப் பெருக்கி மெழுகினன்; இரவிலே வெள்ளைச் சட்டை அணிந்து, தட் டுத் தூக்கினன்.

சங்கீத அறைக்குத் தட்டுத் தூக் குவதுதான் முக்கியமாய் அவன் பங்கு. அதிலே, ஒரு பக் கத்தில் ஓர் உயர்ந்த மேடை கட்டியிருந்தது. சனி ஞாயிற்றுக் கிழமைகளில், அங்கே இலவசக் கச்சேரி நடக்கும். உள்ளூர்த் திறமை சாலிகள், தங்கள் நாட் டிய வரிசைகளைக் காட்ட, இடங் கொடுப்பார்கள். பில்ஃபி கிரைம், அந்த நாட்டியத்துக்குப் பியானே வாசிப்பார். சபை யோர் மோசமாய்க் கேலி செய் வார்கள். கச்சேரி அவ்வளவு உயர்தரமா யிராது. வாடிக்கைக் காரர்களுக்குப் புதிசு புதிசான கூத்து வேண்டும்; அவ்வளவு தான். உணர்ச்சி மிகுந்த பதங் களைப் பற்றி, அவர்களுக்குக் கவலை யில்லை. ஆபாச விகடங் கள் இருந்தால், வெகு உற்சாகம்.

அறை நிறைந்துவிட்டால், மேடை மீதும் சபையோர் ஏறி உட்கார்ந்து விடுவார்கள். பாட கர், விதூஷகர்களுக்கு நடுவே இவர்களும் வந்து குந்தி விடுவார் கள். இந்தக் கூட்டத்திலே புகுந்து புறப்படுவர்ன் சாம். நாலுவிரலுக்கும் கட்டைவிரலுக் கும் நடுவிலே, தட்டை ஜாலக் காய்த் தாங்கிக்கொண்டு நடப் பான். அவனுக்கு இயற்கை யான ஹாஸ்ய ரசம் உண்டு. சம யத்துக்குத் தகுந்தாற் போல் இடையிடையே ஏதாவது தமா ஷாய்ப் பேசுவான். சபையோர் அத்தனை பேரும் 'கொல்' என்று சிரிப்பார்கள். உண்மையிலே, சாமும், அவனுடைய மூஞ்சியும் கோரணியும் விகடமும், இந்த நாட்டியக் கச்சேரியிலேயே ஓர் அங்கம் போல் ஆகி விட்டன. இதை ஓட்டல் முதலாளி கண்டு கொண்டார். இன்னும் அஞ்சு ஷில்லிங், சாமின் சம்பளம் உயர்ந்து விட்டது.

உள்ளூர் சங்கீத சபாவின் மானேஜரான பெர்ஸி. பி. பிராட்பாங்க்ஸ் என்பவர், அடிக் கடி இங்கே வருவார். தமது கொட்டகையில் கச்சேரி நடந்து கொண்டிருக்கும் சமயத்திலே, தம்மைக் குஷிப்படுத்திக் கொள் வதற்காக ஒரு போத்தலை நாடியே, அவர் இப்படி வருவார். ஒரு நாள் இரவு, பெர்ட் ஆஸ்பின் என்ற பிரபல ஏஜெண்டை அழைத்துக்கொண்டு, பெர்ஸி இங்கே வந்தார். சாம் அந்தச் சமயத்தில் பிரமாதமாய்த் தமாஷ் செய்து கொண்டிருந்தான். இந்தக் கோணங்கி உருவத்தைக் கண்டு, அந்த ஏஜெண்டு மகா களிப்புக் கொண்டு, 'கலீர்' என்று நெடு நேரம் சிரித்தார்.

"பலே அச்சா! இவனுக்குப் பாடத் தெரியுமோ?" என்று, மானேஜரை ஏஜெண்டு கேட் டார்.

"என்னவோ, எனக்குத் தெரி யாது. முதலாளிக்குத் தெரிந் திருக்கும்" என்ருர் மானேஜர்.

" இது வரையில், நான் அவன் பாடிக் கேட்டதே யில்லை. அவனையேதான் கேட்கவேண்டும்" என்றார் முதலாளி.

"பாடணுமா! என்ன பிரமாதம்! பாடினால் போகிறது" என்றான் சாம்.

"உனக்கு என்ன பாட்டுத் தெரியும்?" என்று பெர்ட் விசாரித்தார்.

"கரிச் சுரங்கத்திலே—அவள்,
கனத்த வேலைகள் செய்யுறாள்
பார்

என்ற பாட்டு உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டான் சாம்.

"தெரியாது. அது நல்ல பாட்டுத்தானா?" என்றார் பெர்ட்.

"நல்ல பாட்டா என்று கேட்கிறீர்களே! த்சொ! த்சொ! த்சொ!" என்றான் சாம்.

"எங்கே, பாடு பார்க்கலாம்" என்றார் பெர்ட்.

"அடே! யோசித்துப் பாடு. நன்றா யில்லா விட்டால், உனக்குத்தான் நஷ்டம்" என்றார் ஓட்டல் முதலாளி.

சாம் தனது தட்டைக் கீழே வைத்தான். பியானோக்காரனுக்குப் பக்கத்திலே போய் நின்று கொண்டான்.

"எத்தனை கட்டைச் சுருதி வைத்துக் கொள்ளப் போகிறாய்?" என்று கேட்டான் பியானோக்காரன்.

"அதெல்லாம் நான் மூக்காலே முணு முணுத்துக் காட்டுகிறேன்" என்றான் சாம். ஏதோ சில சப்த ஜாலங்களும் செய்து காண்பித்தான்.

"என்ன சொன்னாய்?" என்று விசாரித்தான் பியானோக்காரன்.

"ஒன்றும் சொல்ல வில்லை. அது என் பாட்டின் ராகம்" என்றான் சாம்.

"நீ பாடவேண்டிய மெட்டை நான் வாசித்துக் காட்டட்டுமா?" என்று கேட்டான் பியானோக்காரன். ஒரு மெட்டையும் கொஞ்சம் வாசித்தான்.

"ஐயையோ! இவ்வளவு சத்தம் போட்டு, என்னால் பாட முடியாது" என்றான் சாம்.

கொஞ்சம் சுருதியைக் குறைத்து விட்டு, "இது எப்படி?" என்று கேட்டான் பியானோக்காரன்.

"இது பரவா யில்லை. தொடங்கலாம்" என்றான் சாம்.

ஐந்தே நிமிஷத்தில், சபை பூராவும் ஒரே ஆரவாரம் நிறைந்து விட்டது. ஒரு சுரத்துக்கும் இன்னொரு சுரத்துக்கும் என்ன வித்தியாசம் என்று சாமுக்கு லவலேசமும் தெரியாது. கண்ணைக் கோணக் கோண விழித்தான். காலை மாறி மாறித் தாண்டிக் குதித்தான். கைகளை அந்தரத்திலே தூக்கினான். அவன் வாயின் ஒரு கோடி ஒரேயடியாய்த் திறந்திருந்தது; மறு கோடி கெட்டியாய் மூடி யிருந்தது. இதுவரையில் எவரேனும் அறிந்த எந்தச் சங்கீத பாணிக்கும் கட்டுப்படாத என்னவோ கூச்சல்களைப் போட்டான். பிறகு, குத்துக் கால்களைப் போல் கால்களை விறைத்தபடியே, சில ஆட்டங்களை ஆடி நிறுத்தினான்.

சங்கீத சபாவின் மானேஜர் பெர்ஸி, தமது கண்ணிலே வழிந்த

ஆனந்த பாஷ்பத்தைத் துடைத்துக் கொண்டே, "இவனுக்கு என்ன சம்பளம் கொடுக்கலாம்?" என்று, ஏஜெண்டைக் கேட்டார்.

"இதே மாதிரி எப்போதும் ஆடிவருவானானால், எத்தனை சம்பளம் வேண்டுமானாலும் கொடுக்கலாம்" என்றார் ஏஜெண்ட் பெர்ட்.

பெர்ஸின் சங்கீத சபாமண்டபத்தில், பரீட்சார்த்தமாக சாமின் நாட்டியக் கச்சேரி ஒன்று நடந்தது. அதன்மேல், "உனக்கு வாரம் ஐம்பது பவுன் சம்பளம் தருகிறோம். சம்மதமா?" என்று பெர்ட் கேட்டார்.

"ஐம்பது பவுனா! ஐம்பது பவுனுக்கு யாரைக் கொலை செய்ய வேண்டுமென்றாலும் செய்வேனே!" என்று, தன் சம்மதத்தைத் தெரிவித்தான் சாம்.

இந்த விதமாகத்தானே, ஒரு நடிக நட்சத்திரம் உதயமாகி விட்டது.

சாமுக்கு அபார வெற்றி கிடைத்தது. பிரிட்டன் பூராவும், ஒரு கோடியிலிருந்து மறு கோடி வரையில், சகல மக்களையும் அவன் சிரிக்கச் செய்துவிட்டான். இரண்டே வருஷத்தில், அவனுடைய வாரச் சம்பளம் நானூறு பவுனை எட்டி விட்டது. அவன் ஒரு விகட சக்ரவர்த்தி ஆகிவிட்டான்.

தன் தாயாருக்குச் சீமாட்டிகள் தரிக்கும் ஒரு ரோம அங்கியும், தகப்பனாருக்கு ஓர் ஒட்டலும் சாம் வாங்கிக் கொடுத்தான். அவனிடம் ரோலந்து அடிக்கடி கைமாற்றுக் கடன் வாங்கத் தொடங்கினான். கிரிஸ்டைன், கிளேடிஸ் இரண்டு சகோதரிகளும், தங்கள் குழந்தைகளுக்கெல்லாம் அவனையே ஞானத் தந்தையாக வரித்து, அவர்களுடைய ஜன்ம தினங்களைத் தவறாமல் அவனுக்கு எச்சரித்து வந்தார்கள். குடும்பத்திலே சதா அவனைப்பற்றியே தான் பேச்சு. அண்டை அயலாருக்கெல்லாமோ அவனிடம் பெரும் பொறாமை. அவர்கள் மிகுந்த கசப்போடு, "வெட்கம் மானத்தை மாத்திரம் கொஞ்சம் விட்டு விட்டால், என்னதான் கிடைக்காது" என்று தூற்றுவார்கள். தனது விலை உயர்ந்த ஆஸ்டிரக்கான் காலர் குலுங்கச் சிரித்துக்கொண்டே, சாம் இந்தச் சமயத்தில் தன் காரிலிருந்து இறங்குவான்.

இத்தனைக்கும் முத்தாய்ப்பு வைத்ததுபோல், சாம் ஒரு காரியம் செய்தான்: சீமாட்டிகளும் சீமான்களும் வாழும் வெஸ்ட் எண்ட் சங்கீத சபைகளின் செல்வமான பேரழகி கிட்டி ப்லிட்டர்ஸ் என்பவளை, சாம் மணந்து கொண்டான்.

"இனிமேல் நான் நடிப்பை விட்டுவிடப் போகிறேன். என் மனோரதத்தை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை" என்றாள் கிட்டி.

"அடி கண்ணாட்டி!...இது ரொம்பக் கடுமையான முடிவாச்சே" என்றான் சாம்.

"கடுமை என்ன வந்தது? மற்ற ஜனங்களெல்லாம் குழந்தை குட்டிகளோடு இல்லையா?" என்று கேட்டாள் கிட்டி.

"அது எனக்குத் தெரியும். ஆனால், நமது விஷயம் வேறானது.

குழந்தை ஒரு பெண்ணாய்ப் பிறந்து, அதன் முகம் என்னைப் போல் இருந்தால், ஆயுட்காலம் பூராவும் நாமே அல்லவா அதைக் காப்பாற்ற நேரும்!'' என்றான் சாம்.

“அது ஒரு பிள்ளையாயும் பிறக்கலாம் அல்லவா?'' என்றாள் கிட்டி.

“அது பிள்ளையாய்ப் பிறந்து, முகமும் என்போல் இருந்தால், பெரும் பாக்கியந்தான். என் மாதிரியே வந்துவிடும்'' என்றான் சாம்.

கிட்டி இரட்டைக் குழந்தைகள் பெற்று விட்டாள். இரண்டும் கற்பனைக்கெட்டா அழகு வாய்ந்தவை. சாம் குழந்தைகளை ஒரு முறை உற்றுப் பார்த்துவிட்டு, “பலே! இவைகளைச் சர்க்கார் உத்தியோகத்திலே போட்டு விடுவோம்'' என்றான்.

கிட்டி அவன் கழுத்தைக் கட்டி, ஒரு முத்தமிட்டுக் கொண்டு, “என் அன்பே! இவைகளுக்குப் பதிலாக, ரொனல்டு கோல்மான் என்ற அபார நடிகரையே பரிவர்த்தனை கொடுத்தாலும், நான் பெற்றுக் கொள்ளச் சம்மதியேன்'' என்றாள்.

✲

## பர்மா விலை வாசிகள்

பர்மாவில், சென்ற சில மாதங்களில் விலைவாசிகள் ஏறி இறங்கி வந்திருக்கும் விவரங்களைக் கேட்டால், மனம் நடுங்கும்படியிருக்கின்றன. தற்போது நமக்குக் கிடைத்திருக்கும் சில விலை விவரங்களைப் பாருங்கள்:

| பண்டம் | | இன்று | | | 1945-மார்ச் ஏப்ரலில் | | |
|---|---|---|---|---|---|---|---|
| உப்பு ஒரு படி | ரூ. | 1 | 4 | 0 | ... | ... | ... |
| துவரம்பருப்பு வீசை | | 3 | 0 | 0 | ... | ... | ... |
| பச்சரிசி மூட்டை | | 15 | 0 | 0 | ... | ... | ... |
| புழுங்கலரிசி மூட்டை | | 30 | 0 | 0 | ... | ... | ... |
| உளுத்தம் பருப்பு வீசை | | 1 | 0 | 0 | ... | ... | ... |
| மல்லி வீசை | | 4 | 0 | 0 | ... | ... | ... |
| நல்லெண்ணெய் வீசை | | 7 | 0 | 0 | 3,000 | 0 | 0 |
| சீனி வீசை | | 20 | 0 | 0 | ... | ... | ... |
| கருப்பட்டி வீசை | | 4 | 8 | 0 | 150 | 0 | 0 |
| பாக்கு வீசை | | 12 | 0 | 0 | ... | ... | ... |
| வெற்றிலை வீசை | | 12 | 8 | 0 | ... | ... | ... |
| சீரகம் வீசை | | 90 | 0 | 0 | 3,000 | 0 | 0 |
| பூண்டு வீசை | | 8 | 0 | 0 | 300 | 0 | 0 |
| மிளகு வீசை | | 8 | 0 | 0 | ... | ... | ... |
| மிளகாய் வீசை | | 4 | 0 | 0 | 300 | 0 | 0 |
| பால் வீசை | | 1 | 0 | 0 | ... | ... | ... |
| தேங்காய் ஒன்று | | 3 | 0 | 0 | ... | ... | ... |
| கிளப்புச் சாப்பாடு ஒரு வேளை | | 1 | 8 | 0 | 100 | 0 | 0 |
| டீ ஒரு கோப்பை | | 0 | 8 | 0 | ... | ... | ... |
| மண்ணெண்ணெய் டின் | | 24 | 0 | 0 | ... | ... | ... |
| பர்மாக் கைலி ஒன்று | | 12 | 0 | 0 | 2,500 | 0 | 0 |
| இந்தியக் கைலி ஒன்று | | 35 | 0 | 0 | ... | ... | ... |
| நெல் 100 கூடை | | 120 | 0 | 0 | ... | ... | ... |
| சைக்கிள் ஒன்று | | ... | ... | ... | 20,000 | 0 | 0 |
| மோட்டார்க்கார் ஒன்று | | ... | ... | ... | 3,00,000 | 0 | 0 |

# நெருப்பு

'செந்தாமரை'

விழுந்தெரியும் பரிதியந்த
மேற்கடலில் விட்டெறியும்
சுடர்த்தங்கத் துளிஇளகிப்
பழுக்கின்ற பொழுதுமிக்க
துடியுடனே பொங்கியெழுந்
தாடுகின்ற பெருந்தீதான்
நெருப்போ!

முழுமதியை விழுங்கவரும்
இருள்குழம்பாம் முகில்வயிற்றில்
விளைந்திருக்கும் நீர்த்துளியைப்
பிழிந்திறுத்து மழையாக்க
இடிமுழக்கிப் பொறிதெறிக்கும்
வெடிமின்னல் தரும்தீதான்
நெருப்போ!

'எழில்தருமென் பெண்ணினிரு
கண்விழிக்குள் இருக்கின்ற
தென்உலகென்' றெண்ணித்தன்
பொழுதோட்டும் ஆணழகைப்
பிரிந்தவள்போய் விட்டதன்பின்
அவள்நெஞ்சில் எழுந்தீதான்
நெருப்போ!

உழக்கரிசிச் சோற்றுக்காய்
உழைத்துழைத்தே உருக்குலைந்திங்
குளமுடைய உயிர்தேயும்
பொழுதலறும் தொழிலாளி
துயர்க்கண்ணீர்ப் பொடிகொதிக்கப்
பண்ணுகின்ற பெருந்தீதான்
நெருப்போ!

குழிதோண்டிச் சுதந்தரத்தைப்
புதைத்துமக்கள் கழுத்தறுக்க
வருங்கொடிய கும்பலினை
அழித்தொழிக்க, அனல்கக்கும்
எழுத்தெழுதும் அருங்கவிஞன்
உளக்கருத்தில் எழுந்தீதான்
நெருப்போ!

அழிக்கின்ற சிவசக்தி
தனைத்திரட்டி அணுக்குண்டின்
உள்ளடைத்து விட்டபின்பு
புழுநாறும் பிணக்காடாய்க்
கரிந்தழியும் பேயுலகக்
கூச்சலிலே எழுந்தீதான்
நெருப்போ!

✲

# பாதுகாப்புக்கு

# Godrej

## கோத்ரெஜ்

கோத்ரெஜ் பாதுகாப்புப் பொருள்களை வாங்கி, உங்கள் விலையுயர்ந்த சாதனங்களை பத்திரமாக வைத்திருங்கள். இதர தயாரிப்புகளில் கிடைக்காத விசேஷ பாதுகாப்பம்சங்களை, கோத்ரெஜ் இணைப்பற்ற பேழைகள், பணப் பெட்டிகள், கஜானாப் பெட்டிகள், காபினட்டுகள், அலமாரிகள், பூட்டுகள் முதலியவை உங்களுக்கு அளிக்கின்றன. நம் தேசத்தின் ஐசுவரியத்தின் பெரும்பாகத்திற்கு காவலாக இருக்கும் பெருமை கோத்ரெஜுக்கு உண்டு. விரிந்த நம் நாடெங்கும் சர்க்கார்களும், பாங்கிகளும், வர்த்தக ஸ்தாபனங்களும், பொது மக்களும் தங்கள் செல்வங்களைப் பாதுகாப்பதற்கு கோத்ரெஜையே நம்பியிருக்கின்றனர்.


16 மூலை வளைவு இணைப்பற்ற பேழை


6 பேட்டன்ட் காற்றுக் கட்வாத அலமாரி


பேட்டன்ட் பால் - ஸ்லைட் பைலிங் காபினட்


ஷெல்விங் ராக் தட்டுகளும் சிறிய அறைகளும் கூடியது

**கோத்ரெஜ் அண்ட் பாய்ஸ் மான்யுபாக்சரிங் கோ., லிமிடெட்**

பம்பாய் ● கல்கத்தா ● சென்னை ● டெல்லி ● கான்பூர்
ஹைதராபாத் (டெக்கான்) ● நாடு முழுதும் ஏஜன்ஸிகள்

**இந்தியாவின் இயந்திர சகாப்தத்தின் ஆரம்பகர்த்தாக்கள்**

---

உங்கள் சரும ஆரோக்கியத்தையும் அழகையும் பாதுகாக்க, தாவர எண்ணைகளால் செய்யப்பட்ட கோத்ரெஜ் ஸ்நான சோப்புகளையே உபயோகியுங்கள்.

Godrej

# ஆஸ்த்மா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்



தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்.

"புரோகித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல. "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா." திணறல் (கஷ்ட சுவாசம், முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின் (நீலப்பெட்டி) சாப்பிட்வேண்டும். அஜீரணம், வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸ்ஹரி" காம்பௌண்ட் (சிவப்பு பெட்டி உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும். 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை.

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனபஜார்.
2. அமிருத் ரத்னகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் & ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.



## புரோகித்ஸ் ஸ்வாஸஹரி



# லோத்ரா ★★★

## கர்பாசய ரோக நிவாரணி

கர்ப்பாசயக் கோளாறுகளால் ஏற்படக்கூடிய பல்வேறு உபாதைகளிலிருந்து காப்பாற்றி ஆரோக்கியத்தைஅளிக்கிறது.



## கேசரி குடீரம் லி. மதராஸ்

நைஜாம், சமஸ்தானம், ஆந்திரா ஜில்லாக்கள், தமிழ்நாடு முதலிய இடங்களுக்கு ஏஜண்டுகள் :—

**சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ**

செகந்தராபாத், பெஜவாடா, மதுரை

# பெண்

சுரேஷ்சந்திர சக்ரவர்த்தி

மனிதன் ஒரு காலத்தில் மிக்க மூடனுயிருந்தான்; மகா அகம் பாவியாயிருந்தான். ஆகையால், பெண்ணைத் தன் அடிமையாய் நினைத்தான்; அப்படியே நடத்தினான். அவளுடைய மென்மையான கணைக்கால்களில் இருப்பு விலங்கைப் பூட்டினான் - அவள் ஓடிப்போய்விடாமல் தடுப்பதற்காக! ஆனால், வீட்டிலே தொழும்பு செய்ய இடைஞ்சல் இல்லாத முறையிலேயே, அதைப் பூட்டினான்.

பெண்ணே! அவளும் தான், ஆணுக்கு இணங்கியவளாய், ஓர் அடிமையாகவே வாழ இசைந்து விட்டாள். அவள் மனதிலே என்னவெல்லாம் நினைத்தாளோ; யாருக்குத்தெரியும்? சாதுவாய் வாழ்ந்து, வீட்டுவேலைகளை மிக்க அடக்கமாய்ச் செய்துகொண்டிருந்தாள். வீட்டைச் சுத்தமாய், அழகாய் வைத்துவந்தாள். பொழுது சாய்ந்ததும், திருவிளக்கேற்றுவாள். வீட்டுக்கு ஒரு தீமையும் நேராமல் பாதுகாக்கும்படி, ஆண்டவனைப் பிரார்த்திப்பாள். ஆணுக்கு உணவு சமைப்பாள்; பானம் தயாரிப்பாள். பூஜைக்கு மலர்கொய்து வைப்பாள். ஆண் தன் அகம்பாவத்தால், இத்தனையும் சகஜமாய் நடக்க வேண்டியவையே என்று எண்ணிக் கொண்டான். அவனுக்குப் பரம திருப்தி:

பெண்ணை அடிமைகொண்ட ஆணுக்கு, ஆண்டவன் படிப்பினை புகட்டுகிறார், இந்த அரிய கற்பனை 'திரிவேணி'யிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது,

"ஆஹா! இவள் இத்தனையும் செய்வது எதனால்? நான் இல்லாமல் இவளால் வாழ முடியாது; அதனால் தான்" என்று அக மகிழ்ந்தான்.

மனிதனுடைய மனது போன போக்கை, இறைவன் கண்டார். அவர் புன்சிரிப்புப் பூத்தார். "சரி; இப்போது நான் ஒரு வேடிக்கை செய்கிறேன்" என்று தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார்.

ஒரு நாள் மனிதன் வெளியே வேட்டைக்குப் போயிருந்தான். பெண்ணை இறைவன் தூக்கிச் சென்று விட்டார். ஆணுக்கு எட்டாத ஓர் இடத்தில் அவளை ஒளித்து வைத்துவிட்டார்.

அன்று மனிதன் திரும்பி வந்தான். களைத்துப் பசித்து விடாயோடிருந்தான். வீட்டிலோ ஒன்றும் தயாராய் இல்லை: பசிக்கு உணவில்லை; விடாய்க்குப் பானமில்லை; பூஜைக்கு மலர் இல்லை. அவனுடைய தேவைகளையும் சுகத்தையும் கவனிக்க யாருமில்லை. அவனுக்கு மகா கோபம் வந்தது. செல்லக் குழந்தைபோல் துள்ளிக் குதித்தான். தலைவிரி கோலமாய் ஆடினான். 'ஹோ!' என்று கூச்சலிட்டான். ஆனால், அவள் வரக் காணோம்.

அவளுக்குப் பதிலாக, இறைவன் தோன்றினார். ஏதும அறியாதவர் போல், "என்னப்பா சங்கதி?" என்று கேட்டார்.

"சங்கதியா! அந்த நாசமாய்ப் போகிற பெண் எங்கே? அவளே எனக்குச் சகல பணிவிடைகளும் புரிந்து வந்தாள். என் பசிக்குச் சோறு சமைப்பாள்; பருகப் பானம் தயாரிப்பாள்; பூஜைக்கு மலர் பறித்து வைப்பாள்" என்று கத்தினான் மனிதன்.

"இவ்வளவுதானே?" என்று கேட்டார் இறைவன்.

"ஆமாம்" என்றான் மனிதன். மேலும், ஏதோ சந்தேகப்பட்டவனாய், "வேறே என்ன?" என்று கேட்டான்.

அவனுடைய கேள்விக்கு இறைவன் பதில் சொல்ல வில்லை. "நல்லது! சகலமும் உனக்குச் சித்தமாகி விடும் - பசிக்கு உணவும், பருகப் பானமும், பூஜைக்கு மலரும் தயாரா யிருக்கும்" என்றார்.

இதற்குப் பின்னால், இறைவன் அருளால், கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு மாய சக்தி, சகல பொருள்களையும் அவனுக்குச் சித்தம் செய்து வைத்தது - பசிக்குச் சோறு, பருகப் பானம், பூஜைக்கு மலர் இத்தனையையும் அது அவனுக்குத் தயாரித்து வைத்தது. ஆனால், பெண் திரும்பி வரவில்லை.

இப்படியாக, நாள்தோறும் குறிப்பிட்ட நேரத்துக்கு ஒரு நிமிஷமும் தாமதியாமல், அவனுக்குத் தேவையான பொருளெல்லாம் கிடைத்து வந்தது.

ஆனால், ஏதோ ஒன்று குறையா யிருப்பதுபோல் தோன்றியது - சூட்சுமமான ஏதோ ஒன்று, விளக்கிச் சொல்ல முடியாத ஏதோ ஒன்று இல்லாமல் போய்விட்டது; காணாமல் போய்விட்டது. இப்போது, சோறு வெறும் சோறா யிருந்தது; பானம் வெறும் பானமா யிருந்தது; மலர் வெறும் மலரா யிருந்தது. சோற்றிலே ருசி யில்லை; பானத்திலே குளிர்ச்சி யில்லை; மலரிலே மண மில்லை. ஏதோ ஒரு குறும்புக்காரக் குட்டிச்சாத்தான் வந்து, இத்தனையையும் சித்தம் செய்து வைத்துத் தன்னைக் கேலி செய்வதுபோல், மனிதனுக்குத் தோன்றியது. கடிகாரம்போல் ஏதோ ஓர் உணர்ச்சியற்ற இயந்திரம், இத்தனையும் புரிவது போல் அவனுக்குத் தோன்றியது. என்ன அநியாயம்! சகிக்க முடியாத கோரமா யிருக்கிறதே!

அன்று மனிதன் தன் வேலை முடிந்து, களைத்துச் சோர்ந்து, வீடு வந்து சேர்ந்தான். வழக்கம் போலவே, எல்லாம் தயாரா யிருந்தது. பசிக்குச் சோறும், பருகப் பானமும், பூஜைக்கு மலரும் சித்தமா யிருந்தன. ஆனால், அத்தனையும் மௌனமாய்க் கண் சிமிட்டி இவனைக் கேலி செய்வதுபோ லிருந்தன. திடீரென்று அவனுடைய ஆத்மா பித்துப்பிடித்து ஆவேசம் கொண்டது போலாயிற்று. ஆத்திரக் கண்ணீர் அவன் கண்களிலே துளித்தன. சோற்றை உதைத்துத் தள்ளினான்; பானத்தை ஊற்றி மிதித்தான்; பூஜைக்கு வைத்திருந்த மலர்மீது குதித்துப் பிசாசைப் போல் தாண்டவம் ஆடினான். திக்கற்ற அரக்கனைப்போல், கத்தினான்; உறுமினான்.

இறைவன் அவனுக்கு முன்னே தோன்றினார்: "மறுபடியும் என்ன சங்கதி?" என்று விசாரித்தார்.

"சங்கதியா?" என்று, பீரங்கி வெடியைப்போல், மனிதன் கத்தி

ஞன்: "சங்கதியா? இதயம் என்பது லவலேசமும் இல்லாத இத்தனை கேலிக் கூத்தும் எதற்கு? இதை யெல்லாம் திருப்பி எடுத்துக் கொள்ளுங்கள் - பெண்ணை எனக்குத் திருப்பித் தாருங்கள்" என்ருன்.

இறைவன் புன் சிரிப்புப் பூத்தார்; பெண்ணை அவனுக்குத் திரும்பவும் தந்தார்.

அன்றே மனிதன், அவள் காலிலே யிருந்த இருப்பு விலங்கைத் தறித்துவிட்டான். அதற்குப் பதிலாக, அவள் கையிலே பொன் வளையல்களையும், கழுத்திலே முத்து மாலையையும் அணிந்து விட்டான். அவளைத் தன் இதயத்தோடு இதயமாய் மார்புறத் தழுவிக்கொண்டான். உணர்ச்சிமிகுதியால் தொண்டை அடைத்துக்கொள்ள, "நீ அடிமை அல்ல, நீ—நீ இன்ப கானம்; எனது உலகத்தின் சூன்யத்தை நிறைக்க வந்த மந்திர ஜாலம்" என்று கூறினன்.

## குழந்தைக் கிழவன்

பிரான்ஸ் தேசத்தில் கார்டினல் டி ஆர் மக்னக் என்ற பெரிய பாதிரி 1554-ஆம் ௵ ஜுலைமீ 31-ஆம் தேதி வீதியிலே போய்க்கொண்டிருந்தார். அப்போது ஒரு பெரிய கிழவன் ரஸ்தாவிலே நின்று அழுது கொண்டிருந்தான்.

"உனக்கு என்ன வயசு?" என்று கேட்டார் பாதிரி.

"81" என்ருன் கிழவன்.

"இவ்வளவு வயசான நீ இப்படி அழுகிருயே! ஏன்?"

"எங்கள் அப்பா என்னை அடித்து விட்டார்."

"அடேடே! அவர் வயசு என்ன?"

"113"

"உன்னை அவர் எதற்காக அடித்தார்?"

"எங்கள் தாத்தாவுக்கு, நான் என் தொப்பியைத் தூக்கி மரியாதை பண்ணுததற்காக."

"தாத்தாவா! அவருக்கு என்ன வயசு?"

"143!"

## தரம் பார்க்கிருர்

பிரிட்டிஷ் பத்திரிகை மன்னனை லார்டு பீவர்புருக் ஒரு சமயம் பிரபல நடிகை ஒருத்தியோடு பேசிக்கொண் டிருந்தார்.

"உனக்குச் சற்றும் தெரியாத ஓர் அந்நியன் உன்னிடம் வந்து, பத்து லட்சம் பவுனைக்கொடுத்தால், நீ அவனேடு வாழச் சம்மதிப்பாயா?" என்று கேட்டார் பத்திரிகைச் சீமான்.

"ஆஹா! ஆட்சேப மில்லாமல் சம்மதிப்பேன்" என்ருள் நடிகை.

"சரி. அவன் உன்னிடம் அஞ்சே அஞ்சு பவுன் கொடுத்தால்?"

இதைக் கேட்டதும், "என்னை என்ன என்று நினைத்துக்கொண்டீர்கள்?" என்று சீறினுள் நடிகை.

"அந்த விஷயம்தான் முதலிலேயே தீர்மானமாகி விட்டதே. இப்போது, என்ன தரம் என்பதை அல்லவா நிர்ணயிக்கப் பார்க்கிறேம்" என்று வெகு அமைதியாகப் பதில் சொன்னர் பத்திரிகைச் சீமான்.

# மலேயாவில் விடுதலைப் புயல்

ஆர். எச். நாதன்

"மலேயா கூடச் சுதந்தரம் கேட்கிறது!... இந்தச் சின்னஞ் சிறு நாடு சுதந்தரத்தை எட்டிப் பிடிக்கக் கூடிய நிலைமையில் இருக்கிறது!..." என்று ஒரு நண்பர் உற்சாகம் ததும்பப் பேசினர். அந்தப் பேச்சில் ஆச்சரியமும் கலந்திருந்தது. ஆம், உண்மைதான். 'எங்கும் சுதந்தரம் என்பதே பேச்சு...' என்று நம் மகாகவி பாரதியார் பறை சாற்றியது, இன்று உலக முழுதும் எதிரொலிக்கிறது. உலக முழுதும் வீசி அடித்த 'சுதந்தரம்', 'ஜனநாயகம்' என்ற சண்டமாருதம், மலேயா மக்களையும் தட்டி யெழுப்பி விட்டது. இந்தியர்கள், மலாய்க்காரர்கள், சீனர்கள் ஆகிய சகல தேசிய இனத்தார்களும் ஒரு முகமாகச் சுதந்தர ஜனநாயகக் குடியரசைக் கோருகிறார்கள். அவர்களுடைய வெற்றிக்கு அத்தாட்சி, அவர்களுடைய எஃகு போன்ற ஒற்றுமை தான்.

ரப்பர், ஈயம், கொப்பரை, அன்னசிப் பழம், நிலக்கரி முதலிய இயற்கைச் செல்வம் கொழிக்கும் நாடு மலேயா. வானளாவிய மலைகள்! பச்சைக் கம்பளம் விரித்தாற்போல், எங்கு பார்த்தாலும் கண்ணுக்கினிய புல்வெளிகள்!

கன்னலுந் தேனும் கனியு
மின்பாலும்
கதலியும் செந்நெலும்
நல்கு மெக்காலும்

என்று மகாகவி பாரதியார் புராதன பாரதத்தைப் புகழ்ந்து பாடியது, மலேயாவுக்கும் பொருந்தும். இயற்கை இன்ப நடனம் புரியும் இந்தத் தேசத்தைப் பார்த்தவர்கள் அனைவரும், 'தேனும், பாலும் பொங்கி வழிந்தோடும் இனிய நாடு' என்று இதைக் கூறுவதில் ஆச்சரியமென்ன?

ஆனால், மலேயாவின் மற்றொரு சரித்திரத்தையும் நாம் மறக்க முடியாது. இந்த இயற்கைச் செல்வத்தை, பண மூட்டைகள் கொள்ளை கொண்டு போனார்கள். மலைபோல் சரக்குகளை உற்பத்தி செய்து குவித்து வந்த தொழிலாளர்களை முதலாளிகள் சுரண்டிக் கொழுத்து வந்தார்கள். தொழிலாளர்களைப் பொறுத்த வரையிலும், அவர்கள் வறுமையில் குமிழி விட்டுக் கொண்டிருந்தார்கள். 'உழுது விதைத்தறுப் பாருக்கு-உணவில்லை, பிணிகள் பலவுண்டு' என்று பாரதியார் மலேயாவை நினைத்துத்தான் பாடினர் போலும்!

> இன்று மலேயா குமுறிக்கொண்டிருக்கிறது என்கிறார் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த நண்பர் நாதன். அவர் சுமார் ஆறு வருஷங்களுக்கு முன்னே, மலேயாத் தொழிலாளரின் போராட்டங்களில் பெரும் பங்கெடுத்துக் கொண்டு, சர்க்காரின் சினத்துக்கு ஆளாகி, ஏரோப்பிளேன் மூலம் இந்தியாவில் கொணர்ந்து விடப்பட்டு, சிறைப்பட்டு வாழ்ந்தவர். கொஞ்ச காலத்துக்கு முன்பே விடுதலையடைந்தார்.

மலேயாவில் மொத்தம் 9 சுதேச சமஸ்தானங்கள் இருக்கின்றன. அவைகளில், பேரா, செலாங்கூர், நெக்ரி செம்பிலான், பஹாங் ஆகியவைகள், ஐக்கிய

மலேயாச் சுதேச சமஸ்தானங்கள் என்று அழைக்கப்பட்டன. ஜொஹூர், கெடா, கெலாந்தான், டிரெங்கானு, பெர்லிஸ் ஆகியவைகள், ஐக்கியமாகாத மலேயாச் சுதேச சமஸ்தானங்கள் என்று அழைக்கப்பட்டன. இத்துடன், சிங்கப்பூர், மலாக்கா, பினங் ஆகிய மூன்று துறைமுகங்களும் ஸ்டிரெயிட்ஸ் ஸெட்டில்மெண்ட் என்று அழைக்கப்பட்டன. இவைகளை, கவர்னரே நேரடியாக ஆண்டு வந்தார். சுதேச சமஸ்தானங்களில், சுல்தான்கள் ஆட்சி செலுத்தி வந்தார்கள். ஆனால், அது பெயரளவில்தான். அவர்களுக்கு நம் நாட்டிலுள்ள 'இஸ்பேட்' ராஜாக்களுக்கிருக்கும் அதிகாரம் கூடக் கிடையாது. கவர்னர் வைத்ததுதான் சட்டம்.

ஜப்பானியப் பாசிஸ்டுகள் மலேயாவை ஆக்கிரமித்ததற்கு முன்பு, மலேயாவில் வாழ்ந்து வந்த 25 லட்சம் சீனர்களும், 20 லட்சம் மலாய்க்காரர்களும், 8 லட்சம் இந்தியர்களும் ஜனநாயகத்தின், பிரஜா உரிமைகளின் நிழலைக்கூடக் கண்டதேயில்லை. பொது ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக சர்க்கார் என்ற வார்த்தையே, மலேயாக்காரர்களின் கண்ணில் படாமல் ஒளித்து வைத்திருந்தார்கள். ஸ்டேட் கௌன்ஸிலிலும் பெடரல் கௌன்ஸிலிலும் அங்கத்தினர்கள் நியமிக்கப் பட்டார்கள்; அவர்களில் 99 சத விகிதம் பேர்கள் ஐரோப்பியர்கள். சுருங்கக் கூறினால், விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர், அதாவது ரப்பர்த்தோட்ட முதலாளிகளும் ஈயச் சுரங்க முதலாளிகளும் அதிகார வர்க்கத்தினரும், 55 லட்சம் மக்கள் மீது ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். பத்திரிகைச் சுதந்தரம், பேச்சுச் சுதந்தரம், ஸ்தாபனம் அமைக்கும் சுதந்தரம் என்பவை இம்மியளவும் கிடையாது. 'நாடுகடத்தும் சட்டம்', மக்களின் குரல் வளையைச் சதா சர்வ காலமும் நெருக்கிக்கொண்டேயிருந்தது.

மலேயா மக்களில் பெரும்பாலோர் தொழிலாளர்கள். பஞ்சத்தாலும், பிணியாலும் துடிதுடித்த தொழிலாளர்கள், தங்களுடைய ஜீவாதார உரிமைகளுக்காகத் தொன்று தொட்டுப் போராடியே வந்தார்கள். தொழிலாளர் சங்கம் அமைக்கும் உரிமை பறிக்கப்பட்டிருந்த போதிலும், அடக்குமுறை கோர தாண்டவம் ஆடியபோதிலும், தொழிலாளர் வர்க்கம் சும்மா இருக்க வில்லை; பற்பல வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தியது. மலேயா கம்யூனிஸ்டு கட்சி, இவைகளுக்குத் தலைமை தாங்கியது. சுருங்கக் கூறினால், மலேயாவின் சரித்திரம், தொழிலாளர்களின் போராட்டச் சரித்திரம் தான். மலேயா சுதந்தர ஜனநாயகக் குடியரசின் சரித்திரத்தில், 1925-ஆம் வருஷம் பிறந்தது முதல் தொழிலாளர்களின் நல உரிமைகளைப் பாதுகாக்கவும் ஜனநாயக சுதந்தர சர்க்காரை நிர்மாணிக்கவும், மகத்தான தியாகம் செய்து, இடைவிடாது வீர தீரத்துடன் போராடி வந்த மலேயா கம்யூனிஸ்டு கட்சியின் பெயர், பொன்னெழுத்தில் பொறிக்கப்படும். மலேயா இந்தியத் தொழிலாளர்களின் நிலைமையைப் பற்றி எழுத முற்படும்போது, கை கூசுகிறது. ரத்தம் கொதிக்கிறது. ஒற்றுமையில்லாமல், தொட்டதற்கெல்லாம்

வளைந்து கொடுத்த தமிழ்நாட்டுத் தொழிலாளர்களை மகா கேவலமாய் நடத்தி வந்தார்கள். சீனத் தொழிலாளர்கள் பல பயங்கரமான போராட்டங்களை நடத்தி, 120 செண்டு கூலி பெற்று வந்தார்கள். ஆனால், போராட்டத்தையே கண்டும் கேட்டுமிராத தமிழ் நாட்டுத் தொழிலாளர்களோ, 50 செண்டு தான் கூலி பெற்று வந்தார்கள். வைத்திய வசதி, கல்வி வசதி முதலியவைகளைப் பற்றிக் குறிப்பிடவே தேவையில்லை. வாயிருந்தும் ஊமைகளாய், காலிருந்தும் நொண்டிகளாய், தமிழ்த் தொழிலாளர்கள் புழுப்போல் துடிதுடித்தார்கள்.

ஆனால், 1939-ஆம் வருஷத்திலிருந்து, தமிழ்த்தொழிலாளர்களும் ஒன்று திரண்டு, வீறு கொண்டெழுந்தார்கள். போர்க் கொடியை வானளாவ உயர்த்தினார்கள். தங்களுடைய ஜீவாதார உரிமைகளுக்காக, பல வேலை நிறுத்தப் போராட்டங்களை நடத்தினார்கள். அஞ்சா நெஞ்சுடன் வெஞ்சமர் புரிந்து வெற்றியும் ஓரளவு பெற்றார்கள்.

வேலை நிறுத்தப் போராட்டங்கள் உக்ரமாக நடந்து கொண்டிருக்கும் போது, ரப்பர்த் தோட்ட முதலாளிகளும் அவர்களது யதேச்சாதிகார சர்க்காரும், மிருகத்தனமான கொடிய முறைகளைக் கையாண்டு, வேலை நிறுத்தத்தைத் தகர்த்தெறிய, பகீரதப் பிரயத்தனம் செய்தார்கள். குழாய்களைத் துண்டித்து, ஆயிரக் கணக்கான தொழிலாளர்களுக்குச் சுத்த ஜலம் கொடுக்காமல் அநாகரிக முறையைப் பிரயோகித்தார்கள். தொழிலாளரின் உறுதியைக் குலைப்பதற்காக, அரிசி கொடுக்காமல் பட்டினி போட்டுப் பார்த்தார்கள். தொழிலாளர்கள் அணுவளவும் மசியவே யில்லை. இறுதியில் வாகை சூடினார்கள்.

1941-ஆம் வருஷத்தில், பிரிட்டிஷ், ஆஸ்திரேலிய, இந்தியத் துருப்புகளையெல்லாம் எதிர்த்துப் பயங்கரமான போராட்டத்தை, ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் நடத்தினார்கள். அவர்கள் மலேயாவையே ஓர் உலுக்கு உலுக்கி விட்டார்கள். சுமார் மூன்று வாரங்கள் வரையிலும், ஆயுதப் போராட்டம் நடந்தது. பல தொழிலாளர்கள் வீர மரணம் அடைந்தார்கள். ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள், பெண்களும் குழந்தைகளும் உள்படச் சிறைக் கோட்டங்களில் அடை பட்டார்கள். நூற்றுக் கணக்கானவர்கள் நாடு கடத்தப்பட்டார்கள்.

ஒரு புறம் கொடிய அடக்கு முறை, சுரண்டல்; மற்றொரு புறம் அவைகளை எதிர்த்துப் போராட்டம். இதுதான் பழைய மலேயாவின் சரித்திரம்.

ஜப்பானியப் பாஸிஸ்டுகள் மலேயாவை ஆக்கிரமிக்கிற வரையிலும், மலேயாவில் பாஸிஸ்டு எதிர்ப்புப் படை மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்தது. ஜப்பானியச் சரக்குகளை ஒரு சீனனாவது தொட்டதே கிடையாது. சுதந்தரப் பற்றும் ஜனநாயகப் பற்றும் உள்ளவர்கள், ஜப்பானியர் ஆட்சியின் கீழும், சும்மா இருக்க வில்லை. பாஸிஸ்டு எதிர்ப்புப் பொதுஜனப் படை, இடைவிடாமல் பாஸிஸ்டுகளோடு கொரில்லாப் போர் நடத்தியது. இதில், இந்தியர்

கள், சீனர்கள் மலாய்க்காரர்கள் அனைவரும் இருந்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இந்தப் படையினர் 250 இடங்களில் ஜாப் படைகளோடு கைகலந்து போராடினார்கள். ஜாப் பாஸிஸ்டுகள், மிருகத்தனமாகச் சுதந்தர இயக்கத்தை நசுக்கப் பார்த்தார்கள்.

பால்மணம் மாறாப் பாலர்களின் பிஞ்சுக் கைகளை முறித்தார்கள். நகக்கணுவில் ஊசி ஏற்றினார்கள். காய்ந்த இரும்புக் கம்பிகளை உடலெங்கும் புகுத்தினார்கள். காதையும், மூக்கையும், நாக்கையும்கூட அறுத்தார்கள், அந்தக் கொலை பாதகர்கள்! ஆனால், அவர்களால் மக்களின் உறுதியைக் குலைக்க முடியாமல் போயிற்று. பாஸிஸ்டு எதிர்ப்புப் பொதுஜனப் படை, நாளுக்கு நாள் வளர்ந்து பெருகிற்று. சுதந்தர ஜனநாயகப் போராட்டத்தில் புடம் போட்டு எடுக்கப்பட்ட இந்த மக்கள்தான், இன்று பிரிட்டிஷ் படைகள் மலேயாவுக்குள் பிரவேசித்த பின்பு, சுதந்தர ஜனநாயகக் குடியரசைக் கோருகிறார்கள்

ரப்பர்த் தோட்ட முதலாளிகளும் ஈயச் சுரங்க முதலாளிகளும் (ருசி கண்ட பூனைகள் அல்லவா?), திரும்பவும் மக்களைச் சுரண்டிக் கொழுக்கலாமென்று இப்போதும் கனவு காண்கிறார்கள். உளுத்துப்போன பழைய யதேச்சாதிகார சர்க்காரை மலேயா மக்கள் மீது திணிக்கப் பார்க்கிறார்கள். ஆனால், அந்த முயற்சியை இந்தியர்களும் மலாய்க்காரர்களும், சீனர்களும், ஒருமுகமாக எதிர்த்து வருகிறார்கள். போர் முரசு கொட்டுகிறார்கள். இறுதி வெற்றி ஜன சக்திக்கே!

இன்று மலேயாவின் நிலைமை படுமோசமாகவே இருக்கிறது. பிரிட்டிஷார் திரும்பி வந்த பிறகு, ஜப்பானிய நாணயங்களுக்கு மதிப்புக் கிடையாதென்று பிரகடனம் செய்தார்கள். பொது ஜனங்களிடம் ஜப்பானிய நாணயங்களைத் தவிர வேறு யாதொன்றும் கிடையாது. இத்துடன், விலைவாசிகளும் விஷம்போல் ஏறுகின்றன. வியாபாரம் ஸ்தம்பித்து விட்டது. ரப்பரின் விலையைக் குறைத்திருக்கிறார்கள். மலேயாவில் இன்று ஒரு பவுண்டு ரப்பரின் விலை 36 செண்டு. ஆனால், சிலோனிலோ 55 செண்டு! என் இந்த வித்தியாசம்?

வேலையில்லாத் திண்டாட்டம் மலேயாவில் தலைவிரித்தாடுகிறது. மக்கள் பஞ்சத்தாலும் பிணியாலும், தவியாய்த் தவிக்கிறார்கள்.

சகல தேசீய இனங்களாலும் அங்கீகரிக்கப்பட்ட கீழ்க்கண்ட சுதந்தர ஜனநாயகத் திட்டத்தை, மலேயாக் கம்யூனிஸ்டுக் கட்சி விடுத்திருக்கிறது:

(1) சீனா, சோவியத் யூனியன், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளோடும், புதிய சர்வதேச சமாதான ஸ்தாபனங்களோடும் ஒன்று சேர்வது.

(2) ஓர் அகில மலேயாப் பொது ஜனக் காங்கிரஸை அமைப்பதோடு, அதன் கிளை ஸ்தாபனங்களை மலேயாவின் ஒவ்வொரு சுதேச சமஸ்தானத்திலும அமைப்பது. பொதுஜன ஓட்டு மூலமாகவும், ஜனநாயக முறைகள் மூலமாகவும் இவை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

(3) மலேயாவில் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநாட்டும் பொருட்டுப் பாஸிஸ்டு ஜப்பான் வகுத்திருந்த சட்ட திட்டங்களை

யும், அரசியல் ஸ்தாபனங்களை யும் அறவே அகற்றுவது.

(4) பேச்சுச் சுதந்தரம், பத்திரிகைச் சுதந்தரம், ஸ்தாபனம் அமைக்கும் சுதந்தரம் ஆகிய வைகளை மக்களுக்கு அறிவிக்க வேண்டும்.

(5) பழைய கல்வி முறையை அறவே ஒழிக்கவேண்டும். சகல தேசிய இனங்களுக்கும் தத்தம் சொந்தத் தாய்ப் பாஷையில் கல்வி அறிவு ஊட்டி, தேசிய கலாச்சாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

(6) பொது ஜனங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வேண்டும். தொழிலையும், விவசாயத்தையும் அபிவிருத்தி செய்யவேண்டும்; அகதிகளுக்கும், வேலையில்லாதவர்களுக்கும் நிவாரணம் அளிக்கவேண்டும். சம்பளத்தையும், கூலியையும் உயர்த்தவேண்டும். நாள் ஒன்றுக்கு 8 மணி நேரமே தொழிலாளர்களிடம் வேலை வாங்க வேண்டும் என்ற விதியை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும்.

(7) மக்களின் வாழ்க்கை நிலையை ஸ்திரப்படுத்தும் பொருட்டு, விலைவாசிகளை நிர்ணயிக்க வேண்டும். லஞ்சம் வாங்கும் உத்தியோகஸ்தர்களையும், கள்ள மார்க்கட்டில் வியாபாரம் செய்து, கொள்ளை லாபமடிக்கும் வியாபாரிகளையும் தண்டிக்க வேண்டும்.

(8) ஜப்பானியரோடு போராடிய சிப்பாய்களுக்கும், அந்தப் போராட்டத்தால் உயிர் நீத்தவர்களின் குடும்பங்களுக்கும் உதவியளிக்கவேண்டும்.

சுதந்தர ஜனநாயக இயக்கம், இன்று மலேயா முழுதும் வேரூன்றியிருக்கிறது. புத்துணர்ச்சி பெற்ற புதிய மலேயா உருவாகியிருக்கிறது. மலாய் நாடு முழுதும், கிராம, நகர ஜில்லா, சமஸ்தானப் பொதுஜனக் கமிட்டிகள், ஜனநாயக முறையில், பொதுஜன வோட் மூலமாக, அமைக்கப்பட்டிருக்கின்றன. ஜாதி மத தேசீய வித்தியாசமின்றி, இந்தப் பொதுஜனக் கமிட்டிகளில் சகல தேசீய இனத்தினரும் அங்கம் வகிக்கிறார்கள்.

பசியாலும் பிணியாலும் கஷ்டப்படும் மக்களுக்கு, இந்தப் பொதுஜனக் கமிட்டிகள் மகத்தான தொண்டு புரிந்து வருகின்றன. சிங்கப்பூரில் மாத்திரம் மூன்று லட்சம் தொழிலாளர்கள் வேலையில்லாமல் தவிக்கிறார்கள். சர்க்கார் போதிய உதவி புரியவில்லை. எனவே, பொது ஜனக் கமிட்டிகள், ஒரே ஒரு வாரத்தில் 2000 பவுண்டு உருளைக் கிழங்கையும், 5000 அரிசி மூட்டைகளையும் கிராமாந்தரங்களிலிருந்து வசூலித்து, கஷ்டப்படும் மக்களுக்கு வினியோகித்திருக்கின்றன.

மலேயாவைப்போல், யுத்த காலத்தில் பல தேசங்கள், மேற்கிலும், கிழக்கிலும், ஜாதி மத தேசீய வித்தியாசமின்றி ஒன்று திரண்டு கிளர்ந்தெழுந்தன. பிற்போக்காளர்கள், அவைகளை நசுக்கப் பெருமுயற்சி செய்தார்கள். ஆனால், பல தேசங்களில் படுதோல்வியடைந்தார்கள். ஏகாதிபத்தியப் பிற்போக்காளர்கள், தென் கிழக்கு ஆசிய நாடுகளில் வெடித்துள்ள சுதந்தர இயக்கங்களை நசுக்கப் பகீரதப் பிரயத்தனம் செய்து வருகிறார்கள். ஆனால், பொதுஜன சக்திதான், இறுதியில் வெற்றிபெறப் போகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமே யில்லை.

*



இந்திய தேசிய ராணுவத்தைச் சேர்ந்த ஜான்ஸி ராணி படைத் தலைவி காப்டன் லட்சுமி. பர்மாவில் பந்தோபஸ்துக் கைதியா யிருக்கிறார்.



இந்திய தேசீய ராணுவத்
தின் கொடி.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ், தம் சகாக்களுடன், தமது இந்திய
தேசிய ராணுவ அணிவகுப்பைப் பார்வையிடுகிறார்.






இந்திய தேசிய சேனை வீரர்களுக்கு ஸ்ரீ. சுபாஷின் ராணுவ வணக்கம்.



இந்திய தேசிய ராணுவ வீரர்கள் டாங்கி உபயோகிக்கிறார்கள்.






மேலே: இ.தே.ரா. வீரர்கள் (1) காப்டன் ஷா நவாஸ்; (2) காப்டன் ஷெகால்; (3) காப்டன் டில்லான். வலது பக்கம்: டில்லி விசாரணைக் கோர்ட் தலைவர் மேஜர் ஜெனரல் எ.பி. பிளாக்ஸ்லாண்டு. இடது பக்கம்: இந்திய எல்லையில் இ.தே.ரா. வீரன் ஒருவன் சுபாஷின் படத்தைத் தாங்கிச் செல்கிறான். கீழே: டில்லி ராணுவக் கோர்ட் விசாரணை.






ராணுவக் கோர்ட்டில் நடக்கும் இ. தே. ரா. வழக்கு விசாரணையில் முதல் சாட்சி காப்டன் நாக். கீழே: டில்லி செங்கோட்டை வாயில்.









இ. தே. ரா. எதிர்வாதக் கமிட்டி
காரியாலயத்துக்கு நேரு வி
பக்கத்தில் நிற்பவர் ய
குர்ஷித்பென்.





மேலே: இ. தே. ரா. எதிர்வாதக் கமிட்டியின் கூட்டம்: (1) புலாபாய் தேசாய்; (2) நேரு; (3) அஸாப் ஆலி; (4) காட்ஜு; (5) ரகுநந்தன் சரண். கீழே: விசாரணைக் கோர்ட்டுக்கு உள்ளே போகமுடியாதவர்கள், உள்ளிருந்து என்னசேதி வருகிறதோ என்று கேட்க, கோட்டைக்கு வெளியே ஆவலோடு காத்திருக்கிறார்கள்.



# சிற்பியின் காதல்

சுரபி

"என்ன போங்கள், முதலியார்" என்று நுழையும் போதே, அலுப்பும் சலிப்புமாய் நுழைந்தார் ராமசாமி. என் நண்பர் ராமசாமி நாயுடு ரொம்பவும் நல்ல மனிதர். பாரம்பரியமாய் என் குடும்பத்துக்கும் அவர் குடும்பத்துக்கும் நெருங்கிய உறவு. அந்த உறவு எங்கள் இருவருக்கு மிடையே அளவில்லாத அந்நியோன்னியத்தை வளர்த்து விட்டது. எந்தக் குறையா யிருந்தாலும்-குடும்பத் தகராறு யிருந்தாலுங்கூட - என்னிடங் கொட்டி ஆற்றிக்கொண்டால்தான் அவருக்குத் திருப்தி. "வாருங்கள் ; என்ன விசேஷம்? ஏன் இவ்வளவு அலுப்பு?" என்று வரவேற்றேன். "அதை ஏன் கேட்கிறீர்கள்?" என்று தம்முடைய குறையை ஆரம்பித்தார். தம்முடைய பெண்ணுக்குக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்துகொண் டிருப்பதாகவும், அந்தப் பெண் தனக்கு இஷ்டமானவனைத் தான் மணப்பேன் என்று ஒற்றைக்காலில் நிற்பதாகவும் விவரமாய்க் கூறிவிட்டு, "என்ன போங்கள், முதலியார். இந்தப் பெட்டைக் குட்டிகளைப் படிக்க வைத்தாலே இப்படித்தான். நாலு எழுத்தைக் கற்றுக் கொண்டு ஏதோ கரைகண்டு விட்டதுபோல் பிரமாதப் படுத்துகிறதுகள். அப்பா! எதற்கெடுத்தாலும் பிடிவாதம்" என்று நொந்து கொண்டார்.

எனக்கென்னவோ, காதல் ஒன்றுதான் இந்த உலகத்திலே ஆண் - பெண், ஏழை - பணக்காரன், படித்தவன் - பாமரன் என்ற வித்தியாசமின்றி எல்லாரும் அனுபவிக்கக் கூடிய சொத்து என்று தோன்றுகிறது. அதற்கு யாரும் குறுக்கே நிற்கக் கூடாதென்பது என் அபிப்பிராயம். நிதானமாக என் கட்சியை எடுத்துப் பேசினேன். அவரும் நிதானமாய் எல்லாவற்றையும் கேட்டுக்கொண் டிருந்து விட்டு, "என்ன போங்கள், முதலியார். இதெல்லாம் எனக் கொன்றும் பிடிக்கவே யில்லை. காதலாவது கத்தரிக்காயாவது!" என்று எங்கள் பேச்சுக்கே முத்தாய்ப்பு வைத்தார்.

அவருடைய சின்னப் பெண் ரங்கநாயகி எனக்குச் சொந்தப் பெண் மாதிரி. அவளும் என்னைப் பெரியப்பா என்றுதான் கூப்பிடுவாள். அடிக்கடி வீட்டுக்கு வருவாள். பல சமயங்களில் வாரக் கணக்காக இங்கேயே தங்கிவிடுவாள். எங்கள் சக்குவை விட்டு இணைபிரிய மாட்டாள். நல்ல புத்திசாலி; தங்கமான குணம். அந்தப் பெண் இப்படிப் பிடிவாதம் பிடிக்கிறா ளென்றால், ஏதோ விசேஷம் இருக்கத்தான் வேண்டுமென்று எனக்குத் தோன்றியது. எப்படி

அற்புதமான காதல் கன்னி யொருத்தியின் சிற்பத்தைக் கண்டாள் சகுந்தலா. அதைக் கண்டதுமாத்திர மல்ல; அந்தச் சிற்பத்துக்குப் பின்னே புதைந்து கிடந்த உண்மைக் காதல் கதையையும் அறிய வரும்போது, அவள் மட்டுமா? பார்த்தோரும் கேட்டோருமே மன முருக வேண்டியிருக்கிறது.

யாவது அவளுடைய காதலைக் கைகூட வைக்க வேண்டுமென்னும் நோக்கத்துடன், "இல்லை, நாயுடு" என்று, அவர் முடித்து விட்ட விவாதத்தை மறுபடியும் கிளப்பினேன். ஆனால், அவர் அதற்கு இடங் கொடுக்காமல், "என்ன போங்கள், முதலியார்" என்று அங்கவஸ்திரத்தைச் சரிப்படுத்திக்கொண்டு, தடியைக் குத்திக் கொண்டு, எழுந்து விட்டார். எனக் கென்னவோ ரங்கநாயகியைக் கைவிட்டு விட்டதுபோல் இருந்தது. "இவரை எப்படிச் சரிப்படுத்துவது" என்று திணறிக்கொண் டிருக்கையில், "சார், தபால்" என்ற சப்தம் கேட்டது. ஜன்னல் வழியாய் விழுந்த கடிதம் கீழே கிடக்கையிலேயே, கையெழுத்து இன்னாரது என்று தெரிந்து விட்டது. "உட்காருங்கள், உங்கள் செல்லம் சக்குதான் எழுதி யிருக்கிறாள்" என்றேன். [ஆமாம், ரங்கநாயகி எப்படி எனக்குச் செல்லக் குழந்தையோ அப்படியே சகுந்தலாவும் அவருக்குச் செல்லக் குழந்தைதான்.] "விஷயம் நிறைய இருக்கும்போலிருக்கிறது; இரண்டரையணா ஒட்டி அனுப்பி யிருக்கிறாள்" என்று அவரைப் பிடித்து அமர்த்திக் கொண்டே, கடிதத்தைப் பிரித்தேன். பிரித்து மேலெழுந்தவாரியாகப் பார்த்தேன். ஏதோ 'காதல், காதலன், காதலி' என்றெல்லாம் வார்த்தைகள் அடிக்கடி வருவதைக் கண்டு, அவரை உட்கார வைத்து மீண்டும் வாயைக் கிளறுவதற்கு இதுவும் நல்ல வழிதானென்று, அவரிடமே கடிதத்தைக் கொடுத்து, "நீங்களே படியுங்கள், கேட்போம்" என்றேன்.

இது என் மகள் எனக்கெழுதிய 'ப்ரைவேட்' கடிதந்தான். இருந்தாலும் விஷயம் யாரும் கேட்கக்கூடிய விஷயம்; உண்மையில் எல்லாரும் கேட்கவேண்டிய விஷயம். சக்குவுக்கு எங்கிருந்தோ திடீரென்று சுவாரஸ்யமாய் விஷயத்தைச் சித்திரிக்கும் திறமை வந்து விட்டது. கேளுங்கள், நாயுடுகாரு படித்தது இது தான்:

"அன்புள்ள அப்பாவுக்கு நமஸ்காரம். நான் இங்கே உங்களைச் சபித்துக்கொண்டே யிருக்கிறேன். எத்தனை தடவை வருந்தி வருந்திக் கூப்பிட்டேன், நீங்களும் வாருங்களென்று? என்னையே நிறுத்திவிட அல்லவா பார்த்தீர்கள்? வேண்டும் உங்களுக்கு. எவ்வளவு சுவாரஸ்யமான, எவ்வளவு உன்னதமான அனுபவத்தை இழந்து விட்டீர்கள், தெரியுமா?

[சக்கு எதைக் குறிப்பிடுகிறாள் என்பது நாயுடுவுக்குத் தெரியும். அவளோடு அவர் பெண் ரங்கநாயகியுந்தான் மகாபலிபுரம் போயிருந்தாள். அவளும் அவரைக் கூட வரும்படிதான் தொந்தரவு செய்தாள். பெண்களின் விடுதியிலே யிருந்து போகும் பெண்கள் கூட்டத்தோடு நாம் போவானேன் என்று நாங்கள் நின்றுவிட்டோம். ஆகவே, சக்கு என்னை ஏசுவது நாயுடுவையும் மறைமுகமாய் ஏசிக்காட்டுவது போலிருந்தது. இருந்தாலும், அவர் நிறுத்தாமல் வாசித்துக் கொண்டே போனார்:]

"மகாபலிபுரத்திலே மூன்று நாள் தங்கினோம். மூன்று நாளும் மூன்றுவித அனுபவங்கள். முதல் நாள் வேடிக்கை பார்த்தோம். இரண்டாம் நாள் ஓர் அதிசயத்தைக் கண்டோம். மூன்றும் நாள் அதைக் கொண்

டாடினேம். ஆமாம், முதல் நாள் குன்றுகளை யெல்லாம் சுற்றிப் பார்த்தோம்; ரதங்களிலெல்லாம் ஏறி ஆரோகணித்தோம்; சிற்பங்களை யெல்லாம் தொட்டுத் தொட்டுப் பார்த்துப் புளகித மடைந்தோம். அடாடா! கல்லிலேதான் என்ன கற்பனையைச் சிருஷ்டித்து வைத்திருக்கிறார்கள் அந்தக் கல்லுளி மங்கன்கள்! எவ்வளவு பாவத்தைப் பொழிந்து வைத்திருக்கிறார்கள்! ஒரு சுவரிலே மாடு ஒன்று கன்றுக்குப் பாலூட்டுவதுபோல் செதுக்கி வைத்திருக்கிறார்கள். உருவம் முழுசாய்க்கூட இல்லை. ஆனல், அந்தப் பிராணியின் முகத்திலே தாயின் தத்துவத்தை அப்படியே திரட்டி வைத்ததுபோ லிருக்கிறது. நாங்களெல்லாம் இந்த மாட்டைப் பார்த்துச் சுமார் அரைமணி நேரம் மயங்கி நின்றுவிட்டோம். ஆனல், நீங்கள் அப்படியொன்றும் இப்போது நிற்க வேண்டாம். இங்கே இருக்கும் கற்கள் சொல்லும் கவிதையை நேரில் வந்து கூறுகிறேன். இப்போது இந்த அதிசயத்தைக் கேளுங்கள்:

"இரண்டாம் நாள் வேறென்றும் செய்யத் தோன்றமல் கொஞ்ச தூரம் குன்றுகளுக்கிடையே உலாவி விட்டு வரலாமென்று நானும் இன்னும் நாலு பேரும் புறப்பட்டோம். 'எங்கே போகிறீர்கள்?' என்று கேட்டார்கள் அம்மா. (அம்மா என்று சக்கு குறிப்பிட்டிருப்பது விடுதித் தலைவி கமலவேணி அம்மாளை. பெண்கள் எல்லாருமே அவர்களை அப்படித் தான் கூப்பிடுவார்கள்.) இது தான் சமயமென்று, அவர்களும் கூட வரவேண்டுமென்று மன்றடினேம். அம்மாளுக்கு எங்கள் மேலுள்ள வாத்சல்யந் தான் உங்களுக்குத் தெரியுமே.

[சக்குவுக்குக் கமலவேணி அம்மாளிடம் அலாதிப் பற்று. அந்த அம்மாள் அடிக்கடி எங்கள் வீட்டுக்கும் வருவார்கள். அன்பே உருவெடுத்தது போன்றவர்கள். பார்த்தாலே கண்ணியமான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பது விளங்கி விடும். வயது நாற்பதுக்கு மேல் இருக்கும். இளமையிலே நல்ல அழகாயிருந்திருக்க வேண்டுமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம். முகத்திலே மட்டும் சதா சர்வதா லேசாக ஒரு சோகரேகை படர்ந்திருக்கும். என்ன குறை என்று யாரும் கேட்டது கிடையாது. விடுதியே அவர்களுக்கு வீடு; விடுதிப் பெண்களே குழந்தைகள். பெற்றோரும், விடுதியில் பெண்களைச் சேர்த்தபின், 'சரி, கமலவேணி அம்மாளிடம் ஒப்புவித்தாயிற்று' என்று கவலையற்றிருப்பார்கள். பெண்களுக்குப் புத்தி சொல்லவேண்டுமென்றாலும், அவர்களிடம் சொல்லியே புத்திபுகட்டச் சொல்லுவார்கள். வீட்டு அம்மாளின் பேச்சைத் திரணமாக மதிக்கும் பெண்களும், விடுதி அம்மாளின் வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேச மாட்டார்கள். அப்படி, வாஞ்சையால் வசப்படுத்தி அன்பினல் ஆண்டு வந்தார்கள் அந்த அம்மாள்.]

"எல்லாருமாகச் சுமார் ஒரு மைல் தூரம் போனேம். இன்னும் சற்று தூரத்திலே ஏதோ ஒரு குடிசை தென்பட்டது பசுமையான தோட்டமும் கண்ணில் பட்டது. கால் போனவழியே நடந்துகொண் டிருந்தவர்கள், இதைப் பார்த்ததும் அந்தப் பக்கம் திரும்பினேம். ஒரு குன்றின்

அடிவாரத்திலே இருந்தது அந்தத் தோட்டம். தோட்டத்துக்குள்ளே சற்று எட்டினாற்போல் குடிசை இருந்தது. குடிசைக்கும் வெளித் திட்டிக் கதவுக்கும் இடையில் ஒரு சிறிய செயற்கைக் குன்று. யாரோ ஒரு கைதேர்ந்த சித்திரக்காரன் வர்ணங்களைத் தேர்ந்தெடுத்துத் தீட்டிவைத்தது போலிருந்தது அதைக் கவிந்து கொண்டிருந்த செடி கொடிகளின் வர்ணஜாலம்.

"யாருடைய வீடோ, என்னவோ என்று பயந்து கொண்டே, உள்ளே நுழைந்தோம். தடுப்பார் யாருமில்லை யென்று கண்டு, அந்தப் புஷ்பக் குன்றை நெருங்கினோம். உள்ளே ஒரு பெண் உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும், எங்கள் கால்கள் பின்வாங்கின. சுந்தரி மட்டும் திரும்பவும் கிட்டே போய்ப் பார்த்து, 'அடி அசடுகளா, சிலை வைத்திருக்கிறதடி' என்று மெதுவாக-இதைக் கேட்டு யாராவது வந்துவிடப்போகிறார்களே என்ற பயத்துடன் - சிரித்தாள். நாங்களெல்லாரும் ஜம்பத்தை விட்டுக் கொடுக்காமல், 'அடாடா, கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த மாதிரி கண்டு பிடித்து விட்டாள்' என்று நொடித்துக் கொண்டே, அருகில் போய் அந்தச் சிலையை ஆராய ஆரம்பித்தோம்.

"சிலை பழங்காலத்தது அல்ல, இந்த இருபதாம் நூற்றாண்டில் சமைத்ததுதான் என்று, பார்த்ததுமே தெரிந்தது. சலவைக் கல்லில் செதுக்கப்பட்டிருந்தது. ஒரு விசித்திரம் என்னவென்றால், சாதாரணமாய் நாம் பார்க்கும் பெரிய மனிதர் சிலைகளைப் போல் ஒரே வெள்ளையாயிராமல், இயற்கையாக வர்ணந் தீட்டப்பட்டிருந்தது. உடலிலே கனகாம்பர வர்ணத்தில் புடவை உடுத்தியிருந்தது. அதிலேயே கொஞ்சம் ஆழ்ந்த வர்ணத்தில் ஜாக்கெட்டும் போட்டிருந்தது. புடவை ஜாக்கெட்டுகளின் அழகைக் காலத்தின் சேஷ்டை கொஞ்சம் மங்கவைத்திருந்தது.

"முன்னெல்லாம் புராதனச் சிற்பங்களைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டிருந்த நாங்கள், இந்தப் புதுமைச் சிலையைக் கண்டு ஆச்சரியத்தில் ஆழ்ந்து நின்று விட்டோம். 'அசல் பொம்மனாட்டி உட்கார்ந்திருப்பது போலவே இருக்கிறதடி' என்றாள் தங்கம். 'தேவகன்னிகை என்று சொல்லடி' என்று திருத்தினாள் ராஜி. 'எவன் செதுக்கினானோ! யாரைப் பார்த்துச் செதுக்கினானோ!' என்றேன் நான். எனக்கென்னவோ அது வெறுங் கற்பனையாயிருக்காதென்று தோன்றியது. முகத்திலே, என், ஒவ்வோர் அங்கத்திலுமே அவ்வளவு உணர்ச்சி ததும்பிக் கொண்டிருந்தது. 'வெட்கத்தால் தலை குனிந்து உட்கார்ந்திருக்கிறாளடி' என்றாள் சுந்தரி. 'சீ, சீ, காதல் முகத்திலே கனிந்திருக்கிறதடி' என்றாள் ரங்கா. (தம்முடைய பெண்ணின் பெயரையும் காதலையும் சேர்த்துப் படித்தபோது, நாயுடுகாருவின் மீசை கொஞ்சம் மேலே ஏறி இறங்கியது. இருந்தாலும், விஷய சுவாரஸ்யத்தில் கடிதத்தை நிறுத்தாமல் வாசித்துக் கொண்டே போனார்.) 'நான் சொல்லுகிறேன்' என்று அந்த பாவத்தை விளக்கினேன் நான். 'இவள்மீது காதல் கொண்டவன் தன் காதலைத் தெரிவித்து இவளுடைய அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறான். அதைக்

கேட்டதும், காதல் முகத்திலே கனிகிறது; திருப்தியும் தாண்டவமாடுகிறது. ஆனால், வெட்கம் வாயை அடைக்கிறது. ஜாடையாய்த் தன் அங்க நெளிவிலேயே, தன் இதழ்க் குழைவிலேயே, சம்மதத்தைத் தெரிவிக்கிறாள்; அவ்வளவுதான்' என்றேன்.

"இதைக் கேட்டு, 'அடேயப்பா, பெரிய ரஸிக சிகாமணி! சிலையின் உள்ளத்திலே ஊடுருவிப் பார்த்துவிட்டாள்!' என்று என்னைக் கேலிசெய்தாள் அந்த அசடு தங்கம். அவளுக்கு ஒன்றுமே மூளையில் ஏறாது. 'சரி, அம்மாவைக் கேட்டுப் பார்ப்போம்' என்று அவர்களைக் கூப்பிட்டேன். அவர்கள் இந்த அரட்டையிலெல்லாம் கலந்து கொள்ளாமல், வேலி ஓரத்திலேயே ஏதோ புஷ்பத்தில் ஆழ்ந்து நின்று கொண்டிருந்தார்கள். அந்தப் புஷ்பத்தைப் பார்த்து, அவர்களுக்கு என்ன ஞாபகம் வந்துவிட்டதோ! இப்படி ஏதாவதொரு சிறு வஸ்துவைப் பார்த்துவிட்டுச் சிந்தனா லோகத்திலே யாத்திரை செய்வது அவர்களுக்குச் சகஜந்தானே? இருந்தாலும், நான் கூப்பிட்டது கேட்டு மெதுவாக வந்தார்கள். கண் கலங்கியிருந்தது போல் தோன்றியது. ஆனால், முகத்தில் சிரிப்பை வருவித்துக் கொண்டு, 'என்ன தகராறு?' என்று கேட்டுக் கொண்டே வந்தார்கள். அந்தச் சிலையைப் பார்த்ததும், நாங்கள் முதலில் திடுக்கிட்டது போலவே அவர்களும் திடுக்கிட்டார்கள். 'பாருங்கள், அம்மா. நான் இந்தச் சிலையின் பாவத்தை விளக்கிச் சொன்னால், தங்கம் கேலி பண்ணுகிறாள். நீங்களே சொல்லுங்கள்' என்றேன். அவர்கள் ஒன்றும் காதில் விழாததுபோல் இருக்கவே, நான் முன்சொன்ன அபிப்பிராயத்தைச் சொல்லி, 'அப்படித்தானே அம்மா?' என்று கேட்டேன். 'உன் மூளை ஒரு பெரிய கற்பனைக் களஞ்சியம். பொம்மையை வைத்துக் கொண்டு எங்கெந்த லோகத்தையோ தாவிப்பிடிக்கிறாய். காதலுமாச்சு, கத்திரிக்காயுமாச்சு. சாதல் ஒன்றுதான் இந்த உலகத்திலே நிச்சயம்' என்று அவர்கள் விரக்தியோடு கூறியதையும் அவர்கள் குரலிலேற்பட்ட மாறுதலையும் கேட்டு, எங்கள் எக்களிப்பெல்லாம் எங்கேயோ போய் விட்டது. அந்த நிலைமையை மாற்றுவதற்காக ஏதாவது சொல்லவேண்டுமென்று தோன்றவே, 'ஏனம்மா, இப்படி உண்மையிலேயே நடந்திருக்கக்கூடாதா?' என்று கேட்டேன். 'அதென்னவோ என் மூளைக்கொன்றும் எட்டமாட்டேனென்கிறது. என்னைப் பொறுத்த வரையில், இது ஓர் உயிரற்ற கல்சிலை - அவ்வளவுதான்' என்று அவர்கள் சொல்லி முடிப்பதற்குள், 'இல்லை, அது கல்சிலை இல்லை' என்று ஓர் ஆண்குரல் கேட்டு, அனைவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தோம்.

"கிழவர் ஒருவர் குடிசையிலிருந்து வந்துகொண்டிருந்தார். 'உங்களுக்குத் தெரியும்போலிருக்கே இதைப்பற்றி?' என்று கேட்டார்கள் அம்மா. தெரியும். அந்த அழகியை எனக்குத் தெரியும்; அவளைச் சிலையாய்ச் சமைத்த அந்தச் சிற்பியையும் தெரியும்; அவர்கள் இருவருக்கும் இருந்த தெய்விக உறவும் தெரியும்; விதியின் சாகஸத்தால் அது முறிந்த கதையும் தெரியும்' என்று அழுத்தந் திருத்தமாய் அவர் சொன்னார்.

''நரைத்த தலையையும் தாடியையும் பார்த்தால், சுமார் 55 வயது இருக்கும் என்று தோன்றிற்று. ஆனால், வார்த்தையிலே நல்ல அழுத்தம் தொனித்தது. 'அந்தக் கதையைச் சொல்லுங்களேன்' என்று நாங்கள் யாரும் கேட்கவில்லை. ஆனால், நாங்கள் அனைவரும் பார்த்த பார்வையிலேயே எங்கள் ஆவலை அவர் கண்டு கொண்டார். 'பெண்களின் மனம் எவ்வளவு நெப்பமானது, அதை எவ்வளவு ஜாக்கிரதையாய்க் கையாளவேண்டும் என்பதைத்தான் இந்தத் கதையும் காட்டுகிறது. அவர்கள் மனத்திலே காதல் விதை வெகு சீக்கிரத்திலே ஊன்றிவிடுகிறது: ஒரே நாளில்கூடச் செழித்து வளர்ந்து புஷ்பித்துவிடுகிறது. ஆனால், வெகு சுலபமாய்ச் சந்தேகக் களையும் அதில் முளைத்துவிடுகிறது. அதைக் கிள்ளிப் போட அவர்களுக்கு விவேகம் இருப்பதில்லை. அதனால்தான் இவ்வளவு அழகும் இப்படிக் கல்லாய்ச் சமைந்து கிடக்கிறது' என்று அவர் ஆரம்பித்தார். 'யாராவது சாபமிட்டிருப்பார்களோடி' என்று என்னிடம் ரகசியமாய்க் கேட்டாள் ராஜி.

"அது அவர் காதில் விழுந்துவிட்டது. சாபமில்லை, பூர்வ ஜன்ம பாபந்தான். கேளுங்கள், சுருக்கமாய்ச் சொல்லுகிறேன்' என்று அவர் தொடர்ந்து சொல்லலானார். 'இந்தச் சுந்தரியும் அந்தக் கலைஞனும் கொண்டிருந்த காதலைக் கண்டு, ஊரே பொறாமைப்பட்டது. இரண்டு வருஷ காலமாய் வளர்ந்துவந்த காதல் முதிர்ந்து, மலர்ந்து, மணம் வீசும் நாள் நெருங்கியது. அந்தச் சமயத்தில் அவனுக்கொரு பித்தம் பிடித்தது. கலைஞன் பித்தன் தானே? மும்முரமாய், இரவு பகலாய் அதிலே ஆழ்ந்துவிட்டான். ஒரு நாளும் அவளைக் காணாமல் கண்ணுறங்கி அறியாதவன் திடீரென்று ஓரேயடியாய்ப் பத்து நாள் எட்டிப் பார்க்காமல் இருந்துவிடவே, அவள் மனம் வேதனைப் பட்டது; சந்தேகமும் பிறந்தது. அதற்கப்புறம் ஒரு நாள் சில விநாடி வந்துவிட்டு ஓடியபோது, அவன் முகத்திலே ஏதோ துடிப்பை அவள் கண்டாள். என்னத்தையோ தன்னிடமிருந்து மறைக்கிறானென்று நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. திருமண நாளோ நெருங்கி வந்துவிட்டது. அவளுக்கு நிலை கொள்ளவில்லை. ஒரு நாள் அந்தி மயங்கும் சமயத்தில், ஆவலை அடக்கமுடியாமல் அவன் வீட்டுக்கே ஓடிவந்து விட்டாள். ஆனால், வாசலிலே வேலைக்காரன் வழிமறித்துவிட்டான். எஜமானின் கண்டிப்பான உத்தரவு, நான் என்ன செய்யறதுங்கம்மா என்றான். துடி துடித்துக்கொண்டிருந்த மனம், அவனையும் மீறி வாசல் வழியே உள்ளே எட்டிப் பார்க்கும்படி தூண்டியது. அந்த நிமிஷம் அவள் கண்ட காட்சி அவள் மனத்தை நொறுக்கி விட்டது. தன்னை இரண்டு வருஷமாய் உயிராகக் காதலித்து வந்திருப்பவன், இன்னும் இரண்டே நாளில் தன்னை மணக்க நாள் குறித்துவைத்திருப்பவன்,வேறொரு மங்கையின் கன்னத்தைத் தொட்டுச் சல்லாபம் பண்ணிக்கொண்டிருப்பது அவள் கண்ணில் பட்டுவிட்டது. அவ்வளவுதான். அடுத்த நிமிஷம் அவள் கால்கள் கிளம்பிவிட்டன. எங்கே யென்பது அவளுக்குத்தான் தெரியும். ஒரு வேளை அவளுக்கேகூடத் தெரியாதோ, என்னவோ.'

"அவர் இப்படிச் சொல்லி முடிப்பதற்குள், 'அவள் மீது தவறென்ன? சந்தேகப் பிராணிகள், விவேகமற்றவர்கள் என்றெல்லாம் பெண்கள்மீது ஏன் பழி சுமத்துகிறீர்கள்?' என்று பாய்ந்தாள் துடுக்குக்காரி ரங்கா. 'ஆமாம், அவள்மீது தவறில்லை தான். அவனோடு சல்லாபம் செய்துகொண்டிருந்த புதுக் காதலி இதோ இந்தச் சோலையிலே உட்கார்ந்திருக்கிறாளே இவள்தான் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்? அவ்வளவு தூரத்திலிருந்து இவள் தன்னுடைய பிரதி பிம்பந்தானென்று எப்படி ஊகிக்கமுடியும்? முதல் முதலில் தன் காதலைத் தெரிவித்த போது, அவள் எந்தக் கோலத்தில் என்ன பாவத்துடன் அமர்ந்திருந்து ஏற்றுக்கொண்டாளோ அதே கோலத்தில் அதே பாவத்துடன் அவளைச் சலவைக்கல்லிலே திரட்டி யெடுத்து அவளுக்கே பரிசளிக்க வேண்டுமென்றுதான், அப்படி இரவு பகலாய் அவன் பாடு பட்டுவந்தான். ஆனால், அவளுக்குத் தெரியாமல் வேலையை முடித்துத் திருமணத்தன்று அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்த வேண்டுமென்னும் அவனுடைய விளையாட்டுப் புத்தியே, இப்படி இருவர் தலைக்கும் கொள்ளியாய் மூண்டது' என்று அவர் விளக்கியதைக் கேட்டு, 'பார்த்தீர்களா, நான் சொன்னால் சிரித்தீர்களே' என்று கேட்பதுபோல், நான் மற்றவர்களின் பக்கம் திரும்பிப் பெருமிதத்தோடு ஒரு பார்வை பார்த்தேன். 'கலைப்பித்தந்தான் அவனுடைய காதல் வாழ்வுக்கு உலை வைத்தது. அதே கலைப்பித்தந்தான் இப்போது அவன் உயிரைத் தாங்கி நிற்கிறது' என்று முடித்தபோது, அந்தப் பெரியவரின் கண்ணில் நீர் கசிந்தது. நாங்களெல்லாரும் கண்ணைத் துடைத்துக் கொண்டோம்.

"காதல் கதைகளைக் கேட்டுக் கொஞ்சங்கூடக் கசியும் வழக்கமில்லாத அம்மாவின் கண்களிலும் நீர் தாரை தாரையாய் வழிவதைக் கண்ட நான், 'ஏனம்மா, இப்போது இதை உண்மை என்று நம்புகிறீர்களா?' என்று கர்வம் தாங்காது கேட்டேன். 'நம்புவதென்ன? இந்த யுவதியையே எனக்கு நேரில் தெரியும்' என்று அவர்கள் சொன்னது எங்களையெல்லாம் திடுக்கிடச் செய்தது. 'நிஜமாகவா?' என்று எல்லாரும் ஒரே குரலாகக் கேட்டோம். 'எங்கே பார்த்திருக்கிறீர்கள்?' என்று நான் இன்னும் ஒரு கேள்வி போட்டேன். 'எங்கேயா? சுமார் 25 வருஷத்துக்கு முன்னே என் காதலர் எனக்குப் பரிசளித்த நிலைக்கண்ணாடியில் தான்' என்று நிதானமாக அவர்கள் பதில் சொன்னார்கள். நாங்கள் அதைச் சரியாய்ப் புரிந்து கொள்வதற்குள்ளே, அந்தக் கிழவர் 'கமலீ' என்று கத்திக் கொண்டே ஓடிவந்தார்.

"அப்புறம் என்ன நடந்ததென்று நினைக்கிறீர்கள்? இத்தனை வயதுவந்த பெண்கள் பக்கத்திலிருக்கிறோம் என்பதுகூட ஞாபகமில்லாமல், அந்த முதிர்ந்த காதலர்கள் ஒருவரையொருவர் அணைத்துக்கொண்டு ஒருவர் தோள்மீதொருவர் தலைசாய்த்து விட்டார்கள். சுமார் ஐந்து நிமிஷம் அப்படியே மெய் மறந்திருந்திருப்பார்களென்று தோன்றுகிறது. இருவர் கண்களிலும் ஆனந்த பாஷ்பம் பெருக்கெடுத்தது. எங்கள் கண்கள் சுரந்த ஆனந்தக் கண்ணீரும் அந்தப் பிரவாகத்தில் கலந்து கொண்டது.

ஒரு நிமிஷங் கழித்து உள்ளே போய், அந்தச் சிலையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கண்களை உற்று நோக்கினேன். எங்கிருந்து வந்ததோ தெரியாது, அந்தக் கண்களிலிருந்தும் இரண்டு முத்துக்கள் உதிர்ந்திருந்தன...அப்பா, இப்போது சொல்லுங்கள். நீங்கள் வராததற்காக உங்களை நான் சபிப்பது சரியா, இல்லையா ?''

நாயுடுகாரு கடிதத்தைப் படித்து முடித்தார். ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே அவர் எழுந்தபோது, ''என்ன போங்கள், முதலியார். இதெல்லாம் எனக்கொன்றும் பிடிக்கிறதேயில்லை'' என்ற வார்த்தைகள் மீண்டும் அவர் வாயிலிருந்து வந்தன. ஆனல், அவர் கண்களில் கசிந்திருந்த ஈரத்தைக் கண்டபோது, ரங்கநாயகியின் காதல் பலித்து விட்டதென்று நான் தீர்மானித்து விட்டேன்.

✲

## வங்காளி பேச்சு விநோதம்

நடக்க முடியாத விஷயம் எதையாவது குறிப்பிடும்போது, தமிழர்கள் 'குதிரைக் கொம்பு' என்கிறோம். வங்காளியிலே இது 'குதிரை முட்டை'. இரண்டும் அசம்பாவிதம் தானே !

தமிழர்கள் வாயினல் பேசுகிறோம்; மூக்கினல் நுகர்கிறோம்; நாக்கினல் சுவைக்கிறோம். ஆனல், வங்காளி 'மூக்' கினல் பேசி, 'நாக்' கினல் சுவாசிக்கிருன். வங்க பாஷையில் 'மூக்' என்ருல் வாய்; 'நாக்' என்ருல் மூக்கு.

வங்காளி ஆங்கிலம் பேசும்போது, 'நாளைக்கு வந்தேன்', நேற்று வருவேன்' என்று சொல்வது அதிக சகஜம். வங்கத்தில் நாளை, நேற்று இரண்டுக்கும் 'கல்' என்ற ஒரே பதம் இருப்பதே இதற்குக் காரணம்.

பூதகணம், தேவகணம் என்று நாம் சொல்லுகிறோம். வங்காளியிலே சிசுகணம், ஜனகணம் என்பது சர்வ சாதாரணம்.

—ஆர். எம். சோமசுந்தரம், (கல்கத்தா)

## ஆகஸ்ட் கலவர நாவல்

முல்க்ராஜ் ஆனந்து இங்கிலாந்திலே நீண்ட காலம் வசித்தும், அவருடைய இந்தியப் பண்பு குன்றவில்லை. அவர் உரம் படைத்த தேசபக்தர். அவருடைய 'கூலி' என்ற நாவலை ஸினிமாப் படம் பிடிக்க, அமெரிக்க முதலாளி அலெக்ஸாந்தர் கோர்டா அனுமதி கேட்டார். ஏகாதிபத்திய ஆதிக்க உணர்ச்சி படைத்த கோர்டா, 'கூலி' என்ற தமது நாவலைக் கெடுத்து, இந்திய விரோதப் பிரசாரம் செய்யப் பயன்படுத்தி விடுவாரோ என்று முல்க்ராஜ் பயந்தார். அனுமதி மறுத்து விட்டார். இதேபோல, ஆர்த்தர் ராங்க் என்ற பிரிட்டிஷ் முதலாளிக்கு, தமது 'கிராமம்' என்ற கதையைப் படம் பிடிக்க, ஆனந்து அனுமதி மறுத்துவிட்டார். ''முற்போக்கான இந்தியப் படமுதலாளி யாராவது முன் வந்தால், அவருக்குத்தான் இவைகளைக் கொடுப்பேன்'' என்று, முல்க்ராஜ் என்னிடம் சொன்னர், இப்போது முல்க்ராஜ், 1942 ஆகஸ்டுக் கலவரம் பற்றிய ஒரு நாவல் எழுதுவதில் ஈடுபட்டிருக்கிருர்.

—பம்பாய்க் கிரானிக்கிள் நிருபர்.

# ரெக்ஸோனா

## சரும அழகை உண்டாக்குகிறது

### ...சரும சுகத்தை பாதுகாப்பதன் மூலம்






சரும சௌந்தரியத்திற்கு சரும ஆரோக்கியமே உண்மையான அடிப்படை. ரெக்ஸோனா, சரும ஆரோக்கிய மேற்படும்படிச் செய்வதனாலும் சரும சுகத்தைப் பாதுகாப்பதனாலும், சரும அழகை உண்டுபண்ணுகிறதென்றே சொல்லலாம்.

இதை ரெக்ஸோனா எப்படிச் செய்கிறது? முதலாவதாக, ரெக்ஸோனாவில் கிருமி நாசினியாகிய ''கேடில்'' என்னும் கியாதிபெற்ற கலப்பு மருந்து இருக்கிறது. இம்மருந்து சருமத்திற்கு குணமளித்துப் போஷிக்கும் தைலங்கள் சேர்ந்தது. இரண்டாவதாக, இச் சோப்பின் தாராளமாக விரைவிலுண்டாகும் நுரை, சுகமளிக்கும் ''கேடில்'' மருந்தை சரும உபத்திரவங்கள் அடிக்கடி ஏற்படும் சருமத்தின் அடிப்பாகத்திற்கு கொண்டுசேர்க்கிறது.

உங்கள் குடும்பத்தில் எல்லோரும் இந்த அழகான பசுமை வாய்ந்த ரெக்ஸோனா சோப்பைத் தினந்தோறும் உபயோகியுங்கள். மேலும், குழந்தைக்கு இச் சோப்பைப்போல குணமளித்துப் பாதுகாக்கும் மற்றொரு சோப் இல்லை என்பதை மறவாதீர்கள். ரெக்ஸோனா குழந்தையின் மெல்லிய சருமத்தைக் குளுமையாகவும், சுகமுடையதாகவும் செய்து காப்பாற்றுகிறது.

RP. 29-50-40 TM

REXONA PROPRIETARY LIMITED




# THE TRUTH IN YOUR HOROSCOPE

## Your Real Life Told Free

Would you like to know without any cost what the Stars indicate for you some of your past experiences, your strong and weak points, etc.? Here is your chance to test FREE the skill of Pundit Tabore, India's most famous Astrologer, who by applying the ancient science to useful purposes has built up an enviable reputation? The accuracy of his predictions and the sound practical advice contained in his Horoscopes on Business, Speculation, Finances, Love affairs, Friends, Enemies, Lotteries, Travels, Changes, Litigation, Lucky Times, Sickness etc., have astounded educated people the world over. GEORGE MACKEY of New York believes that Tabore must possess some sort of second sight.




To popularise his system Tabore will send you FREE your Astral-Inter pretation if you forward him your full name (Mr. Mrs. or Miss.), address and date of birth (English Calender) **all clearly written** by yourself. No money wanted for Astrological Work, postage etc., but send about 6 annas (Stamps) for stationery, testimonials and other interesting literature. Tabore believes in fair dealings and all work for which he receives any payment is on the basis of satisfactions guaranteed or full money refunded. You will be amazed at the remarkable accuracy of his statement about you and your affairs. Please write and correspond in ENGLISH only. Write now as this offer may not be made again. No personal interviews, all consultations by mail only. Address: PUNDIT TABORE (Dept. 308), Upper Forjett Street, Bombay 26.

# சீனாவின் புதிய குடியரசு

ஆர். ராமநாதன்

‘சீனப் புதிர்’ என்பது பழமொழி. புதிராக இருந்த சீனாவிலே, உள் நாட்டுக் குழப்பத்துக்கும், அன்னியனின் படையெடுப்புக்கும் ஆளாகி அவதிப்பட்டுக்கொண்டிருந்த சீனாவிலே, ஜனநாயகம் என்றால் என்ன என்பதை வெகு காலமாக அறியாத சீனாவிலே, புதிய ஜனநாயகக் குடியரசு பிறந்திருக்கிறது! சீன விவசாயிகள் நெடுங்காலமாக ஜமீன்தாரி முறை என்னும் இரும்புப் பிடியில் அகப்பட்டுக்கொண்டு, மூச்சு விடவும் சக்தியற்றுத் திணறினார்கள். சீனாவிலே தொழிலாளர்களின் நியாயமான உரிமைகள் மிதித்துத் தேய்க்கப் பட்டன; பிரஜா உரிமை என்ற பேச்சுக்கே இடமில்லாதிருந்தது. சீனா உண்மையிலே கோமின்டாங் ஆட்சியில் ஒரு ‘பேய் வனமாக’த் திகழ்ந்தது.

ஒரு கட்சி சர்க்கார், ஒரு தலைவன், ஒரு கொள்கை என்பது சியாங்கின் வேதம். ‘இம் என்றால் சிறைவாசம், ஏனென்றால் வனவாசம்’ என்பது அவருடைய மந்திரம். பழமை என்னும் கடலிலே சீனர்கள் மூழ்கி மடிய வேண்டும் என்பது சியாங்கின் கோட்பாடு. அவரது ஆதிக்கத்தில் சரித்திரச் சக்கரத்தைத் திருப்பி வைக்கப் பெரு முயற்சி நடக்கிறது. ஆனால், அவருடைய ஆதிக்கத்துக்கு வெளியிலே, ஒன்பது கோடி சீனர்கள் அடிமைக் கட்டை அறுத்தெறிந்து விட்டு, உளுத்துப்போன மத்திய காலக் கொள்கைகளை உமிழ்ந்து தள்ளி விட்டு, புத்தப் புதிய ஜன நாயகத்தை நோக்கி விரைந்து செல்லுகிறார்கள்!

ஆம்; ஈனானைத் தலை நகராகக் கொண்ட ஷென்சி-சான்சு-நிங்ஷியா எல்லைப் பகுதியைத் தான் இங்கே குறிப்பிடுகிறோம். அங்கே, சீனக் கம்யூனிஸ்டுகள் புதிய சீனாவுக்கு, ஜன நாயக சீனாவுக்கு அஸ்திவாரக் கல் நட்டார்கள்; அந்த அஸ்திவாரத்தின் மீது, ஓர் இன்ப மாளிகையும் கட்டினார்கள். ‘குடி மக்கள் சொன்னபடி குடி வாழ்வு’ அங்கே நடக்கிறது.

இந்தக் குடியரசு சர்வ வியாபகமான தேசீய ஐக்கிய முன்னணியின் வெற்றிச் சின்னமாகும். சீன எதிர்ப்புப் போராட்டத்திலே சீனக் கம்யூனிஸ்டுகள், தேச மக்களை ஒன்றுபடுத்தினார்கள்; ஜப்பானியரிடமிருந்து திரும்பக் கைப்பற்றப் பட்ட இடங்களிலே, குடியரசை நிறுவினார்கள்.

இந்தக் குடியரசை வீழ்த்த, சீனப் பிற்போக்காளர்கள் செய்த முயற்சிகள் அநேகம். பாசிஸ எதிர்ப்புப் போராட்டத்தின் முன்னணியில் நின்ற இந்தக் குடி

**சீனாவிலே, உள்நாட்டு யுத்தம் மூண்டிருக்கிறது. அந்த யுத்தத்தின் இரு கட்சிகளில் ஒன்றைப்பற்றி, நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். அது சியாங்கின் சர்க்கார். இன்னொரு கட்சியைப்பற்றி, நம்மில் அநேகருக்கு அதிகமாய்த் தெரியாது. அது கம்யூனிஸ்டுகளால் ஸ்தாபிக்கப்பட்ட புதிய குடியரசு சர்க்காராகும். அதைப்பற்றிய ரசமான விவரங்களை இங்கே காணலாம்.**

யரசு வீரர்களுக்கு, ஆயுதங்களை மறுத்தார்கள்; ரண வைத்திய உதவியை நிராகரித்தார்கள்; பொருளுதவியை மறுத்தார்கள். இவர்கள் மத்திய சர்க்காரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்களாயிருந்தும்கூட, இத்தனை நிராதரவும் செய்தார்கள். இது மாத்திரமல்ல. பாசிஸத்துக்கு எதிரான யுத்தம் நடந்து கொண்டிருந்தபோது, அடிமைத் தனம் என்னும் நுகத்தின் கீழே சீன மக்கள் நெளிந்து கொண்டிருந்த போது, சுங்கிங் சர்க்காரின் தேர்ந்த துருப்புகள், ஜப்பானியரை எதிர்த்துப் போர் புரிவதற்குப் பதிலாக, புதிய குடியரசை வளைத்துக் கொண்டன. முற்றுகை பலமாயிருந்ததால், குடியரசுக்கு உலகத் தொடர்பு அற்றுப் போயிற்று. இவைகளால் புதிய குடியரசு தளர்ந்து விழுந்து விடவில்லை. அது புதிய நிலைமைக்குத் தகுந்தவாறு, புதிய முறைகளை மேற்கொண்டது.

ஆயுதமின்றி ஆயுத பலம் படைத்த எதிரியை வீழ்த்த முடியாது அல்லவா? எனவே, புதிய குடியரசு வீரர்கள் - பிரசித்தி பெற்ற நான்காவது, எட்டாவது பட்டாளங்களைச் சேர்ந்த தேச பக்தர்கள் - எதிரிகளின் ஆயுதங்களைக் கொண்டே, எதிரிகளைக் கொன்று குவித்தார்கள். இதை எப்ஸ்டீன் அழகாக வர்ணிக்கிறார்: ''கோமின்டாங் பகுதியிலே எதிரிகளிடமிருந்து அபூர்வமாய்க் கைப்பற்றப்பட்ட ஒன்றிரண்டு ஆயுதங்கள், காட்சிச் சாலையிலே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், ஈனன் பகுதியிலே ஒவ்வொரு சிப்பாயிடமுமே, எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒவ்வோர் ஆயுதம் இருக்கிறது.''

ஈனன் குடியரசு சீனாவின் வடமேற்கில் இருக்கிறது. அங்கே ஒன்பது கோடி மக்கள் வசிக்கிறார்கள்.

பழம் பெருமை வாய்ந்த ஈனன் நகரத்தை, ஜப்பானியப் பாசிஸ்டுகள் தரைமட்டமாக்கினார்கள். ஆனால், பாசிஸ்டுகள் எரித்துச் சாம்பலாக்கிய அந்த இடத்திலே, ஒரு புதிய நகரத்தை, சீனக் கம்யூனிஸ்டுகள் சிருஷ்டித்தார்கள். இதைக் 'குகை நகரம்' என்றும் அழைக்கிறார்கள். ஈனன் குடியரசின் தலைமைக் காரியாலயம் அங்கே இருக்கிறது; பாசிஸத்தை ஓட ஓட விரட்டிய எட்டாவது, நான்காவது பட்டாளங்களின் தலைமைக் காரியாலயமும் அங்கேதான் இருக்கிறது; சீனாவைப் புது யுகத்தை நோக்கி இழுத்துச் செல்லும் முன்னேற்ற சக்தியும் அங்கேயே இருக்கிறது. இந்த அனைத்தும், பரந்த, விசாலமான குகைகளிலே தான் இருக்கின்றன.

ஷென்சி-கான்சு-நிங்ஷியா எல்லைப் பகுதியில், சீனா இதுவரையில் கண்டிராத, ஒரு புதுமாதிரியான சர்க்கார் ஏற்பட்டிருக்கிறது.

தேசத்தை ஆளும் பொறுப்பு ஜனங்களின் சபையைச் சேர்ந்தது. இந்த ஜனங்களின் சபைக்குச் சட்டமியற்றும் அதிகாரமுண்டு; அந்தச் சட்டத்தை அமுல் நடத்தும் உரிமையும் உண்டு. இந்தச் சபைக்குத்தான் முடிவான அதிகாரம்.

ஈனன் குடியரசு, வயது வந்தோர் அத்தனை பேருக்கும்- பெண்கள் உள்பட - ஓட்டுரிமை அளித்திருக்கிறது. ஜனங்களின் சபைக்கு, நேரடியாகத் தேர்தல் நடைபெறுகிறது.

இந்தச் சபையின் இரண்டு கூட்டங்களுக்கு மத்தியில், இந்தச் சபையின் நிரந்தரக் கமிட்டியும் எல்லைப்பகுதி நிர்வாகக் கமிட்டியும் தேசத்தை நிர்வகிக்கின்றன. இந்த இரண்டு கமிட்டிகளையும் ஜனங்களின் சபைதான் தேர்ந்தெடுக்கிறது.

கிராமத்தைக் கிராம சர்க்கார் ஆளுகிறது. இந்தக் கிராம சர்க்காரும், பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறது. கீழே கிராம சர்க்கார்; மேலே ஜனங்களின் சபை. இந்த இரண்டுக்கும் மத்தியில் ஜில்லா சர்க்கார், மாகாண சர்க்கார் முதலியவை, ஜனங்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இதுவே புதிய குடியரசின் அரசியல் அமைப்பு. அரசியல் நிர்வாகத்தை ஜனங்கள் நேரடியாக நடத்துகிறார்கள் என்றே இதற்கு அர்த்தமாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கண்காணிக்கவும், கடமையில் தவறுகிறவர்களைப் பதவியிலிருந்து விலக்கவும், ஜனங்களுக்கு உரிமையுண்டு.

"வெற்றியிலே பிறக்கும் ஜனநாயகக் குடியரசு, அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலுமிருந்த பழைய குடியரசுகளுக்கு முற்றும் மாறுபட்டதாயிருக்கும். ஆனால், நாங்கள் உடனடியாகச் சிருஷ்டிக்க விரும்புவது சோவியத் ஆட்சிமுறை அல்ல; ஆனால், ஒரு புது மாதிரியான ஜனநாயகக் குடியரசு" என்கிறார் மோ-ஸே-டங்.

ஆனால், கம்யூனிஸ்டுகளால் சிருஷ்டிக்கப்பட்ட இந்தப் புதிய குடியரசில் கம்யூனிஸ்டுக் கட்சிக்கு மூன்றில் ஒரு பங்கு, ஸ்தானம்தான் இருக்கிறது. புதிய சர்க்காரில் கோமின்டாங்குக்கு ஒரு பங்கும், கம்யூனிஸ்டுக் கட்சிக்கு ஒரு பங்கும், ஏனைய கட்சிகளுக்கு ஒரு பங்கும் பிரதிநிதித்துவம் வேண்டும் என்று மோ-ஸே-டங் வகுத்த பிரசித்திபெற்ற கொள்கை, புதிய குடியரசில் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது. ஏனென்றால், புதிய சர்க்கார் சர்வ கட்சி சர்க்காராக இருக்கவேண்டுமென்பது, கம்யூனிஸ்டுகளின் முடிவு.

புதிய குடியரசின் ராணுவம் கூலிப்பட்டாளம் அல்ல. கொள்கைப் பிடிப்பும், அரசியல் தெளிவும் படைத்தவர்கள், சுதந்தர சேனையின் வீரர்கள். அந்தச் சேனை ஜனங்களுக்கு மத்தியில் பிறந்தது; ஜனங்களுக்கு மத்தியில் வளர்கிறது. "ஜன சமுத்திரத்தில் ஒரு மீன் போன்றது எங்கள் ராணுவம்" என்கிறார் சூ-டே

புதிய குடியரசு கட்டாய ராணுவ சேவையை அமுலுக்குக் கொண்டுவரவில்லை. ஜனங்களின் சுய விருப்பத்தின் மீது படை திரட்டப்படுகிறது. என்றாலும், லட்சக்கணக்கான வீரர்கள் ராணுவத்தில் சேர முன்வருகிறார்கள். ஆனால், ராணுவத்தில் சேர விரும்புகிறவர்களையெல்லாம் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. காரணம் குடியரசிடமிருந்த ஆயுதங்கள் ரொம்பக் குறைவாயிருப்பதேயாகும்.

புதிய ராணுவத்தின் விதிகள் மிக்க கடுமையானவை. போர் வீரர்கள் ஜனங்களின் உண்மையான தொண்டர்களாக விளங்க வேண்டுமென்பது புதிய குடியரசின் தீர்ப்பு. பொதுவாக ஜனங்களிடத்திலும், குறிப்பாகப் பெண்களிடத்திலும், சிப்பாய்

கள் மிகவும் கண்ணியமாக நடந்து கொள்ளவேண்டும். பெண்களிடம் தவருக நடந்து கொள்ளுகிறவர்களுக்கு, மரண தண்டனை விதிக்கப்படும்.

போர் புரியாத காலத்தில், சிப்பாய்களுக்கு அரசியல் அறிவு புகட்டப்படுகிறது. இதைத் தவிர, சிப்பாய்கள் ஒய்வு நேரங்களில் விவசாயிகளுக்கு உதவிபுரிவார்கள். கிராமவாசிகளோடு, கிராமவாசிகளிலே ஒரு பகுதியாகவே, சிப்பாய்கள் வாழ்கிருர்கள். எனவே, ஜனங்கள் இவர்களை இதய பூர்வமாக நேசிக்கிருர்கள்; இந்த ராணுவத்தைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்கிருர்கள். உண்மையில் இது ஜனங்களின் ராணுவம்; தேச பக்தியும், தியாக உணர்ச்சியும், நல்லொழுக்கமும் படைத்த ஒப்பற்ற ராணுவம் இது!

சீன ஒரு விவசாய நாடு. விவசாயிகள் சீனவில் பழைய ஜமீன்தார்களின் ரத்ததாகத்தைத் தணிக்க வேண்டி யிருக்கிறது. எலும்பு முறியும்படியாக வேலை செய்த விவசாயி - தானியத்தை உற்பத்தி செய்து மலைபோல் குவித்த விவசாயி - உணவுக்கு வகையின்றி வாழ்கிருன். ஏன்? வட்டியும், வரியும் அங்கே அவ்வளவு அதிகமா யிருக்கின்றன.

ஈனன் குடியரசு, நிலப் பிரச்சினையிலே தலைகீழ் மாறுதலை உண்டுபண்ணி விட்டது. தாங்க முடியாத வரிப் பளுவை, அது பெரிதும் குறைத்தது. விளையும் தானியத்தை அடிப்படையாகக் கொண்டு, சர்க்கார் நிர்வாகத்துக்குத் தேவையான மிகக் குறைந்த வரியையே வசூலிக்கிறது.

பழமையிலே நெளிந்துகொண்டிருந்த விவசாயிகளுக்கு, ஈனன் குடியரசு புதிய விவசாய முறைகளைக் கற்றுக் கொடுத்தது; விவசாயக் கருவிகளைக் கொடுத்தது; கடனும் கொடுத்தது. எனவே, விளைவு பன்மடங்கு அதிகரித்தது. கூட்டுப் பண்ணைகள் எங்கும் மலிந்தன. இருள் சூழ்ந் திருந்த விவசாயிகளின் குடிசைகளிலே, புத்தொளி வீச ஆரம்பித்தது.

விவசாயிகளின் அறியாமையைத் துடைப்பதிலும், குடியரசு கவனம் செலுத்தியது. விவசாயிகளின் குழந்தைகள் கல்வி கற்கத் தேசமெங்கும் ஆரம்பப் பள்ளிகள் ஸ்தாபிக்கப்பட்டன. இத்துடன், முதியோர் கல்வி கற்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது. முதியோர் கல்வி இயக்கம் அதிவேகமாய் முன்னேறியது. எழுத்தறிவற்றோர் நிறைந் திருந்த இந்தப் பிரதேசம், எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் நிறைந்த பிரதேசமாயிற்று.

விடுதலை அடைந்த சீன - குடியரசுச் சீன - விவசாயப் பிரதேச மாகும். ஆரம்பத்தில் அங்கே தொழிற்சாலைகள் மருந்துக்கும் இல்லை. ஆனல், வளரும் குடியரசுக்குத் தொழிற்சாலைகள் மிக மிக அவசிய மாகும்.

தொழிற் சாலைகளை அமைக்க இயந்திரங்கள் வேண்டும் அல்லவா? சீனவில் இயந்திரங்கள் உற்பத்தி செய்யப்பட வில்லை. எனவே, அவை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும். ஆனல், வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களை இறக்குமதி செய்ய, கோமின்டாங் சர்க்கார், புதிய குடியரசுக்கு அனுமதி அளிக்க வில்லை! ஆயினும், கஷ்டங்களுக்கும், சிக்-

கல்களுக்கு மிடையே, புதிய குடியரசு முன்னேறிச் சென்றது.

"இன்றுள்ள நிலையில் நமக்கு முன்னிருக்கும் வழிகள் மூன்று: பட்டினியால் சாவது; சரணுகதி அடைவது; உற்பத்திப் பெருக்கிலே ஈடுபட்டு வெற்றிக்காக நம் சக்திகளை யெல்லாம் பயன்படுத்துவது" என்ருர் மா. சீனர்கள் மூன்ருவது வழியைப் பின்பற்றினுர்கள்.

விடுதலை யடைந்த சீனுவில் புதிய தொழிற் சாலைகள் தோன்றின. இவைகளில் அநேகம், தொழிலாளர்களின் கூட்டுறவு ஸ்தாபனத்துக்குச் சொந்தம். மற்றவை சர்க்காருக்குச் சொந்தம்; அல்லது தனி முதலாளிகளுக்குச் சொந்தம்.

தொழிலாளர்களின் உரிமைகள் சட்ட ரீதியாகப் பாதுகாக்கப் பட்டன. முதலாளிகளும், தொழிற் சங்கங்களும் கூட்டு உடன் படிக்கைகள் செய்து கொண்டன. தொழிலாளர்களின் சம்பளம், சட்ட ரீதியாக நிர்ணயிக்கப் பட்டது; வேலை நேரமும் நிர்ணயிக்கப் பட்டது. உற்பத்தித் திட்டம், தொழிற் சங்கத்துடன் விவாதித்து முடிவு செய்யப் படுகிறது. ஒவ்வொரு பாக்டரியும் தொழிலாளர்களுக்கு ஓய்வு விடுதிகள் முதலிய வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்.

புதிய புதிய ஆராய்ச்சிகளிலே தொழிலாளர்களே ஈடு படுகிருர்கள். நிலத்திலிருந்து அவர்கள் சுய முயற்சியால் நிலக்கரியும், இரும்பும், லோகங்களும் தோண்டி எடுக்கிருர்கள். இந்த வேலைகளிலே தொழிலாளர்கள் ஒருவருக் கொருவர் உற்சாகத்துடன் போட்டி போடுகிருர்கள். ஏன்? தங்கள் நன்மைக்காக—தேசத்தின் நன்மைக்காக. கடமையைச் செய்வதிலே அவர்களுக்குப் பெருமை!

சீனுன் குடியரசிலே 255 கூட்டுறவு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவைகளில் 1,15,600 பேர் அங்கத்தினர்களாக இருக்கிருர்கள். இவைகளின் மொத்த மூலதனம் பதினைந்து கோடி வெள்ளி. தேசத்தின் பொருளாதார நிலையை உயர்த்துவதே, இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களின் நோக்கம்.

இதே போல, வைத்தியக் கூட்டுறவு ஸ்தாபனங்களும், உற்பத்தியாளர் கூட்டுறவு ஸ்தாபனங்களும், பண்டங்களை வாங்குவோரின் கூட்டுறவு ஸ்தாபனங்களும் இருக்கின்றன. இவைக ளெல்லாம் ஜனங்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதிலே, விசேஷ கவனம் செலுத்துகின்றன.

சீனுன் குடியரசிலே ஒன்பது கோடி சீனர்கள் புது வாழ்வு வாழ்கிருர்கள். தேசியம், ஜனநாயகம், உன்னத வாழ்க்கை என்ற சன்-யாட்-சனின் முப்பெரும் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, புதிய சீனுவைச் சிருஷ்டித்து வருகிறது சீனக் கம்யூனிஸ்டு கட்சி. கொள்ளைக்காரர்கள் வசிக்கும் நாடு, மனித சமூகத்தின் விரோதிகள் வாழும் நாடு என்று, கோமின்டாங்கும் உலகப் பிற்போக்காளர்களும் இதைத்தான் அழைக்கிருர்கள்! சீனக் கம்யூனிஸ்டுகள் சிருஷ்டித்த இந்தப் புதிய சீனுவை அழிக்கத்தான், சீனப் பிற்போக்காளர்கள் முயலுகிருர்கள்!

✲

# அதிகார அலங்கோலம்

கி. உ. ஆசிரியர்

'கிராம உத்யோக்' பத்திரிகையை நிறுத்தி வைத்திருந்த காலத்தில், நாங்கள் பல சுற்றறிக்கைக் கடிதங்கள் வெளியிட்டோம். அவற்றில் ஒன்றில், அகில இந்தியக் கிராமக் கைத்தொழில் சங்கத்தால் புனாவில் அமைக்கப் பெற்றிருந்த கைக்காகித ஆராய்ச்சிச் சாலையையும் காட்சிச் சாலையையும் பம்பாய் சர்க்கார் தம் வசமாக்கிக்கொண்டதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். இந்தத் தொழில் நிலையம் 1940-ல் தொடங்கப் பெற்றது. தளவாடச் செலவுக்கும் நடைமுறைச் செலவுக்கும், சர்க்கார் நிதி உதவினார்கள். காங்கிரஸ் மந்திரி சபை பதவியில் இருந்து வந்த காலத்தில், இதற்கு உதவித் தொகை வழங்கி வருவதெனத் தீர்மானித்து, அப்படியே மான்யம் தந்து வந்தார்கள். 1943-44 வருஷ முடிவு வரைக்கும், நடைமுறைச் செலவுக்குத் தொடர்ந்து மான்யம் அளித்து வந்தார்கள்.

ஸ்ரீஜத் கே. பி. ஜோஷிதான் எங்களுக்கு ரசாயன விஷயங்களில் ஆலோசனை கூறுகிறவர். இவர் போட்ட ஆசுப்படி, இவரது மேற்பார்வையில், தனிக் கட்டிடம் ஒன்று கட்டப் பெற்றது. விசேஷ ஊக்கத்தோடு இவர் இந்த நிலையத்தை நடத்தி வந்தார். நிலையத்துக்கு அரிய முறையில் தொண்டாற்றி வந்தார். அருமையான கிராமக் கைத்தொழில் ஒன்றுக்குத் திட்டம் போட்டு, ஆராய்ச்சி வேலை செய்கிற விஷயத்தில், இந்த ஸ்தாபனம் ஒரு புது முயற்சியாகும்.

அதனால், இந்தியா வெங்கும் உள்ள பலருடைய கவனத்தையும் இது வெகுவாகக் கவர்ந்தது. கைத்தொழில் விளக்கக் காட்சிச் சாலையாக இருப்பதோடு மட்டும் இது நின்று விடவில்லை. பரம்பரையான பழைய முறைப்படி கத்தீர்கள் செய்து வந்த இந்தத் தொழிலில் மேலும் வளர்ச்சி ஏற்படவும், சிறுசிறு காகிதத் தொழிற் சாலைகள் உண்டாக்குவதற்கு ஆசுப் படம் வரையவும், நிலையம் உதவி புரிந்து வந்தது. மேலும், தொழில் நுணுக்கம் பற்றிய மட்டில், அனுபவத்தையும் அனுமானத்தையும் சேர்த்துப் பிணைத்து, கத்தீர்களும், மற்றவர்களும் தொழிற் பயிற்சி பெறுவதற்கு, அது வசதிகள் செய்து வைத்தது. அதே சமயத்தில், ஏராளமாகக் காகிதமும் செய்து கொண்டு வந்தது. வரி செலுத்துவோரின் பணமான சர்க்கார் மான்யத்திலிருந்து செய்யும் செலவைக் குறைத்துக் கொண்டே வந்தது. வட்டிகட்டுகிற தாள், சித்திரம் வரைகிற தாள் இவையும், இதர பல வகைத் தாள்களும் செய்து வந்தது. கைக் காகிதத்

**அற்புதமாய் நூல் நூற்கும் இந்தியர்களின் கட்டை விரல்களை வெட்டி, இந்தியநெசவுத் தொழிலைக் கொன்றார்களாம். இது கிழக்கிந்தியக் கம்பெனியார் காலத்துக் கதை. ஆனால், இந்திய அரசியல் எப்படியிருந்தாலும், இந்தியக் கைத்தொழில்கள் முன்னேறுவதில் தங்களுக்கு அபார அக்கறை இருப்பதாக, இப்போதைய இந்திய சர்க்கார் சொல்லுகிறார்கள். ஆனால், 'கிராம உத்தியோக்' பத்திரிகையின் இந்தத் தலையங்கம் எதை நிரூபிக்கிறது?**

தொழிற் சாலையில், மேற்படி காகிதங்களைச் செய்ய முடியுமென்று யாரும் எண்ணவில்லை.

இந்த நிலையத்தைத் தாங்களே ஏற்று நடத்த விரும்புவதாக, 1944 தொடக்கத்தில் பம்பாய் சர்க்கார் அறிவித்தார்கள். இப்படி அறிவித்தபோது, மேலே கண்ட இத்தனை வித வேலைகளையும் சர்க்கார் லட்சியம் செய்யவில்லை என்றே தோன்றுகிறது. நிலையத்தைச் சர்க்கார் எடுத்துக் கொண்டதற்கு என்ன காரணம்? சர்க்கார் அறிக்கை அதை விளக்கியிருக்கிறது. கைக்காகித உற்பத்தியின் அளவை அதிகரிப்பதன் பொருட்டு, நிலையத்தைத் தாங்களே உபயோகிக்கச் சர்க்கார் விரும்புவதாகவே, அந்த அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஐந்து வருஷம் வரைக்கும் இந்த நிலையம் அ. இ. கி. கை. சங்கத்தின் பொறுப்பிலேயே விட்டுவிடப் பட்டிருந்தது. அப்படியிருந்தும், இந்த முடிவுக்கு வருமுன்பு, உற்பத்தி அதிகரிப்பு விஷயத்தில் நிலையம் தங்களுக்கு ஒத்தாசை செய்யக் கூடுமா என்று நிலையத்தாரைக் கலந்து கொள்ளச் சர்க்கார் நினைக்கவில்லை. அ. இ. கி. கை. சங்கத்திடம் அவர்கள் நியாயமாக நடந்து கொள்ளவில்லை என்பதைச் சுட்டிக் காட்டிய பிறகும்கூட, சர்க்கார் தங்கள் முடிவைப் புனராலோசனை செய்ய மறுத்து விட்டார்கள்.

இந்தச் செயல் விபரீதமானதாகும். பின்னால் நடந்திருக்கும் நடப்பு, இதை இன்னும் விபரீதமாக்கி விட்டது. நிலையத்தைச் சர்க்கார் ஏற்றுக்கொண்டு இன்னும் ஒன்றரை வருஷம்கூட ஆகவில்லை. அதற்குள்ளேயே, இந்த நிலையத்தால் எவ்வித உபயோகமுமில்லையென்றும், இதை மூடிவிடுவதே சரியென்றும், திடீரென்று சர்க்கார் கண்டுபிடித்துவிட்டார்கள். ஒருவேளை, எதிர்பார்த்த அளவுக்கு உற்பத்தியை அதிகரிக்க முடியவில்லை போலும்! இந்த நிலையத்தைத் துவக்கியபோது, சங்கத்துக்கு எந்த விதமான நோக்கங்கள் இருந்தன? காகிதம் செய்வதில் ஆராய்ச்சிகள் நடத்துவது; காகிதம் செய்யப் பயிற்சி பெறுவதற்கு வசதிகள் உண்டாக்கித் தருவது; இந்தப் பழமையான தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் கண்கண்ட உதாரணத் தொழிற்சாலையாக இருந்து வருவது-இவையெல்லாம் சர்க்கார் நிர்வாகத்தின் கீழே கவனிக்கப் படாமல் கைவிடப்பட்டன. நிலையம் உண்டாவதற்குப் பொறுப்பாயிருந்துவந்த ஸ்தாபனத்தைக் கேட்காமலே, சர்க்காரின் இந்த இரண்டாவது முடிவும் செய்யப்பெற்றிருக்கிறது. ஆனால், சர்க்கார் இன்னது செய்யப் போகிறார்கள் என்று அ. இ. கி. கை. சங்கத்துக்குத் தெரிய வந்தவுடன், நிலையத்தைச் சங்கமே மீண்டும் ஏற்று நடத்தும் என்றும், இதை நடத்த ஆகும் செலவுக்குச் சர்க்கார் மான்யம் தர வேண்டியதில்லை என்றும், சர்க்கார் மான்யம் இல்லாமலேயே இதை நடத்தி வருகிறோம் என்றும். அ. இ. கி. கை. சங்கம் சர்க்காரிடம் சொல்லிற்று. இது வரையில் சர்க்கார் தரப்பிலிருந்து எவ்விதப் பதிலும் வரவில்லை. காகிதம் செய்வதற்கு உகந்த முறையில்-யந்திர சாதனத் தளவாடங்களை வைத்துக் கொள்ளத் தோதான முறையில் - இதற்கென்று பொருத்தமாக அமைத்த கட்டிடத்தை, வேறு எதற்காகவோ உபயோகிக்கப் போவதாகவும், நிலையத்தை மூடிவிடப்

போவதாகவும் சர்க்கார் செய்த முடிவு மாறப்போவதில்லை என்றே தோன்றுகிறது. என்ருலும், மீண்டும் யோசித்து நல்ல தனமாக நடந்து கொள்வார்களென்றே இன்னமும் நம்புகிறோம்.

இதெல்லாம் இருக்கட்டும், நம்முடைய தொண்டர்கள் சம்பளத்துக்காக வேலை செய்யும் சர்க்கார் ஊழியர்களல்ல. சர்க்கார் ஊழியர்களுக்குத் தாங்கள் செய்யும் வேலையில் மனம் படிந்திராது. தங்களுடைய வருவாய் மட்டும் தடைப்படாமல் இருந்தால், தாங்கள் புரிந்து வரும் பெரும் கடமைகள் எக்கேடு கெட்டாலும், அவர்கள் கவலைப் படப்போவதில்லை. நம்முடைய தொண்டர்களோ, தாங்கள் செய்யும் வேலையில் கருத்துப் படிந்திருப்பவர்கள்; உயிரையும் உள்ளத்தையும் வேலையில் ஈடுபடுத்திப் பணி புரிகிறவர்கள். அவர்கள் உண்டாக்கியதை வேண்டுமென்றே அழித்தால், தலைப் பிள்ளையை இழந்து தவிக்கிற தாய்போல், அவர்கள் வேதனை யடைகிருர்கள். கைத்தொழிலுக் கெனத் தனி ரீதியில், காகிதத்தை மிதித்து நசுக்கும் குழிகள், ஊற வைக்கும் தொட்டிகள் போன்ற வசதிகளோடு அமைந்த ஒரு கட்டிடத்தை, வேறு காரியத்துக்காக உபயோகிப்பது எப்படியிருக்கிறது? கல்ட்டர் பாமர் என்ற கம்பெனிக்காரர், பெல்லாசிஸ் ரோட்டில் உள்ள ஒரு மாதா கோவிலைச் சாராயக் கிடங்காக உபயோகித்தார்களே, அந்த மாதிரிதான் இருக்கிறது.

நாட்டு ஆக்க வளர்ச்சிக்கான பணிகளில் சர்க்காருக்குத் தெளிவான, தொடர்பான கொள்கை இல்லை என்பதையே, சர்க்காரின் இந்தச்செயல் காட்டுகிறது. பதவி மாறி வருகிற அதிகாரிகளின் சித்தப்படியெல்லாம், நடவடிக்கைகள் மாறுகின்றன. அந்நிய ஆட்சி நிலைத்திருக்கும் வரையில், இத்தகைய விபரீதங்கள் நிகழ்வதைத் தடுக்க முடியாமற் போகலாம். ஆனல், ஆக்க வேலைகளிலே அவர்களோடு ஒத்துழைக்க உள்ள சந்தர்ப்பங்களைக்கூட, இந்த மாதிரி நிகழ்ச்சிகள் நாசமாக்கி விடுகின்றன.

இப்போது இந்த விஷயங்களைப் பகிரங்கமாகச் சர்க்கார் கவனத்துக்கும் பொது மக்களின் கவனத்துக்கும் கொண்டு வந்திருக்கிறோம். சர்க்கார் இப்போதாவது, அ. இ. கி, கை, சங்கத்தின் கோரிக்கைக்குச் சம்மதித்து, அது உடனே வேலைப் பொறுப்பேற்றுக் கொள்ள அனுமதிப்பதோடு, நாட்டில் நெடுங்காலமாக இருந்து வரும் தேவைக்கு இவ்வாறே தொடர்ந்தும் வசதி பண்ணிக் கொடுத்து வருவார்கள் என்று நாம் நம்புகிறோம்.

✲

## படித்தவனும் படியாதவனும்

அமெரிக்க ஜனதிபதியா யிருந்த தியொடோர் ரூஸ்வெல்ட் ஒருசமயம் பின்வருமாறு சொன்னர்: "ஒருநாளும் பள்ளிக்கூடத்துக்குப் போய்ப் படிக்காத ஒரு மனிதன், ஒரு குட்ஸ் வண்டியிலே திருடிவிடலாம்; ஆனல், அவனுக்குக் கல்லூரிப் படிப்புப் போதிக்கப்பட் டிருக்குமானல், அவன் ஒரு ரயில் பாதையையே திருடியிருப்பான்."

—ரெலிஜன் டைஜஸ்ட்



# லைப்பாய் பழக்கத்தையும் அவன் அறிந்திருக்கிறான்!



இப்பொழுது அவன் அதிக விஷயங்களைக் கற்றுக்கொள்கிறான். ஆனால் லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிக்கும் பழக்கம் தவிர, வாழ்க்கையில் அவனுக்கு வேறொன்றும் அதிக நன்மை செய்யப்போவதில்லை. பாதுகாப்பற்றவர்களை எல்லா இடங்களிலும் பீடிக்கிற அழுக்கு அபாயத்திலிருந்து தான் கற்பித்த புத்திமதிகள் அவனுக்குப் பாதுகாப்பளித்திருக்கிற தென்பதாக அவன் தாய் சந்தோஷமும், பெருமையும் அடையக்கூடும்.

**லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது. அது ஒரு நல்ல பழக்கம்**




L. 77-50 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED



## வண்டியின் ஜன்னலிலிருந்து எல்லாம் சரியாகத்தான் தோன்றுகிறது

ஆனால் பிரயாணி புன்னகை புரிவதில்லை. செழிப்புறத் தோன்றும் நிலங்களும் பழத் தோட்டங்களும், **விரைவில்** மறைந்து விடுகின்றன. அவைகளுக்கப்பாலுள்ள ஒன்றும் விளையாத விசாலமான வெட்டை வெளிகளே அவர் எண்ணத்தை கவர்கின்றன.

அதன் காரணத்தையும் அவர் அறியாமல் இல்லை. இந்தியாவில் உள்ள ஏழு லட்ச கிராமங்களில் பெரும்பாலானவை ரஸ்தாக்களினின்று தனித்தே நிற்கின்றன. கிராம வாசிகள் உணவுப் பொருள்களை அதிகமாக விளைவித்தாலும் அவைகளை மார்க்கட்டுக்கு அனுப்ப இடமில்லை. ரஸ்தாக்கள் ஏற்பட்டால் அவர்கள் அதிகமாக தானியங்களை விளைவிப்பதன்றி கைத்தொழில் சாமான்களையும் வாங்க ஏதுவாகும் விவசாயமும் கைத்தொழிலும் ஒன்றை ஒன்று சார்ந்தன. ஒன்றின் அபிவிருத்தியே மற்றொன்றின் வாழ்விற்கு காரணமாகும்.

பிரயாணி முன் நோக்குகிறார். கிராமங்களுக்கும், பட்டினங்களுக்கும், நகரங்களுக்கும், தேசத்தின் சுகாதாரத்திற்கும், சுபிக்ஷத்திற்கும் உயிர்ப்பொருளாயுள்ள சாமான்களை அனுப்ப, உடம்பிலுள்ள ரத்த குழாய் போலவும் வலை பின்னலைப்போலவும் உள்ள ரஸ்தாக்களை உடைய வருங்கால இந்தியாவைப் பார்க்கிறார்.



**நல்ல ரஸ்தாக்கள் செழிப்பிற்கு மார்க்கமாகும்**

# மின்சாரக் கனவு

எ. எம். ஜஹூருல் ஹக்

நவீன இயந்திரங்களை இயக்கும் சக்தி தரும் மூலப் பொருள்கள் நிலக்கரியும் எண்ணெயும். இந்தியாவில் இந்த இரண்டும், ஒரு நிதான மில்லாமல் எங்கெங்கோ அகப்படுகின்றன. அந்த இடங்களுக்கு வெகு தூரங்களிலே உள்ள பிரதேசங்கள், மலிவாய் மின்சார உற்பத்தி செய்ய முடியாமல் தவிக்கின்றன. ஏனென்றால், போக்குவரத்து வசதிகளில் கஷ்ட மிருக்கிறது. அதனால், எண்ணெய், நிலக்கரிகளின் விலை மிக உயர்வாயிருக்கிறது. இந்தக் காரணத்தினால், சமீபத்தில் சில வருஷங்களாக, நீர்விசையில் கவனம் செலுத்தி வருகிறார்கள். எண்ணெய், நிலக்கரி வசதிகள் குறைவா யிருக்கும் பிரதேசங்களில் நீர்விசையிலிருந்து மின்சார உற்பத்தி செய்ய முயன்று வருகிறார்கள்.

இந்த விஷயத்தில், சில வருஷங்களுக்குள்ளே ஆச்சரியப் படத்தக்க அபிவிருத்திதான் ஏற்பட்டிருக்கிறது. என்றாலும், கிடைக்கக்கூடிய நீர்விசையில், உபயோகத்துக்கு வந்திருக்கும் நீர்விசையின் விகிதம், மிக மிகக் குறைவாயிருக்கிறது. இது வரையில், இந்தியா பூராவிலும் 7-லட்சம் குதிரைச் சக்தியுள்ள நீர் விசைதான், உபயோகத்துக்கு வந்திருக்கிறது. ஆனால், இந்தியா முழுவதிலும் கிடைக்கக்கூடிய மொத்த நீர்விசையோ 360-லட்சம் குதிரைச் சக்தி அளவுடையதாகும். இவ்வளவு ஏராளமான நீர்விசையும், எந்நேரமும் வீணாகிக் கொண்டே யிருக்கிறது. இத்தனை நீர்விசைகளையும் நாம் உபயோகித்துக் கொண்டோமானால், உலகத்திலேயே எவரும் பொறாமைப் படத்தக்கவாறு ஆலைத் தொழில்களைப் படைத்திருக்கும் தேசங்களில் ஒன்றாக, இந்தியாவும் இருக்கும்.

> இந்தியாவில் 360 லட்சம் குதிரைச் சக்தியுள்ள நீர்விசை எந்நேரமும் உற்பத்தியாகிக்கொண் டிருக்கிறது. இதில் ஒரு துளி போக மிச்சமெல்லாம் வீணாகிக் கொண்டே யிருக்கிறது. இதை யெல்லாம் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்தால், கைத்தொழில் களெல்லாம் அமோகமாய் வளரும்; எத்தனையோ சுகங்கள் ஏற்படும். இதை விவரித்து, 'மாடர்ன் ரிவ்யூ' வில், வெளிவந்த ஒருகட்டுரையின் சுருக்கம் இது.

இந்தியாவில் நீர்விசை மின்சாரத் திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருவது, உண்மையிலே கஷ்டமா யிருக்கிறது. ஏனென்றால், நீர்விசை தொடர்ந்து கிடைப்பது அவசிய மாகும். இந்தியாவிலே ஒவ்வொரு பருவ காலத்தில் மட்டுமே மழை பெய்கிறது. எனவே, ஆறுகளிலே ஓடும் தண்ணீர் ஒரு நாள் வெள்ளமாகவும் இன்னொரு நாள் வறட்சியாகவும் போய்விடுகிறது. ஆகையால், தண்ணீரைச் சேகரித்து வைக்கும் பெருத்த அணைகளைப் பெரும் செலவில் கட்டவேண்டியதா யிருக்கிறது. இப்பேர்ப்பட்ட அணைகளைக் கட்ட ஆகும் செலவு, தனிப்பட்ட முதலாளிகளின் சக்திக்கு மீறிய தாகும். ஏதோ ஒன்றிரண்டு இடங்கள் மட்டில், இதற்கு விலக்கா யிருக்கின்றன. ஒரு சில திட்டங்களை

இதற்கு உதாரணம் கூறலாம். பம்பாயில் பிரம்மாண்டமான மின்சாரத் திட்டங்களை, டாட்டா கம்பெனியார் நிர்வகிக்கிறார்கள்; இந்தியாவின் வேறு சில இடங்களில் உள்ள ஹைடெல் திட்டங்களும் தனிப்பட்ட கம்பெனிகளால் நிர்வகிக்கப் படுகின்றன. இவைகளைத் தவிர மற்ற மின்சாரத் திட்டங்கள் அனைத்தும், சர்க்காராலேயே நிர்வகிக்கப் படுகின்றன.

மாகாணங்களுக்குள்ளே, சென்னை, ஐக்கியமாகாணம், பஞ்சாப் இந்த மூன்றும், இவ்விஷயத்தில் பெரிதும் முற்போக்கடைந்திருக்கின்றன. பக்காரா அணை, மேட்டூர் அணை, பாபநாசம் நீர் வீழ்ச்சி இந்த மூன்றும், நீர் விசை மின்சாரம் உற்பத்தி செய்கின்றன. ஆகையால், இந்தியாவின் பிற பாகங்களிலிருந்து, நிலக்கரியையும் எண்ணெயையும், சென்னை எதிர்பார்த்திருக்க வேண்டியதில்லை. அது மட்டிலுமல்ல; கைத்தொழில்களுக்கும், விவசாயத்துக்கும் தேவையான இயந்திர சக்தி மிகவும் மலிவாகக் கிடைப்பதால், மக்களின் சிரமங்களும் சென்னையில் ஓரளவு குறைந்திருக்கின்றன. உலகத்திலேயே மிகப்பெரிய அணைக்கட்டுகளில் ஒன்று மேட்டூர் அணை. முக்கியமாய் விவசாயப் பாய்ச்சலாதாரத்துக்காகவே, அது கட்டப்பட்டது. என்றாலும், நீரில் ஒரு பகுதி, மின்சார உற்பத்திக்காகவும் உபயோகப் படுகிறது.

மேட்டூர் அணையில், 33 ஆயிரம் குதிரைச் சத்தியுடைய மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. சென்னை அரசாங்க அதிகாரிகள், இன்னும் எங்கேயாவது நீர்விசை வசதிகள் கிடைக்குமா என்று ஆராய்ச்சி செய்து கொண்டேயிருக்கிறார்கள்.

பஞ்சாபில் மண்டி என்னுமிடத்தில் உள்ள உல்நதி அணைக்கட்டு ஒன்றுதான், இதுவரையில் சர்க்கார் கட்டியிருப்பது. அந்தக் கட்டிடம் கட்டுவதில் ரொம்ப அபாயங்கள் இருந்தன. மிகவும் உயரமான மலை உச்சியில், மின்சார உற்பத்தி நிலையங்களைக் கட்டியிருக்கிறார்கள். எஞ்சினீரிங் வேலையில் சிறந்த திறமையும் துணிச்சலும் கொண்டு அவை கட்டப் பெற்றிருக்கின்றன. இதுவரையில் இங்கே 64 ஆயிரம் குதிரைச்சக்தி மின்சாரம் உற்பத்தியாகிவருகிறது. வருங்காலத்தில் இன்னும் விஸ்தரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்து வைத்திருக்கிறார்கள். இதுவரையில் இதற்கு ஆகியிருக்கும் மொத்தச் செலவு 80 கோடி ரூபாயாகும். இந்த அணைக்கட்டைக் கட்டுவதிலே பல கஷ்டங்கள் இருந்ததால்தான், இவ்வளவு அதிகமான செலவு ஏற்பட்டது. இது மாதிரியேதான் எங்குமே செலவாகிவிடும் என்று எண்ணி விடக்கூடாது. ஆலைத்தொழில் நகரங்களான அமிர்தசரஸ், லூதியானா, லாகூர் ஆகியவைகளுக்கு, இந்த அணைக்கட்டிலிருந்து மின்ஸார சப்ளை கிடைக்கிறது. இது தவிர, வடமேற்கு ரயில்பாதைக்குத் தேவையான மின்சாரமும் இதிலிருந்து சப்ளையாகிறது.

ஐக்கிய மாகாணத்தில் மாகாண சர்க்கார், உருவான முயற்சி செய்து, நீர்விசை மின்சாரத் திட்டங்களை இயற்றியிருக்கிறார்கள். விவசாய நீர்ப்பாசனத்தையும் மின்சார உற்பத்தியையும், மிகவும் திறமையான முறையில் இங்கே இணைத்திருக்கிறார்கள். இந்தத் திட்டங்களின்

முழு வெற்றிக்கும் ஸர் வில்லியம் ஸ்டாம்பு என்பவரே பொறுப் பாவார். இந்தத் திட்டங்களால், 66 நகரங்களுக்கு மின்சார சப்ளை கிடைக்கிறது. பாய்ச்சலாதார மற்ற பல கிராமங்களில், விவ சாயிகள் தங்கள் புலன்களுக்குத் தண்ணீர் இறைக்க, இந்த மலி வான மின்சார சக்தியை உப யோகித்துக் கொள்கிறார்கள்.

சுதேச சமஸ்தானங்களில், இவ் விஷயத்தில் தலைமை தாங்கு வது மைசூர் தான். முதன் முத லாக இந்தியாவிலே பெரிய அள வில் நீர்விசை மின்சார உற்பத்தி செய்யத் தொடங்கிய இடம், சிவசமுத்திரத்தில் உள்ள காவேரி யின் நீர்வீழ்ச்சியே. அதில் 50 லட்சம் குதிரைச் சக்தி மின்சாரம் உற்பத்தியாகிறது. கைத்தொழில் களுக்கும் வீட்டு உபயோகங் களுக்கும், அது சப்ளையாகிறது. சமஸ்தான சர்க்காரே, இந்தத் திட்டத்தை நிர்வகிக்கிறது. இன் னும் எங்கெங்கே மின்சார உற் பத்தி வசதிகள் இருந்து வருகின் றன என்பதையும், சமஸ்தான சர்க்கார் ஆராய்ந்து வருகிறது. ஏராளமான கிராமாந்தரங்களுக் கெல்லாம், மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது.

காஷ்மீரம், ஜம்மு இந்த இரண்டு சமஸ்தானங்களிலும் நீர் விசை மின்சார உற்பத்தியில் நல்ல முன்னேற்றம் ஏற்பட் டிருக்கிறது. காஷ்மீர சமஸ் தானம், பாரமுல்லா என்னு மிடத்தில் ஜீலம் நதியின் தண் ணீரை உபயோகித்துக் கொண் டிருக்கிறது. ஜம்முவில், ராம் வீர் கால்வாயின் நீர் வீழ்ச்சியை உபயோகித்துக் கொண் டிருக் கிறார்கள். இவைகளால் கிடைக் கும் மின்சாரம், வீட்டு உப யோகங்களுக்குத்தான் பெரும் பாலும் உதவுகிறது.

அஸ்ஸாம் மாகாணத்தில் ஒரே ஒரு சிறு நீர்விசை மின்சார உற் பத்தி நிலையம்தான் இருக்கிறது. அது ஷில்லாங் நகரில் அமைந் திருக்கிறது. இதுவரையில் அங்கே இதற்குமேல் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படக் காணோம். என்றாலும், பூர்வாங்க ஆராய்ச்சிகள் புரிந்ததில், மின் சார உற்பத்திக்கு நிறைய வசதி கள் இருக்கின்றன என்று தெரிய வந்திருக்கிறது.

பீஹாரில், நிலக்கரிச் சுரங்கங் கள் ஏராளமாய் இருக்கின் றன. என்றாலும், இயந்திரங்களை இயக்கத்தக்க வேறு விதமான சக்திகள் கிடைக்க வழியுண்டா என்று பார்க்க, ஆலை முதலாளி கள் தீவிரமாய்ச் சிந்தித்து வருகி றார்கள். ஏனென்றால், பீஹாரில் பலவித உலோகச் சுரங்கங்கள் அமோகமாயிருந்து வருகின்றன. யுத்தத்துக்குப் பிற்காலம் கைக் கொள்ள வேண்டிய திட்டங் களில், நீர்விசை மின்சாரத்தைப் பற்றியும், அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

புதிதாய்ச் சிருஷ்டியான ஒரிஸ்ஸா மாகாணமும், அதற் குள்ளே நீர்விசை மின்சார விஷ யத்தில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. ஒரிஸ்ஸாவுக்கும் சென்னைக்கும் இடையிலுள்ள எல்லையிலே தோதுமா நீர்வீழ்ச்சி இருக்கிறது. அந்த நீர்வீழ்ச்சி யில் யாருக்கு உரிமை என்பது பற்றிச் சமீபத்தில் நடந்த விவ காரத்தில், ஒரிஸ்ஸாவின் சகல வகுப்பு மக்களும் சிரத்தையெடுத் துக்கொண்டார்கள். நீர்விசை மின்சாரம் எவ்வளவு முக்கியம் என்பதை இந்தியா வெங்குமே

மக்கள் உணர்ந்து வருகிருர்கள் என்பதைத் தான் இதெல்லாம் காட்டுகிறது.

வங்காளத்தில், ஒரு சிறிய நீர் விசை மின்சார நிலையம், டார்ஜீலிங்கில் முதன் முதலாக 1897-ஆம் ஆண்டிலேயே அமைக்கப் பட்டு விட்டது. என்ருலும், இந்தத் துறையில் இதுவரைக்கும் எவ்வித அபிவிருத்தியும் ஏற்படக் காணோம். கல்கத்தாவைச் சுற்றியே, ஆலைகளெல்லாம் அமைந் திருக்கின்றன. ராணிகஞ்சு நிலக்கரிச் சுரங்கங்களிலிருந்து. மலிவாய் நிலக்கரி கிடைக்கிறது. ஆகையால், அதைக்கொண்டே முக்கியமாய் இயந்திரங்களை ஓட்டிக்கொண்டிருக்கிருர்கள்.

கடைசியாக, இந்தியாவில் யுத்தத்துக்குப் பிந்திய திட்டங்களில் நீர் விசை மின்சாரத்தின் முக்கியத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறவேண்டும். எந்தத் திட்டத்துக்கும், இயந்திரங்களை ஓட்டத் தக்க சக்தி அவசிய மாகும். அதற்காக மத்திய சர்க்கார் செண்டிரல் டெக்னிக்கல் பவர் போர்டு என்ற ஒரு சபையையும் நியமித் திருக்கிருர்கள். மின்சார சக்தி உற்பத்தியை அபிவிருத்தி செய்வதும், தங்கள் உதவியைக் கோரும் மாகாண சர்க்கார்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் ஆலோசனைகள் கூறுவதும், அந்த போர்டாரின் வேலையாகும்.

ஆலைத் தொழில்களிலும் விவசாயத்திலும் இந்தியா அபிவிருத்தி யடையவேண்டுமாளுல், இந்த உபகண்டம் முழுவதும் மலிவாய் மின்சார சக்தி கிடைக்கும்படி செய்யவேண்டியது அவசிய மாகும். இதை இப்போது சகலமானவரும் அங்கீகரிக்கிருர்கள். இதற்கு நீர்விசை வசதிகளை ஆராயும் வேலை, முதலிலே அவ்வளவு கவர்ச்சியாய் இராமல் போகலாம். ஏனென்ருல், அதன் ஆரம்பச் செலவு, நிலக்கரி முதலியவைகளுக்கு ஆகும் செலவை விட அதிகமா யிருக்கும். தவிர, உற்பத்தியாகும் நீர்விசை மின்சாரத்துக்குப் போதிய மார்க்கட் இல்லையாகையால், எவரும் முதல் போடவும் தயங்கக் கூடும்.

ஆளுல், காலக்கிரமத்தில், நீர் விசை மின்சார உற்பத்தியே மிக அதிக லாபம் தரும் என்பதை நாம் உணரவேண்டும். இதில் மிதமிஞ்சிய போட்டிகளுக்கு இடங்கொடுக்க லாகாது. நீர் விசை மின்சார உற்பத்தி அபிவிருத்தியிலும், அதன் விநியோகத்திலும் சர்க்காரே பொறுப்பெடுத்துக் கொள்ளவும் வேண்டும்.

"அமெரிக்காவில் அபூர்வ அபிவிருத்தி யடைந்துள்ள டென்னெஸீ பள்ளத்தாக்கையே நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேன். அதில் எனக்கு நம்பிக்கையும் இல்லாம லில்லை. ஏனென்ருல், இந்தியாவில் உள்ள தாமோதரம், கங்கை, சட்லெஜ், நர்மதா, சோன் முதலிய எந்த நதியின் பள்ளத்தாக்கிலும், அந்த அற்புத அபிவிருத்திகள் அனைத்தும் ஏற்பட முடியும். ஆளுல், ஜனங்களும், சர்க்காரும், விஞ்ஞானிகளுக்கு ஒருசந்தர்ப்பம் கொடுக்க வேண்டும்" என்று, விஞ்ஞான நிபுணர் ஸர் எஸ். எஸ். பட்நகர் சொல்லுகிருர். இது அவருடைய கனவு மட்டிலும் அல்ல; இந்தியாவின் கோடிக்கணக்கான மக்களின் கனவுந்தான் ஆகும்.

*

# கறுப்புப் பூனை

பகவதி சரண் வர்மா

கறுப்புப் பூனை, வீட்டிலுள்ளவர்களில் மற்ற எவரையும் விட, ராமுவின் மனைவியிடம் அதிக விசுவாசம் காட்டியது. ஆனால், ராமுவின் மனைவிக்கு என்னவோ அந்தப் பூனையைக் கண்ணால் காணக்கூடப் பிடிக்கவில்லை. ராமுவின் மனைவி கல்யாணி வீட்டுக்கு வந்து, இரண்டு மாதம் தான் ஆயிற்று. அவள் தன் கணவனிடமும் மாமியாரிடமும் அன்பு கொண்டிருந்தாள். அவளுக்கு வயது பதினாறு இருக்கும். கஜானாச் சாவி அவளுடைய ஒட்டியாணத்தில் தொங்க ஆரம்பித்து விட்டது; வேலைக்காரர்கள் மீது அவள் அதிகாரம் செலுத்த ஆரம்பித்தாள். சுருங்கச் சொன்னால், கல்யாணி வீட்டுக்கு எஜமானியாகிவிட்டாள். மாமியார் ஜப மாலை அணிந்து, பூஜையில் மனதைச் செலுத்தினாள்.

சிற்சில சமயம், இந்தப் பதினாறு வயதுச் சிறுமி, சமையலறையைத் திறந்து வைத்தபடியே தூங்கி விடுவாள். கறுப்புப் பூனை இதுதான் சமயமென்று, நெய், பால், தயிர் இவைகளைத் தீர்த்து விடும். கல்யாணி சங்கடப்படுவாள்; கறுப்புப் பூனையோ குஷாலாயிருக்கும். கல்யாணி சில சமயம் நெய்யைப் பாத்திரத்திலே வைத்துவிட்டு, அப்படியே அயர்ந்து விடுவாள்; நெய் பூராவும் பூனையின் வயிற்றுக்குள் போய்விடும். அவள் பாலை மூடி வைத்துவிட்டு வெளியே போனவுடன், பால் மாயமாய் மறைந்துவிடும். இதோடு நின்றுவிட்டால் பரவாயில்லை. அவள் சாப்பிடுவதுகூடக் கஷ்டமாகிவிட்டது. கல்யாணி தன் அறையில் சிறிய கிண்ணமொன்றில் கொஞ்சம் திரட்டுப்பால் வைத்திருந்தாள். அவள் திரும்பி வந்து பார்த்தபோது, கிண்ணம் காலியாயிருந்தது. கடைத்தெருவிலிருந்து பாலேடு வாங்கி வைத்திருந்தாள். சிறிது நேரத்துக்கெல்லாம் பாலேடு மறைந்து போய்விட்டது. கல்யாணி அந்தக் கறுப்புப் பூனையை எப்படியாவது தொலைத்துவிடுவதென்று தீர்மானித்து விட்டாள். அந்தத் துஷ்டப் பூனையைப் பிடிப்பதற்கு, ஒரு மரக் கூண்டு தயாராயிற்று. பாலேடு, எலி, இன்னும் பூனைக்குப் பிரியமான அநேகவிதப் பலகாரங்களெல்லாம், கூண்டில் வைக்கப்பட்டிருந்தன. ஆனால், பூனை கூண்டைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. இதுவரையில் பூனை கல்யாணியிடம் பயப்பட்டுக் கொண்டிருந்தது. இப்போதோ அவளிடம் நெருங்கி வந்தது. அப்படியிருந்தும், கல்யாணிக்கு அதைத் துரத்தியடிக்கத் தைரியமில்லை.

பூனைக்கு ஆசை அதிகமாக அதிகமாக, கல்யாணி வீட்டிலே இருப்பதே கஷ்டமாகி விட்டது. மாமியாரின் 'மதுரமான' வசைமொழிகள் அவளுக்குக் கிடைத்

பூனைக் கொலைக்குப் பிராயச்சித்தம் செய்விக்க வருகிறார் ஒரு புரோகிதர். பேரம் பிரமாதமாய் நடக்கிறது. முடிவோ!—இந்த விநோதக் கதையை ஹிந்தியிலிருந்து தமிழ்ப்படுத்தியவர் நண்பர் **ப. கி. விஜயராகவன்.**

தன; உப்புசப்பற்ற சாப்பாடு அவள் கணவனுக்குக் கிடைத்தது.

ஒரு நாள், கல்யாணி ராமுவுக்காகப் பாதாங்கீர் தயார் செய்தாள். பிஸ்தாப் பருப்பு, பாதாம் பருப்பு, மேலும் பலவிதமான பழ தினுசுகள் ஆகியவற்றை யெல்லாம் சேர்த்து, பாலை நன்றாகக் காய்ச்சினாள். தங்கரேக்கையும் அதில் நன்றாக மசித்தாள். கீர் நிறைந்த கிண்ணத்தைச் சுவரிலே யுள்ள புரையில் பூனைக்கெட்டாத உயரத்தில் வைத்தாள்.

பூனை அறைக்கு வந்தது. புரையை உற்று நோக்கிற்று. மோப்பம் பிடித்து விட்டது. புரையின் உயரத்தை மதிப்பிட்டது. ராமுவின் மனைவி கல்யாணி, மாமியாருக்கு வெற்றிலை கொடுக்கப் போயிருந்தாள். பூனை ஒரே தாவாய்த் தாவிற்று. முன்னங்கால் இரண்டும் கிண்ணத்தைத் தாக்கின. கிண்ணம் தடாரென்ற சத்தத்துடன் கீழே விழுந்தது.

சத்தம் கல்யாணியின் காதுக்கு எட்டிவிட்டது. மாமியாருக்கு முன்னே வெற்றிலையை எறிந்து விட்டு, உள்ளே ஓடிப்போய்ப் பார்த்தாள். வெண்கலக் கிண்ணம், துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்தது. கீர் தரையிலே ஓடிக்கொண் டிருந்தது. பூனை கவலையற்று, கீரை நக்கிக் குடித்துக் கொண்டிருந்தது. கல்யாணியைக் கண்டதும், ஓடி மறைந்து கொண்டது.

ராமுவின் மனைவிக்கு முகம் சிவந்துவிட்டது. சிறிது நேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்றாள். எப்படியாவது பூனையைக் கொன்று பழிதீர்த்துக் கொள்வதென்று அவள் தீர்மானித்து விட்டாள். ராத்திரி முழுவதும், அவள் தூங்கவே யில்லை. பூனையை எப்படித் தந்திரமாகக் கொல்வதென்று, ராத்திரி யெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். பொழுது விடிந்தது. பூனை வாசற்படியில் உட்கார்ந்து கொண்டு, அவளை அன்புடன் பார்த்தது.

கல்யாணி ஏதோ யோசனை செய்தாள். பிறகு, சிரித்துக் கொண்டே எழுந்தாள். அவள் எழுந்ததும், பூனை மெதுவாக நழுவிவிட்டது. அவள் வாசற்படியில் கிண்ணத்தில் பாலைவைத்து விட்டு, அப்பால் சென்றாள்.

### ராணியும் ஒரு பெண்தான்

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிகளில் ஒருவராக, கன்யாலால் கௌபாவை பக்கிங் அரண்மனையில் மன்னர் வரவேற்றார். பிரதிநிதிகளையெல்லாம், "சௌக்கியமா?" என்று கேட்டார் மன்னர். ராணியும் அதே சடங்கைச் செய்தார். சாம்ராஜ்யத்தின் இந்த விசைப் பொம்மைகளெல்லாம், "ரொம்ப சௌக்கியம், பிரானே" என்று பதிலளித்தார்கள், என்றாலும், 'பிரதிநிதிகளில் பலருக்கு உள்ளுக்குள்ளே மிகுந்த அதிருப்தியே.'

மேலும், கௌபா சொல்லுகிறார்; "ஆனால், எனக்கு மிகுந்த திருப்தி தான். ராணி என்னைப் பார்த்து அன்போடு புன்சிரிப்புப் பூத்து, கை குலுக்கினார். ஏனென்றால், என் தலைப்பாவின் வர்ணத்திலே, அவர் ரொம்பவும் ஆனந்தம்கொண்டார். தலைப்பாக்களிலும் வர்ணங்களிலும், பெண்களுக்கு விசேஷப்பிரியம். பார்க்கப்போனால், ராணியும் ஒரு பெண் தான் என்று அறிய வந்தது எனக்கு மகிழ்ச்சி தந்தது."

திரும்பவும் கையிலே கழியுடன் வந்து சேர்ந்தாள். பூனை பால் குடிப்பதில் மூழ்ந்திருந்தது. கல்யாணி தன் முழுப் பலத்தையும் பிரயோகித்து, பூனைமேல் கழியால் ஓங்கியடித்தாள். பூனை துளிக்கூட அசையவில்லை; சத்தம் செய்யவில்லை. ஒரேயடியாக மல்லாந்துகொண்டது.

சத்தம் கேட்டவுடனே, வேலைக்காரியும், சமையல்காரியும், மாமியாரும் அங்கே வந்து கூடினார்கள். ராமுவின் மனைவி குற்றவாளியைப்போல் தலை குனிந்து நின்று கொண்டிருந்தாள்.

வேலைக்காரி: "அட ராமா! பூனை செத்துப்பேச்சே! மருமகள் பூனையைக்கொன்று விட்டாளே. இது பெரிய பாவமாச்சே!"

சமையல்காரி: "பூனையைக் கொலை செய்வதும் மனுஷாளைக் கொலை செய்வதும் ஒன்றுதான். மருமகள் மேல் கொலைபாதகம் இருக்கும் வரையில், நாங்கள் வேலைசெய்ய மாட்டோம்."

"நீங்கள் சொல்வது சரிதான். கொலைபாதகம் நீங்காதவரையில், இந்த வீட்டில் தண்ணீர்கூடக் குடிக்க முடியாது" என்று மாமியார் சொன்னாள்.

"புரோகிதரை அழைத்து வரலாமா?" என்று வேலைக்காரி கேட்டாள்.

மாமியாருக்கு அப்போதுதான் உயிர்வந்தது. "சீக்கிரமாய்ப்போய்ப் புரோகிதரைக் கூட்டிக்கொண்டு வா" என்று சொன்னாள்.

பூனைக்கொலை அக்கம்பக்க வீட்டாருக்கெல்லாம் மின்னலைப் போல் பரவிவிட்டது. பெண்களெல்லாம் ராமுவின் வீட்டில் ஒன்றுகூடிவிட்டார்கள். நாலா பக்கமிருந்தும் கேள்விப் பாணங்கள் பாய்ந்தன. ராமுவின் மனைவி தலைகுனிந்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள்.

புரோகிதருக்குச் செய்தி எட்டியது. அப்போது அவர் பூஜை செய்து கொண்டிருந்தார். அவர் தம்முடைய மனைவியைப் பார்த்து, "சாப்பாடு தயார்செய்ய வேண்டாம்" என்று சொன்னார். ஏனென்றால், ராமுவின் மனைவி பூனையைக் கொன்றுவிட்டாள்; பிராயச்சித்தம் நடைபெறும்; பலகாரங்கள் ஏராளமாக கிடைக்கும். ஆகையால் தான்.

புரோகிதர் ஒரு முரட்டு மனிதர். உயரம் 4 அடி 10 அங்குலம். தொந்தி பானைபோல் இருக்கும். முகம் உருண்டையாகவும் தட்டையாகவும் இருக்கும். பெரிய மீசை. மீசையின் நிறமோ வெண்மை. நீண்டிருக்கும்.

புரோகிதர் வந்து சேர்ந்தார். அதற்குள் பெரிய கூட்டம் கூடிவிட்டது. மாமியார் காமாட்சி, விசாலப்பாட்டி, புரோகிதர் எல்லாரும் பஞ்சாயத்தில் கலந்து கொண்டார்கள். கல்யாணியைத் திட்டினார்கள். சில பெண்கள் மட்டுமே கல்யாணியிடம் அனுதாபம் காட்டினார்கள்.

பூனையைக் கொலை செய்ததனால், எந்த விதமான நரகம் கிடைக்குமென்று, புரோகிதரைக் காமாட்சி கேட்டாள்.

"அதைச் சட்டென்று சொல்ல முடியாது. பார்த்துத் தான் சொல்ல வேண்டும். பூனை எப்போது கொல்லப் பட்டது?" என்று கேட்டார் புரோகிதர்.

"சுமார் ஏழு மணி இருக்கலாம்" என்று சமையல்காரி சொன்னாள்.

புரோகிதர் சாஸ்திரத்தைப் பக்கம் பக்கமாகப் புரட்டினார். எழுத்துக்களின்மேல் தமது விரலைச் செலுத்தினார். தலைமேல் கையை வைத்துக்கொண்டு பெரிய யோசனையும் செய்தார். முகத்தை சுளித்துக்கொண்டார். மூக்குச் சுருங்கியது. ஒரு கனைப்புக் கனைத்தார். "அட கடவுளே! அதிகாலையில் பிரம்ம முகூர்த்தத்தில் அல்லவா பூனையின் கொலை நடந்திருக்கிறது! இதற்குக் கோர நரகம் தான் விதிக்கப்பட்டிருக்கிறது!" என்றார்.

ராமுவின் தாயாருடைய கண்களில் கண்ணீர் தளும்பியது "அப்படியானால், இப்போது என்ன செய்யவேண்டும்? நீங்கள் தான் இதற்குப் பரிகாரம் சொல்ல வேண்டும்" என்று கெஞ்சினாள்.

புரோகிதர் சிரித்தார்: "தாயே, கவலைப்பட வேண்டாம். நாங்கள் எதற்காக இருக்கிறோம்? சாஸ்திரத்தில் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கிறது. அதைச் செய்து விட்டால், எல்லாம் சரியாகிவிடும்" என்றார்.

"ஆகையினால் தான், உங்களை வரவழைத்தது. இப்போது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டாள் ராமுவின் தாய்.

"என்ன செய்ய வேண்டுமா? பொன்னால் பூனை ஒன்று செய்து, மருமகள் கையால் தானம் செய்ய வேண்டும். தானம் செய்யாத வரையில் வீடு புனிதமாகாது. தானத்துக்குப் பிறகு, 21 நாளைக்குப் பூஜை நடைபெற வேண்டும்" என்றார் புரோகிதர்.

காமாட்சி, விசாலப் பாட்டி, மற்று முள்ளோர் அனைவரும் இதை ஆமோதித்தார்கள்.

"புரோகிதரே, எத்தனை தோலா எடை தங்கப் பூனை செய்ய வேண்டும்?" என்று காமாட்சி கேட்டாள்.

புரோகிதர் புன்முறுவல் பூத்தார். தொந்தியைத் தடவிக் கொண்டார். "பூனை எத்தனை தோலா எடையிலா? பூனையின் எடை எவ்வளவோ அதே எடைக்குத் தங்கத்தால் பூனை செய்யவேண்டும் என்றுசாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. ஆனால், இப்போது தான் கலிகால மாயிற்றே. தர்மம் மலையேறிப் போய்விட்டது. சிரத்தை கிடையாது. குறைந்த பட்சம் 21 தோலா எடையிலாவது தங்கத்திலே பூனை செய்ய வேண்டும். அதற்குமேல் அவாள் அவாள் சௌகர்யம்" என்றார்.

ராமுவின் தாய் தன் கண்களை அகல விழித்துப் பார்த்தாள். "21 தோலா தங்கமா! ஒரு தோலா தங்கம் போதாதா?" என்று கூவினாள்.

புரோகிதர் இடியிடி யென்று சிரித்தார். "ஒரு தோலாவில் தங்கப் பூனையாமே! பணத்தாசை மருமகளைவிடப் பெரிசா? மருமகளோ பெரிய பாவம் செய்துவிட்டாள். இப்போது பணத்திலே ஆசை வைக்கக் கூடாது" என்று புரோகிதர் சொன்னார். பேரம் நடந்தது. கடைசியாக, பன்னிரண்டு தோலாவில் பூனை செய்வதென்று தீர்மான மாயிற்று.

பிறகு, பூஜையைப் பற்றிச் சர்ச்சை நடந்தது. "அதைப்

பற்றிக் கவலைப்பட வேண்டாம். பூஜைக்கு வேண்டிய சாமான்களை என் வீட்டுக்கு அனுப்பி விடுங்கள். நான் எல்லாம் சரி செய்து கொள்கிறேன்'' என்று புரோகிதர் சொன்னார்.

"பூஜைக்குச் சாமான் எவ்வளவு பிடிக்கும்?''

"குறைந்த செலவிலேயே பூஜையை நான் முடித்து விடுகிறேன். தானத்துக்காக 10 மணங்கு கோதுமை, 1 மணங்கு அரிசி, 1 மணங்கு பருப்பு, 1 மணங்கு எண்ணெய், 5 வீசை பார்லி, 5 மணங்கு கடலை, 20 சேர் நெய், 1 மணங்கு உப்பு- இவ்வளவுதான் பிடிக்கும்'' என்றார் புரோகிதர்.

"இவ்வளவு தானா! இதற்குத் தான் குறைந்தது இரு நூறு ரூபாய் செலவாகி விடும்போலிருக்கிறதே'' என்று ராமுவின் தாய் திகிலுடன் கத்தினாள்.

"இதைவிடக் குறைந்த செலவிலே நடத்த முடியாது'' என்று புரோகிதர் கண்டிப்பாய்ச் சொன்னார்: "பூனையைக் கொன்ற பாவமோ மிகப் பெரியது. செலவை நினைத்துப்பார்க்குமுன், பாவத்தை நினைத்துப் பார். செய்ய வேண்டியதோ பிராயச்சித்தம்; விளையாட்டல்ல. உங்களுக்கு இரு நூறு ரூபாய் ஒரு பிரமாதமல்ல.''

புரோகிதர் தமது சாதுரியப் பேச்சால், அங்கிருந்தவர்களின் மனதையெல்லாம் கவர்ந்துவிட்டார்.

புரோகிதர் சொல்வதைக் காமாட்சியும் ஆதரித்துப் பேசினாள். "பெரிய பாவத்தைப் போக்குவதற்குத் தாராளமாகத் தான் செலவு செய்ய வேண்டும்'' என்று அவள் சொன்னாள்.

"தான தர்மத்தினால்தான் பாவம் கழிய வேண்டும். தான தர்மத்திலே பேரம் செய்யக் கூடாது'' என்று விசாலப் பாட்டியும் சொன்னாள்.

ராமுவின் தாய் நாலு புறமும் சுற்றிப் பார்த்தாள். எல்லோரும் புரோகிதர் தரப்பில்தான் பேசினார்கள். புரோகிதர் சிரித்துக்கொண்டிருந்தார். "ஒரு புறம் உன் மருமகளுக்குப் பெரிய நரகம்; மறு புறம் அதைப் போக்கக் கொஞ்சம் செலவுதான். செலவு செய்வதற்குத் தயங்க வேண்டாம்'' என்று புரோகிதர் மீண்டும் சொன்னார்.

"நீர் ஆட்டிவைக்கிறபடி நாங்கள் ஆடித்தானே யாக வேண்டும்'' என்று சொல்லி, ராமுவின் தாய் பெருமூச் செறிந்தாள்.

புரோகிதர் கோபமடைந்தார்: "உனக்குப் பிரியமா யிருந்தால் செய்; இல்லாவிட்டால் விட்டு விடு. இதோ நான் போகிறேன்'' என்று சொல்லி, ஓலைச்சுவடியைப் பரபர என்று சுருட்டினார்.

"புரோகிதரே! ராமுவின் தாய்க்குப் பிரியம் இல்லாமலில்லை. கோபம் கொள்ள வேண்டாம்'' என்று எல்லோரும் ஒரே குரலில் சொன்னார்கள்.

ராமுவின் தாய் புரோகிதருடைய கால்களைப் பிடித்துக் கொண்டாள். புரோகிதர் சம்மணம் போட்டுக் கம்பீரமாய் உட்கார்ந்தார்.

"இருபத்தொரு நாளைக்கு இருபத்தொரு ரூபாய் வேண்டும். இருபத்தொரு நாளைக்கு இரண்டு

வேளையும் ஐந்து பிராமணர்களுக்குச் சாப்பாடு போட வேண்டும்'' என்று உத்தரவிட்டார் புரோகிதர்.

''ஐந்து பிராம்மணர்களை வேறே நான் தேடிப்பிடிக்க வேண்டுமா?'' என்ருள் ராமுவின் தாய்.

''அதைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். நான் ஒருவனே இரண்டுவேளையும்சாப்பிட்டுவருகிறேன். வேதவிற்பன்னனை நான் ஒருவன் சாப்பிடுவதாலேயே ஐந்து பிராம்மணர்கள் சாப்பிட்ட பலன் கிடைத்துவிடும்'' என்று புரோகிதர் சமாதானம் சொன்னுர்.

''புரோகிதர் சரியாகத்தான் சொல்லுகிருர். அவருடைய தொந்தியைப் பார்'' என்று சமையல்காரி சிரித்தாள்.

பிராயச்சித்தம் நடை பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யும்படி, ராமுவின் தாய்க்கு உத்தரவிட்டார் புரோகிதர். ''பன்னிரண்டு தோலா தங்கத்தை வெளியே எடுங்கள். நான் இரண்டு மணி நேரத்திலே பூஜை செய்துகொண்டு வருகிறேன்'' என்ருர்.

இன்னும் புரோகிதர் பேசி முடிக்கவில்லை. இச்சமயம் வேலைக்காரி இரைக்க இரைக்க உள்ளே ஓடிவந்தாள். அவள் வந்த வேகத்தைக் கண்டு, எல்லோரும் ஆச்சரிய முற்ருர்கள். ''என்ன நடந்து விட்டது!'' என்று ராமுவின் தாய் பயத்துடன் கேட்டாள்.

வேலைக்காரி தழுதழுத்த குரலில் ''பூனை எழுந்திருந்து ஓடிப் போய்விட்டது'' என்று சொன்னுள்.

✲

### காந்திக்குல்லாய் மகத்துவம்

மகாத்மா காந்தியை முதன் முதலாகப் பல வருஷங்களுக்கு முன்னே, ஏசுநாதருக்குச் சமமாய் ஒப்பிட்டவர் ரெவரண்ட் எச். எச். ஹோம்ஸ் என்ற அமெரிக்கப் பாதிரியார். 'பிலாத்துவின் முன்னே காந்தி' என்று, நியூயார்க் சர்ச் ஒன்றில் அவர் பிரசங்கம் செய்தார்.

''தேவனைப் பற்றியும் தேவகுமாரனைப் பற்றியும் அவர் உயிர்த்தெழுந்தது பற்றியும் வீணே பேசிக்கொண் டிருக்கிறீர்கள்? அவர் தான் இதோ நம்மிடையே இருக்கிருரே!'' என்று ஆரம்பித்தார் பாதிரியார்.

இப்படிச் சொல்லிய உடனே, இந்தியக் கதர்க்குல்லாய் ஒன்றை எடுத்துத் தலையிலே அணிந்துகொண்டார்: ''இந்தக் குல்லாய், மனிதகுல பக்தியின் அறிகுறி; சிலுவைக்கு இணையானது... உலகெங்கும் சிலுவை பரவியதுபோலவே, இந்தக் குல்லாயும் ஏன் பரவக்கூடாது? மகாத்மா காந்தியே நமது நவீன உலகின் ரட்சகர் என்று, இன்று சகல நாடுகளிலும் உள்ள கோடிக்கணக்கான மக்கள் நம்புகிருர்கள்'' என்ருர்.

# கண்ணீர் அம்மன்

எல். ஏ. கிருஷ்ணையர்

மலையாளத்தில், வெகு காலத்துக்கு முந்தி ஆறு சகோதரர்களும் ஒரு சகோதரியும் இருந்து வந்தார்கள். அவர்களில் ஐந்து சகோதரர்கள் பொன்னங்களத்தம்மா என்ற தங்கள் தங்கையை அழைத்துக் கொண்டு, படித்துறைக் கட்டத்தின் வழியாகக் குடகு நாட்டுக்குப் போனார்கள்.

சாலை வழியாகப் போகும் போது, "நம் தங்கை நம்மோடு வருவது சரியா? பார்க்கிறவர்கள் இவள் நம்முடைய மனைவி என்று சொல்லி விடுவார்களே! என்று அவர்களில் நாலு பேர் கேட்டார்கள்.

"இவள் நம்முடன் வந்தால், நாம் இவளுடைய ஜாதியைக் கெடுத்து விடுவோமே" என்று ஒருவன் சொன்னான்.

காகாபி ஆற்றருகே உள்ள சௌரிபதி மலையை அவர்கள் அடைந்தபோது, அவர்களுக்குப் பசி எடுத்து விட்டது. அப்போது, இகுட்டப்பா என்பவன், தங்கள் தங்கையை ஏதாவது சாப்பாடு தயாரிக்கும்படி கேட்டுக்கொண்டான்.

கள்ளமற்ற குழந்தை மனோபாவமுடைய பூர்விக மக்களின் புராணக் கதைகள், அற்புதமும் வியப்பும் நிறைந்த எளிய யோகினிக் கதைகள் போல் இருக்கும். இதற்கு ஓர் உதாரணமாக விளங்கும் இந்தக் கதை, குடகு நாட்டைப் பற்றிய ஒன்றாகும். குடகு நாட்டின் பூர்வ வரலாறு குறித்து, ஸ்ரீ ஐயர் தொடர்ச்சியாக 'மை லிங்கியா' வில் சில கட்டுரைகள் எழுதி வருகிறார். அவற்றின் இடையே இந்தக் கதையையும், அவர் கூறியுள்ளார்.

"அரிசி இல்லை; விறகு மில்லை. எப்படிச் சமையல் செய்வது?" என்று தங்கை கேட்டாள்.

அதற்கு, "அரிசி நான் கொடுக்கிறேன். ஆனால், நெருப்பில்லாமல் நீ அதைச் சமைத்துப்போட வேண்டும்" என்று இகுட்டப்பா சொன்னான்.

அவள், "சரி. நெருப்பில்லாமல் நான் சமைக்கிறேன். உப்பில்லாமல் நீங்கள் அதை உண்ண வேண்டும். சம்மதமா?" என்று கேட்டாள்.

சகோதரர்கள் இதற்குச் சம்மதித்தார்கள்.

அப்போது ஒரு பசு அந்த வழியே போனதை, பொன்னங்களத்தம்மா கண்டாள். அது பரதந்தரா வீட்டாருக்குச் சொந்தமான பசு. அரிசி நிரம்பிய ஒரு மண்பாண்டத்திலே, அந்தப் பசுவின் பாலை, அவள் கறந்து கொண்டாள். மர நிழலில் சகோதரர்கள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவள் ஆற்றங் கரைக்குப்போய், பாண்டத்தை மணலில் புதைத்து வைத்தாள். அதுவும் கொதிக்கத் தொடங்கியது.

தான் இவ்விதமாகச் சமைத்த சோற்றை உண்ண, தன் சகோதரர்களை அவள் அழைத்தாள். அவர்கள் வேண்டிய அளவு சாப்பிட்டானதும், இகுட்டப்பா கொஞ்சம் சோற்றைக் கையில் எடுத்துக் கொண்டான். அதைக் காற்றில் எறிந்தபடியே, "இதோ பாருங்கள்! கல்மழை எப்படி

வானத்திலிருந்து பெய்கிறது!'' என்று அவன் சொன்னான்.

சகோதரிக்கு இதைப் பார்த்த வுடன் கோபம் வந்து விட்டது. மர மத்து ஒன்றைக் கையிலெடுத்துக்கொண்டு, அதனால் அவனை ஓங்கி ஓர் அடி அடித்தாள்: "மாரிக் காலத்தில் இடி எப்படி இடிக்கிறது பார்த்தாயா?'' என்று சினந்து கேட்டாள். இதைக் கண்ட சகோதரரில் இருவர் சிரித்தார்கள்.

பிறகு, எல்லாரும் வெற்றிலே போட்டுக் கொண்டு அமர்ந்திருந்தபோது, "எங்கே, யாருடைய வாய் அதிகமாகச் சிவந்திருக்கிறது, பார்க்கலாம்'' என்று பாலூரப்பா சொன்னான்.

எல்லாரும் வெற்றிலையை மென்று அவரவர் கையில் துப்பிக் கொண்டார்கள். பிறகு, அப்படிக் கையில் துப்பியதை மீண்டும் வாயில் போட்டுக் கொண்டதாகப் பாவனை பண்ணினார்கள். இதைப் பார்த்து, நிஜமாகவே அவர்கள் கையில் துப்பியதை வாயில் திரும்பவும் போட்டுக் கொண்டார்கள் என்று நம்பி ஏமாந்து விட்ட சகோதரி, தன் கையிலுள்ளதையும் எடுத்து வாயில் போட்டுக் கொண்டு அதை மெல்லத் தொடங்கினாள். உடனே, இதனால் அவள் ஜாதி கெட்டுப்போய் விட்டாள் என்று சகோதரர்கள் ஒரே குரலாய்ச் சொன்னார்கள்.

சகோதரர்களுக்கும் சகோதரிக்குமிடையே வாக்குவாதம் தடித்தது. பின்னல், மலையாளத்திலுள்ள சகோதரனிடம் அபிப்பிராயம் கேட்டார்கள். அவனும் அவள் ஜாதி கெட்டுப்போய் விட்டதாகவே, தீர்ப்புக் கூறினான். சகோதரிக்கு மிக்க வருத்தமாய்ப் போயிற்று. மனமுடைந்து அழுது கண்ணீர் பெருக்கினாள்.

பிறகு, இகுட்டப்ப பெட்டா என்ற இடத்தில் நின்றுகொண்டு, இகுட்டப்பா ஓர் அம்பு விட்டான். அம்பு போன வழியே தங்கள் சகோதரியும் போய், அது விழுந்த இடத்திலேயே நின்றுகொண்டிருக்க வேண்டுமென்று, அவன் விதித்தான். அவள் நாரை உருவெடுத்துப் பொன்னங்களா என்ற இடத்தை நோக்கிப் பறந்து போய்விட்டாள்.

கரதண்டிரா வீட்டுக் கருகே, ஒரு நெல் வயலில் சில ஹொலெயாக்கள் வேலை செய்துகொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவனுக்கு மேலே அவள் பறந்து

**உலகம் உய்ய வழி**

உலகத்திலே 66-ராஜ்யங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நாடும் சுயேச்சையாய்த் தனக்குத்தானே லாபம் அடைய முயன்று கொண்டிருந்தால், உலக வியாபாரம் ஒழுங்காய் நடைபெறாது. பற்பல ராஜ்யங்களையும் சில தொகுதிகளாக ஐக்கியப்படுத்தி, வியாபாரங்கள் நடத்துவதே நல்ல பரிகாரமாகும்.

ருஷியா, ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா, தென்னமெரிக்கா, இந்தியா, சீனா, ஆப்பிரிக்கா இப்படி ஏழு தொகுதிகளாகப் பிரிக்கலாம். இந்த ஏழும் பொருளாதாரத்தில் சுய பூர்த்தியோடு வாழக்கூடிய தொகுதிளாகக் கொண்டு, சர்வதேச வியாபாரத்தை நடத்தினால், அது வெகு சுலபமாய் நடக்கும். இந்த ஏழும் தங்களுக்குக் கண்டு மிஞ்சிய பொருளை ஏற்றுமதிசெய்து, அதற்கு மாற்றாக மூலப்பொருளைத் தருவித்துக் கொள்ளலாம்.

—ஆர். டபிள்யூ. ஜி. மக்கே


பிளாண்டர்ஸ் டீ
இன்னிசைக் குரலும் கவர்ச்சியுள்ள நட்த்தையும் ரமாவின் இயற்கை அமைப்புகள். அதைவிட மேலாக அவள் உன்னதமாய் விருந்தளிப்பவள் எனப் பெயர் பெற்றவள். அதற்கு காரணம் ப்ளாண்டர்ஸ் ஸ்பிரிங்டேல் பச்சை லேபிள் டீ தான். அவளுககு விருந்தாளிகள் அதன் நற்சுவையை நன்கு பிரியப்படுகின்றனர் என்பது தெரியும். அதனல் அவள் இந்த ரகத்தையே உபயோகிக்கிருள்.
ப்ளாண்டர்ஸ் பச்சை லேபில் டீ அளியுங்கள்.
அது உயரத்தில் வளர்க்கப்பட்டது
PLANTERS
FLOWERY BROKEN ORANGE PEKOE BLEND
PLANTERS
SPRINGDALE
Nilgiri
TEA
ஸ்ரீ ப்ளாண்டர்ஸ் கம்பெனி லிட்.,
கூனூர், நீலகிரி, தென் இந்தியா.
PR-4 TM

# CIBOL சைபால்

(ரிஜிஸ்டர்டு)

முகப்பரு, சேத்துப் புண், சொறி, சிரங்கு, வேனல் கட்டி
தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்குக் கைகண்ட மருந்து

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :

**THE SOUTH INDIAN Mfg. Co., MADURA**

மதராஸ் நகர், நெல்லூர், ஸிட்ட், விசாகப்பட்டினம் ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள் :
**ராஜன் டிரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், P. T. மதராஸ்**
குண்டூர், கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களுக்கும், நிஜாம் சமஸ்தானங்களுக்கும்
ஏஜண்டுகள்: **சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா**
மைசூர் சமஸ்தான ஏஜண்டுகள்: **சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் ஸிடி.**



use **KESHA-MITRA**

**HAIR-OIL**

(VEGETABLE)

A LITTLE'S ORIENTAL BALM PRODUCT

அடர்த்தியான, கருகருத்த
நீண்ட கேசத்திற்கு

# கேசமித்திரா

## ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை
அறவே போக்குகிறது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் ஷாப்புகளிலும்
கிடைக்கும்



லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட்
11-12, முதல் லைன் பீச் : : சென்னை

போய் விழுந்தாள். உடனே, அவனுக்குப் பேய் பிடித்துக் கொண்டுவிட்டது. அம்பு பாய்ந்து செருகிக்கொண்டிருந்த மரத்தை நோக்கி, அவன் ஓடினன்.

சகோதரர்கள் வெவ்வேறு கிராமங்களுக்குப் பிரிந்து போய், அங்கங்கேயே தங்கிவிட்டார்கள். இந்தக் குடும்பத்தார் அனைவரும் பின்னல் தெய்வங்களாகத் தொழப்பட்டு வந்தார்கள்.

முதல் சகோதரன் பேட்டுரப்பாவுக்கு மலையாளத்திலே, பேட்டூரில் ஒரு கோவில் உண்டு. இரண்டாவது சகோதரனுக்கு மலையாளத்திலுள்ள தாலிப் பரம்புவில் கோவிலுண்டு. மூன்ருவது சகோதரனுக்கு, குடகு நாட்டில் உள்ள சோமமலே என்ற இடத்திலுள்ள மலத்தம்பிரா என்ற காட்டில் கோவிலுண்டு. நாலாவது சகோதரனுக்குக் குஞ்சிலாவுக்குச் சமீபமாய் உள்ள இகுட்டப்பாவிலும், ஐந்தாமவனுக்குக் குபாங்கரி நாட்டில் உள்ள பாலூரிலும், ஆருமவனுகிய திர்னல்லி திம்மெய்யாவுக்கு வைநாட்டில் திர்நல்லியிலும் கோவில்கள் இருக்கின்றன.

அம்பு தைத்த மரத்தைச் சுற்றிப் பொன்னங்களத் தம்மாவுக்கும் ஒரு கோயில் எழுப்பப் பெற்றுள்ளது. ஏப்ரல் மாதத்தில் வருஷந்தோறும் அவளுக்கு நடைபெறும் விருந்தின்போது, அவள் அழுது புலம்புகிருள். ஹொலையா ஜாதி மக்கள் அவளை வந்து வழிபடுகிருர்கள். மாமரத்தில் தைத்த அம்பு அன்று தைத்த படி அப்படியே நிற்பதை இன்றுங்கூடப் பார்க்கலாம்.

★

## நாகரிக அவந்தரை

அழகான வாழ்க்கைக்கு இதற்குமுன் ஒருபோதும் கிடைத்திராத அபூர்வ சாதனங்களை யெல்லாம் நாங்கள் மேல் நாட்டார் சாதித்து விட்டோம். ஆனல், அழகான வாழ்க்கையை எப்படி நடத்துவது என்பது தான் எங்களுக்குத் தெரியவில்லை. மேல்நாட்டு நாகரிகத்தின் அவந்தரையை, உங்கள் கீழ்நாட்டு நாகரிகப் பிரதிநிதியான ஓர் இந்திய வேதாந்திதான், எனக்கு வன்மையாய்த் தெளிவுபடுத்தினர். யுத்தம் தொடங்கச் சிறிது காலத்துக்கு முன்பு, ஒரு விருந்து நடந்தது. அப்போது, அவர் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்.

மாஸ்கோவிலிருந்து நியூயார்க் நகருக்கு 24 மணி நேரத்திலோ 24 நாளிலோ யாரோ பறந்த சேதி, அதிவேகமாய் யாரோ மோட்டார்க்கார் ஓட்டிய சேதி இவைகளைப்பற்றி, இந்திய வேதாந்தியிடம் நான் சம்பாஷணை தொடங்கினேன். "இதெல்லாம் என்ன அற்புதம் பார்த்தீர்களா?" என்று நான் அவரிடம் சொன்ன ஞாபகம்.

"ஆமாம், அற்புதந்தான்" என்று அவர் பதிலளித்தார்: மேலும், "உங்கள் நாகரிகம் அற்புதமானதுதான். நீங்கள் பட்சிபோல் ஆகாயத்தில் பறப்பீர்கள்; மீன்போல் நீருக்குள் நீஞ்சுவீர்கள். ஆனல், தரையிலே எப்படி நடப்பது என்ற ஒன்றுதான் உங்களுக்குத் தெரியவில்லை" என்று முடித்தார்.

—ஸி. இ. எம். ஜோட், (பம்பாய்க் க்ரானிக்கிள்)

# பிச்சைக்காரர் தந்திரம்

புரொபஸர்
எம். ஆர். டோக்கி

**பி**ச்சை போடுகிறவர்கள் பெரும்பாலும் என்ன சொல்லுகிறார்கள்? எங்கள் "பணத்துக்கு நாங்களே எஜமானர்கள்; அதை நாங்கள் எங்களுக்கு எப்படி இஷ்டமோ அப்படிச் செலவிட உரிமை உண்டு. பிச்சை போடாதே என்று எங்களைச் சொல்ல, யாருக்கும் உரிமையில்லை" என்கிறார்கள். உண்மைதான். பிச்சைபோடுகிறவருக்கு அவருடைய பணத்திலே உள்ள சொந்தத்தையோ, அவருடைய இஷ்டப்படி அதைச் செலவழிக்க உள்ள உரிமையையோ, யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அவருடைய காரியம் ஜன சமூகத்துக்குக் கேடு உண்டாக்குமானால், அதை ஆட்சேபிக்க எவருக்கும் உரிமை உண்டு. சுதந்தரம் என்பது, சமூகத்திடையே உள்ள ஓர் ஒப்பந்தமேயாகும். ஆகையால், ஒவ்வோர் உரிமைக்கும் தொடர்பாக ஒவ்வொரு கடமையும் உண்டு. தமது உரிமையைப் பிரயோகிக்கும் ஒருவர், பிறர் உரிமையையும் மதிக்க வேண்டும். பாத்திர மறியாமல் பிச்சையிடுவது, பிச்சை யெடுப்பதே ஒரு தொழிலாய்க்கொண்டவர்களை ஆதரிப்பதாகும். இந்தப் பிச்சைக்காரர்கள் ஜன சமூகத்துக்கே கேடாயிருக்கிறார்கள். இவர்களுக்குப் பிச்சை போடுவது, பைத்தியக்காரத் தனமேயாகும். ஆனால், மனப்பூர்வமாய்த் தானதர்மம் செய்ய விரும்புவோர், ஏழை மக்களுக்குத் தர்மம் செய்வதைத் தடுக்கக் கூடாதுதான்.

ஆயினும், தகுதியுள்ளவர்களிடம்தான் இரக்கமும் கருணையும் காட்டவேண்டும். தகுதியற்றவர்களிடம் இரக்கமும் கருணையும் காட்டுவது புண்ணியம் அல்ல; மகா பாவமும் ஆகும். பார்வைக்குக் காயம்பட்ட அங்கவீனர்களைப் போல் தோன்றும் பல பிச்சைக்காரர்களுக்கு இடும் பிச்சை, இப்படிப் பட்டதேயாகும். இதெல்லாம் அவர்களாகச் செய்துகொண்ட வேஷம். அவர்கள் சில 'தொழில் தந்திரங்'களைக் கையாளுகிறார்கள்.

இந்த விஷயமாக, ஸ்ரீ பிர்லாவின் பணவுதவிகொண்டு, ஸ்ரீ பாட்டியா என்பவர் ஓர் ஆராய்ச்சி செய்தார். பிச்சை வாங்குவதற்காகப் பல பிச்சைக்காரர்கள், காயம், அங்கவீனம் முதலிய வேஷங்கள் போடுவது பற்றி, அருவருக்கத் தக்க பல ரகசியங்கள், அந்த ஆராய்ச்சியிலே வெளியாயின.

தங்கள் மூக்கு, உதடு, காது இவைகளைச் சப்பையாய் மூடி மறைத்து வைத்துக் கொள்ள,

*நகரங்களை நரகமாக்கும் ஒரு பயங்காரம் இந்தப் பிச்சைக்காரர் தொல்லை. உண்மையிலே அகதியான பல பிச்சைக்காரர்கள இருப்பது வாஸ்தவம். ஆனால், பலர் அருவருக்கத்தக்க வேஷம் போடுகிறார்கள். இந்த ரகஸ்யத்தை அம்பலமாக்குகிறார் புரொபஸர். 'பிச்சைக்காரர் பிரச்னை - ஒரு சமூக நோய்' என்று தொடர்ச்சியாகச் சில கட்டுரைகளை 'ஸோஷல் வெல்பேர்' பத்திரிகையில், அவர் எழுதி வருகிறார். அவற்றில் ஒன்றின் சாராமசம் இது.*

விசித்திரமான சில தந்திரங்களை இந்தப் பிச்சைக்காரர்கள் பயின்றிருக்கிறார்கள். ஒரு வருஷ காலம் இந்தப் பயிற்சி நடக்கிறது. பிறகு, அவர்கள் சுயேச்சையாய்ப் பிச்சை யெடுக்கக் கிளம்பி விடுகிறார்கள். சிலர் சோப்பைப் பல் இடுக்கிலே வைத்துக் கொண்டு, வாயிலிருந்து நுரை விட்டுக்கொண்டே யிருக்கிறார்கள். சிலர் காக்கை வலிப்பு வந்தது போல் துடிக்கப் பயின்றிருக்கிறார்கள். துணியால் பல சுற்றுச் சுற்றிக் கட்டி, யானைக் கால், யானைக் கை, யானை உதடு செய்துகொள்ளுவோர் சிலர் உண்டு. இந்த வேஷமெல்லாம் வெகு சாமர்த்தியமாய்த் தரிக்கிறார்கள். பழங்கந்தையிலே வெண்ணெய், சாம்பிராணி, சுண்ணாம்புக் கல், கோந்து, ரத்தம், பாலேடு ஆகியவைகளைத் தடவி, ஆபாசம் செய்து, கட்டிக் கொள்ளுகிறார்கள்.

சிலர் (முக்கியமாய்ப் பெண்கள்) தங்கள் காலையும் கையையும் கூடச் சுலபமாய் வெட்டிக் கொள்ளுகிறார்கள்; அல்லது காலையும் கையையும் முறுக்கி, நொண்டி வேஷம் போடுகிறார்கள். அவர்கள் பல அத்தாட்சிப் பத்திரங்களையும் யாரிடமாவது வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். தங்கள் வீடும் கணவரும் எரிந்து நாசமானதாகவும், தாங்கள் அகதி யாகிவிட்டதாகவும், பஞ்சம், பூகம்பம், வெள்ளக் கஷ்டங்களில் தாங்கள் அடிபட்டதாகவும் பாசாங்கு பண்ணி, அவர்கள் பிச்சை எடுக்கிறார்கள்.

சிலர் இரும்புத் தூரு, சுண்ணாம்புப் பொடி, சோப்பு இந்த மூன்றையும் பிசைந்து ஒரு வாரிலே தடவி, அதைத் தங்கள் காலிலே கட்டிக்கொள்ளுகிறார்கள். அந்தக் கட்டை அவிழ்க்கும் போது, காலின் தோலில் பெரும் பகுதியும் அந்த வாரோடு பிய்ந்து வந்துவிடுகிறது. இப்படிப் புண்ணாய்ப்போன காலிலே, ரத்தத்தைப் பூசிக் கொள்ளுகிறார்கள்; பல கட்டுக்களும் கட்டிக் கொள்ளுகிறார்கள். ஆனால், ஓர் ஊனமும் இல்லாத தங்கள் காலின் கட்டுக்களை, இரவிலே அவிழ்த்தெறிந்து விடுகிறார்கள். சிலர் மாட்டு ரத்தத்தைப் பூசிக் கொண்டு, காயம் தயாரிக்கிறார்கள். தேகமெல்லாம் மண்ணைப் பூசிக்கொண்டு, சிஷ்யர்கள் புடை சூழ, சாதுக்களாய், உற்சவாதிகளுக்குச் சிலர் புண்ய யாத்திரையும் வந்து விடுகிறார்கள்.

இவர்களுக்கு அடுத்தபடியான ஒரு கோஷ்டியாரும் இருக்கிறார்கள். அவர்களில் சிலர் தங்கள் நாக்கை உள்பக்கமாய் மடித்துக் கொண்டு, ஊமைபோல் பாசாங்கு செய்கிறார்கள். துர்க்கமாதாவை அவமதித்ததாலேயே தங்களுக்கு இந்தத் தண்டனை கிட்டியதாக, அவர்களில் பெரும்பாலோரும் கதை சொல்லுவார்கள். உண்மை என்னவென்றால், தங்கள் நாக்கு நுனியிலே ஒரு நூல் துண்டின் ஒரு முனையைக் கட்டிக் கொள்கிறார்கள். மறு முனையை ஒரு பிசின் கட்டியில் ஒட்டி, அந்தக் கட்டியை விழுங்குகிறார்கள். நாக்கு உள்புறம் மடித்துக் கொள்கிறது. அவர்கள் அதை அப்படியே நிறுத்தி வைத்துக் கொள்ளுகிறார்கள். சில பிச்சைக்காரர்கள், சிறு பையன்களைப் பட்டினி போட்டு எலும்பும் தோலுமாய் வாடவைத்து விடுகிறார்கள். அந்தப் பையன்கள் கேட்டுக் கம்பிகளின் வழியாய் பங்களாக்களுக்குள் புகுந்து

பிச்சை கேட்கிறார்கள். மற்றும் சில பையன்கள், பகல் முழுதும் கண்ணை மூடிக்கொண்டு குருடர்களாய் நடித்துப் பிச்சையெடுக்கப் பழக்கிவைக்கப் படுகிறார்கள்.

ஜனங்களுக்கு இருக்கக்கூடிய இரக்க உணர்ச்சியைப் பயன்படுத்திக் கொள்ள, பிச்சைக்காரர்கள் எவ்வளவு கெட்டிக்காரத்தனமாய்த் தந்திரம் செய்கிறார்கள்! இவையெல்லாம் பிரத்யட்சமாய்க் கண்ட உண்மைகள்; வெறும் கற்பனை யல்ல. பரிதாபம் கொண்டு பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை போடுவோரெல்லாம் உண்மையை மட்டும் அறிய வந்தார்களானால், பிச்சைக்காரர்களிடம் மகா கோபம் கொள்ளுவார்கள். தங்களையும் ஜன சமூகத்தையும் இப்படிப் பெரிய மோசடி செய்வதைக் கண்டு, அவர்களைக் கட்டியடிக்க வேண்டுமென்றுகூட எண்ணுவார்கள். பெண்மணிகள்தான் சுலபமாய் இரக்கங் கொண்டு விடுகிறார்கள். அவர்கள் இந்த விஷயங்களை யெல்லாம், கொஞ்சம் சிரத்தையோடு கவனிக்க வேண்டும்.

இன்னொரு ரசமான விஷயம். பிச்சைக்காரர்கள் தங்களுக்குள்ளே சங்கங்கள் அமைத்துக் கொள்ளுவ துண்டு. தங்களுக்கு ஒரு குருவையும் அவர்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார்கள். குருவுக்கு விசுவாசம் காட்டாமல் நடந்து கொள்ளுகிறவர்கள் தண்டிக்கப் படுவதும் உண்டு. அன்றாட 'சம்பாத்திய'த்தை எல்லாப் பிச்சைக்காரர்களும் குருவிடம் கொண்டுவந்து கொடுப்பார்கள். குரு அதைப் பலருக்கும் பிரித்துக் கொடுப்பார். இப்படிப் பல பிச்சைக்காரர்கள் சேர்ந்து, ஒரு காலனியாக வாழ்கிறார்கள்.

ஜன சமூக வாழ்விலே ஒரு பிளவைபோல்வளர்ந்துவிட்ட, இந்தப் பிச்சைக்காரர் பிரச்னையை, ரண சிகிச்சை செய்வது போல் கடுமையான பரிகாரத்தின் மூலம்தான் நிவர்த்திக்க வேண்டும். இந்த அபிப்பிராயம், சமீபத்தில் கொஞ்ச காலமாய்ப் பொது ஜன சேவை புரிவோரிடம் வலுத்து வந்திருக்கிறது. இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காண்பதற்காக, பற்பல சங்கங்களும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால், ராஜாங்கமே இந்த வேலையைக் கைக்கொள்ளா விட்டால், இவ்விஷயத்தில் கணிசமான பலன் கிட்டாது. பிச்சை யெடுப்பதே சட்டவிரோதம் என்று சட்டம் செய்துவிட வேண்டும். அந்தச் சட்டத்தைக் கண்டிப்பாய் அமுல் செய்ய வேண்டும். என்றாலும், உண்மையிலே மத சம்பந்தமான யாசகர்களுக்கு விலக்கு அளிக்கலாம். ஆனால், அவர்களும் சர்க்கார் லைசென்ஸ் வைத்துக் கொண்டுதான் யாசகம் புரியவேண்டும். பொது ஜனங்களுக்கு உபத்திரவம் செய்யமாட்டார்கள் என்ற நிச்சயம் ஏற்பட்டவர்களுக்கு மாத்திரமே, அந்த லைசென்ஸ் கொடுக்க வேண்டும்.

ஆனால், எத்தனை சட்டங்கள் செய்தாலும் சரிதான்; பொது ஜனங்கள் மட்டில் ஒத்துழைக்கா விட்டால், பிச்சைக்காரர் தொல்லையை அடியோடு ஒழிக்க முடியாது. இன்று படித்த வகுப்பார் மட்டிலுமே பிச்சைக்காரர்களை வெறுக்கிறார்கள். பாமர மக்களெல்லாம்,

மத தர்மமாகப் பிச்சை போட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். அதிலும், பெண்கள் இன்னும் மோசம். ஆகையால், பிச்சைக்காரன் சமூகத்தின் முதல் நம்பர் சத்துரு என்ற அபிப்பிராயம் ஏற்படும்படி, பாமர மக்களுக்கெல்லாம் அறிவு புகட்டிப் பிரசாரம் செய்ய வேண்டியது மிக்க அவசியமாகும்.

சர்க்காரோ பிச்சை எடுப்பவனை மட்டு மல்ல, பிச்சை போடுபவனையும் தண்டிக்கத் தயங்கலாகாது. பிச்சை போடுபவன் உடந்தைக் குற்றம் செய்தவனாகிறான். பாத்திர மறியாமல் பிச்சை போடுபவன் இருக்கிறவரையில், அவனது ஆசையைப் பூர்த்தி செய்யப் பிச்சை வாங்குவோரும் இருந்துதான் தீருவார்கள்.

ஆனால், ஒரு விஷயத்தை மட்டில் எச்சரித்துவிட்டு, இதை முடிக்க விரும்புகிறேன். நியாயமான பிச்சைக்காரர்களுக்குக் கஷ்ட நிவாரணமாக ஏதாவது மாற்று ஏற்பாடு செய்யாமல், பிச்சைக்காரர் ஒழிப்பு வேலையைக் கைக்கொள்ள லாகாது. கைக்கொண்டால், இன்னும் மோசமான பிரச்னைகள் தோன்றிவிடும்.

✷

## நேருவின் இந்தியா

பண்டித நேரு 1936-ஆம் ஆண்டு அக்டோபர்மீ சென்னைக்கு விஜயம் செய்திருந்தார். ஒரு நாள் காலை எட்டுமணிக்கு ஸ்ரீ எஸ். சத்யமூர்த்தியின் வீட்டிலிருந்து, நேரு வெளியே வந்து ஒரு காரில் ஏறப்போனார். அப்போது, என் நண்பர் ஒருவர், நேருவின் 'சமீபக் கட்டுரைகள்' என்ற புத்தகத்தின் ஒரு பிரதியை அவரிடம் நீட்டி, அதில் அவருடைய கையெழுத்தைப் போட்டுத் தருமாறு, அவரைக் கேட்டுக் கொண்டார்.

நேரு தமது கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "நான் திட்டப்படி கண்டிப்பாய் நடப்பவன். கூட்டத்துக்குப் போக இப்போதே நேரமாகிவிட்டது" என்றார்.

"பண்டிட்ஜீ, உங்கள் கையெழுத்தைப் பிச்சை கேட்கிறேன்; போடுங்கள்" என்றார் என் நண்பர். "எனக்குப் பிச்சைக்காரர்களைக் கண்டாலே பிடிக்காது. அவர்கள் எனக்கு வேண்டவே வேண்டாம்" என்றார் நேரு.

என் நண்பரும் விடவில்லை: "ஆனால், இந்தியா நிறையப் பிச்சைக்காரர்கள் தானே யிருக்கிறார்கள்" என்று குத்தலாய்ச் சொன்னார்.

அதற்கு நேரு, "நீர் என்னை அவமதிக்கிறீர். நான் உமக்கு உறுதியாய் ஒன்று சொல்லுகிறேன், கேளும்: எனது இந்தியாவில் பிச்சைக்காரர்களுக்கு இடமே கிடையாது. பிரிட்டிஷ் இந்தியாவில் வேண்டுமானால், அவர்கள் இருக்கலாம்" என்று பதில் அளித்தார்.

—'போலி கிரிட்டிக்', (மைஸிந்தியா)

## இலக்கிய லாபம்

உயர்ந்த இலக்கியங்களைப் படிப்பதால், உங்களுக்கு ஒரு லாபம் உண்டு. இலக்கியம் உங்களுக்குச் செல்வத்தைப் பழிக்கத் துணிவு தரும்; அந்தச் செல்வத்தைச் சம்பாதிக்க வழிதெரியாமலும் செய்துவிடும்.

—ரஸ்ஸல் கிரீன்.

# புத்தக உலகம்

**வீட்டு வைத்தியர்:** ஆசிரியர்: டாக்டர் தி. சே. சௌ. ராஜன். வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. டெம்மி 1×8. 470 பக்கம். விலை ரூ. 7.

நம்முடைய உடல் எப்படி அமைந்திருக்கிறது, அதன் உள்ளுறுப்புக்கள் யாவை, அவற்றின் அமைப்பு யாது, அவை எவ்வாறு இயங்குகின்றன, நோய் எப்படி உண்டாகிறது, நோய் வராமல் தடுக்க என்ன செய்ய வேண்டும், வந்த நோயை முளையிலேயே கிள்ளிவிடுகிற பரிகாரங்கள் யாவை - என்பவை அனைத்தும் இந்நூலில் படிப்படியாக, தெளிவாக, நேரடியான பேச்சுத் தமிழில் சொல்லப்பட்டிருக்கின்றன. விஷய விளங்கப் படங்கள் நிறைய இருக்கின்றன. சட்டென்று வேண்டிய விஷயத்தைப் புரட்டிப் பார்த்துக்கொள்ள உதவும், விஷய அகராதியும் இருக்கிறது. இந்நூலின் முன்னுரையில் ராஜாஜி சொல்வதுபோல், வைத்திய 'விஷயங்களைத் தெரிந்து கொள்வது எப்போதும் நல்லது... அரை குறையாகத் தெரிந்துகொண்ட விஷயங்களை நாமே பிரயோகத்தில், பரீட்சை செய்து பார்ப்பது அபாயம்... டாக்டர்கள் கிடைக்கா விட்டால் ஓரளவு புத்திசாலித்தனமாக நடந்துகொள்ள மாத்திரம், இந்தப் புஸ்தகம் வழி காட்டும்.' இங்கிலீஷ் (அலோபதிக்) வைத்திய முறை, சாதாரண வீட்டு வைத்தியத்துக்கு எல்லாருக்கும் எளிதாயிராமல் போனாலும், ஆசிரியர் 'தம்முடைய நாற்பது வருஷத்து வைத்திய ஆராய்ச்சியையும் அநுபவத்தையுங் கொண்டு சாதாரண மக்களுக்கென்று அவர் எழுதிய இந்த நூல் மிகவும் பயன்படக் கூடிய புஸ்தகம் என்பதில் சந்தேகமில்லை.'

**பிரிட்டிஷாருக்கு எனது வேண்டுகோள்:** மகாத்மா காந்தி. மொழிபெயர்ப்பு: அ. லெ. நடராஜன். வெளியிட்டோர்: புதுமைப் பதிப்பகம், காரைக்குடி. டெம்மி 1×8. 136 பக்கம். விலை ரூ. 2-8-0.

இப்போது நடந்து முடிந்தும் முடியாததுபோல் காணும் இந்த இரண்டாவது உலகப் பெரும் போரைப் பற்றியும், பிரிட்டிஷாரின் பங்கு இதில் எந்த அளவுக்கு, எந்த முறையில், எந்த நோக்கத்தோடு இருந்து வந்துள்ளது என்பதைப் பற்றியும், அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்களுக்குக் காந்திஜி அளித்த பேட்டிகளின் விவரமும், காந்திஜியின் கட்டுரைகளும் கொண்ட இந்தத் தொகுப்பு நூல், பிரிட்டிஷார் இந்தியாவை விட்டு ஏன் வெளியேற வேண்டும் என்பதற்குக் காரண காரியங்களைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. மொழி பெயர்ப்பு, சரளமாயிருக்கிறது. அரசியல் விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ள அவாவுகிறவர்கள் மட்டுமேயன்றி, பொது அறிவையும் நாட்டுநடப்பின் உண்மை நிலைகளையும் தெரிந்து கொள்ள அவாவுகிற எல்லாருமே இதனைப் படிப்பது பயன்தரும்.

**அருமைப் புதல்விக்கு:** ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தியின் கடிதங்கள். தமிழாக்கியவர்: எஸ். நீலமேகம். வெளியிட்டோர்: தமிழ்ப் பண்ணை, தியாகராயநகர், சென்னை. கிரௌன் 1×8. 333 பக்கம். விலை ரூ. 5.

ஜவாஹர்லால் நேரு தம் புதல்விக்கு எழுதியதைப்போல், ஸ்ரீ. சத்தியமூர்த்தியும், அன்னார் சிறைப்பட்டிருந்த காலத்தில், தம் புதல்வி ஸ்ரீமதி லட்சுமிக்கு, 27—5—1941 முதல் 11—8—1941 வரையில், நடு நடுவில் ஒரு சில நாட்கள் தவிர, நாள்தோறும் ஆங்கிலத்தில் எழுதி வந்த 68 கடிதங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு இந்தப் புத்தகம். கல்யாண விஷயம் தொடங்கி, கல்வி, கலை, இலக்கியம், மதம், நட்பு, சமூகம், அரசியல், பிச்சைக்காரர் தொல்லை, மிருகவேட்டை,

சாப்பாடு, பகவத் கீதை முடியச் சகல விஷயங்களையும் பற்றி இதில் தமிழில் சரளமான முறையில் சொல்லப் பட்டிருக்கிறது. தமிழில் சிறந்த பேச்சாளரான ஆசிரியர் தமிழிலேயே இந்தக் கடிதங்களை எழுதியிருந்தால், மொழி பெயர்ப்பதால் ஏற்படக் கூடிய செயற்கைப் போக்கு இல்லாம லிருந்திருக்கும். நாம் எதிர்ப்பார்க்கிற அளவுக்குப் பொருள் ஆழம் இல்லை. இருந்தாலும், ஸ்ரீ சத்தியமூர்த்தியின் ஆழ்ந்த அறிவாற்றலும், அனுபவமும், பரந்த மனப்பான்மையும், இந்தப் புத்தகத்தின் மூலம் தமிழருக்கு ஓரளவு பலனளிக்குமென்பது நிச்சயம்.

**ஸ்டர்லிங் நிலுவை:** ஆசிரியர்: ஜே. ஸி. குமரப்பா. மொழி பெயர்ப்பு: மீ. விநாயகம். வெளியிட்டோர்: கதம்பம் வெளியிடு, 46, முத்துமாரிச் செட்டித் தெரு, ஜி. டி., சென்னை. கிரௌன் 1×8. 16 பக்கம். விலை அணா ஐந்து.

கிளைவ் பிரபு காலமுதலே பிரிட்டிஷார் இந்தியாவைச் சுரண்டி வருகிறார்கள். வெளிநாடுகளில் அவர்கள் போட்ட சண்டைகளுக்கு ஆன செலவை, இந்தியாவின் தலையில் சுமத்தினார்கள். 1939-ல் 100 கோடி ரூபாய் காகித நாணயம் புழங்கி வந்தது. 1944-ல் இது 1,000 கோடி ரூபாயாக உயர்ந்தது. தங்க இருப்புமட்டும் முன் இருந்த அதே 40 கோடிதான். பிரிட்டனுக்கு இந்தியா 11 கோடியே 20 லட்சம் ரூபாய் கடன் பட்டிருந்தது செல்லுபடியாகி, இந்த யுத்தத்தில் பிரிட்டனுக்கு இந்தியா சரக்குகள் கொடுத்ததன் மூலம், பிரிட்டன் இந்தியாவுக்கு இரண்டாயிரம் கோடி ரூபாய் கடன் பட்டிருக்கிறது. இது தான் ஸ்டர்லிங் நிலுவை. இது வசூலானால், இந்தியாவுக்கு நல்லது. பிரிட்டன் சால்ஜாப்புச் சொல்லி வருகிறது இந்த விஷயங்கள் இதில் தெளிவாக விளக்கப்பட் டுள்ளன. ஆசிரியரின் யோசனைகள் வரவேற்கத்தக்கன. 16 பக்கங்களுக்குள்ளே இத்தனை எழுத்துப் பிழைகள் இருப்பது பெரு வியப்பே.

(1) **புரொபசர் ரங்காவின் அரசியல்:** தெலுங்கில் எழுதியவர்: வாஸு. மொழி பெயர்ப்பு: தோழர் மணலி கந்தசாமி. கிரௌன் 1×8. 44 பக்கம். விலை அணா 4. (2) **சிட்டகாங் போராட்டம் - அன்றும் இன்றும்:** ஆசிரியை: கல்பனா தத். மொழி பெயர்ப்பு: ஜே. எம். கல்யாணம். கிரௌன் 1×8. 24 பக்கம். விலை அணா 2. (3) **எந்தக் கட்சியில்?** நேருஜி புனராலோசனை செய்யுங்கள்: ஆசிரியர்: டாக்டர் ஜி. அதிகாரி. மொழி பெயர்ப்பு: ஸி. எஸ். சுப்ரமண்யம். டெம்மி 1×16. 40 பக்கம். விலை அணா 3. (4) **வெற்றியாருக்கு?:** பி. ஸி. ஜோஷி. மொழி பெயர்ப்பு: ஸி. எஸ். சுப்ரமணியம். டெம்மி 1×16. 66 பக்கம். விலை அணா 1. (6) **ஒப்பிலாத சமுதாயம்:** ஆசிரியர்கள்: டி. என். பிரிட், ஹியூவெட் ஜான்ஸன். மொழி பெயர்ப்பு: நா. வானமாமலை, எம். ஏ. டெம்மி 1×16. 84 பக்கம். விலை அணா 8. வெளியிட்டோர்: ஜனசக்தி பிரசுராலயம், 1-6, டேவிட்ஸன் தெரு, ஜி. டி., சென்னை.

சோவியத் ருஷ்யா, கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கம்யூனிஸ்ட் கட்சித் தொடர்பு, இடையில் இவை இரண்டுக்கு மிடையே ஏற்பட்டுள்ள பிணக்கு, கம்யூனிஸ்டுகளின் மெய்யான சேவையும் நோக்கமும், ஆகிய விஷயங்கள் சம்பந்தமான உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட பிரசுரங்கள் ஓரளவில் உதவும்.

**விஜயன்:** ஆசிரியர்: ரா. அ. பத்மநாபன். வெளியிட்டோர்: ஸ்டார் பிரசுரம், பாலக்கரை, திருச்சினாப்பள்ளி. கிரௌன் 1×8. 54 பக்கம். விலை அணா 12.

சோழ சேனாதிபதி வீரசேனன், தன் கப்பல் கரைதட்டியபோது தனக்குப் புகலிட மளித்து உபசரித்த சாவக (ஜாவா) நாட்டினரைப் படைப் பலத்தால் ஆக்ரமிக்க முயலுகிறான். குருநாதர் நந்திதேவர் இது தர்மமல்ல என்று எடுத்தோதுகிறார். வீரசே

னன் கேட்கவில்லே. போர் மூளு கிறது. வீரசேனனுடைய அதர்மப் போக்குப் பிடிக்காத விஜயன் சாவக மன்னனிடம் போய், அவனுக்கு உறுதுணையாயிருந்து, அம்முயற்சியில் உயிரிழக்கிருன். வீரத்துக்கும் தர்மத் துக்கும் நடக்கும் போராட்டம், இறுதியில் தர்மத்துக்கே வெற்றி யளிக்கிறது. பொன்போன்ற கருத்துக்கள். இனிய, நல்ல தமிழ் நடை. இந்த மாதிரி நல்ல நாடகங்கள் தமிழில் வருவது தமிழுக்குப் பெருமை. நயமான தமிழில் இயன்றிருக்கும் இந்தப் புத்தகத்தில் உள்ள சிற்சில எழுத்துப் பிழைகளேயும், ஒற்றுக் குறைவுகளேயும் அடுத்த பதிப்பில் சரி செய்து விடுவது நமது மகிழ்ச்சியைப் பரிபூரணமாக்கி விடும்.

**ஒரு நாள் கூத்து:** ஆசிரியர்: நாடோடி. வெளியிட்டோர்: நாடோடி, தியாகராயநகர், சென்னே. டெம்மி 1×8. 140 பக்கம். விலே ரூ. 3.

வாழ்க்கையின் அன்ருட நிகழ்ச்சிகளே நகைச்சுவையுடனும், அனுதாபத்துடனும் சித்தரிப்பதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களும் நம்மோடு சேர்ந்து சிரித்துத் திருந்தும்படி செய்துவிட முடியும். இதிலுள்ள 28 கட்டுரைகளும் இந்த முயற்சியில் வெகுவாக வெற்றி பெற்றுள்ளன என்றே சொல்லவேண்டும். தங்கு தடையின்றி, மள மள வென்று செல்லும் ஆசிரியருடைய தமிழ் நடையில், அவரது சொந்தச் சூழ்நிலேயின் எதிரொலி விரவி நிற்பது இயல்பே; ஆனல், கட்டுரைகளின் பகைப்புலம் அவரது குடும்பத்துக் குள்ளேயே இருந்தால்தான், படிப்பவர்கள் ரசிப்பார்கள் என்று எண்ணுவதைப் பலர் ஆதரிக்கமாட்டார்கள்.

**என் சரிதம்:** (சுருக்கம்) மகாத்மா காந்தி எழுதிய சுயசரிதத்தின் சுருக்கமான பதிப்பு. பதிப்பாசிரியர்கள்: மகாதேவ தேசாய், ஹரிபாவூ உபாத்தியாயர். மொழி பெயர்ப்பு: கா. ஸ்ரீ. ஸ்ரீ. வெளியிட்டோர்: அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னே. டெம்மி 1×8. 230 பக்கம். விலே ரூ. 3-8-0.

கைக் காகிதத்தில் அச்சடித்துள்ள இந்தப் பதிப்பு மிக நயமாக மொழி பெயர்க்கப் பெற்றிருக்கிறது. மாணவருக்காகத் தயாரிக்கப்பெற்ற இதில், முன்பு இல்லாத புது விஷயங்கள் பல சேர்க்கப் பெற்றுள்ளன. இதை அனேவரும் வாங்கிப் படியுங்கள் என்று சொல்லத் தேவை யில்லே. தாமாகவே எல்லாரும் வாங்கிப்படிப்பார்கள் என்பது நிச்சயம்.

— சுப. நாராயணன்.

*

## சட்டப்படி எச்சரிக்கை

ஸான் பிரான்ஸிஸ்கோ நகரில் ராணுவ சிப்பாய்களுக்கே ரயிலில் முதலில் இடம் கொடுத்து வந்தார்கள். இதனல், தனியாய்ப் பிரயாணம் செய்த பெண்கள், தனியாய்ப் பிரயாணம் செய்யும் ஸோல்ஜர்களே ஒட்டிக்கொண்டார்கள். ரயில்வே கேட்டைத் திறந்துவிட்ட காவலர்களுக்கு இந்த விஷயம் தெரிந்துவிட்டது. "தாய்மார்களே! தயவு பண்ணி, ஒரு சோல்ஜருக்கு ஒரு மனேவி விகிதம் வாருங்கள். அதற்கு மேல் வந்துவிடாதீர்கள்" என்று அவர்கள் எச்சரித்தார்கள்!

## சென்றதும் வருவதும்

'இறந்த காலத்துக்குத் தொப்பியைத் தூக்கு; வருங்காலத்துக்குக் கோட்டைக் கழற்று' என்பது ஓர் அமெரிக்கப் பழமொழி. 'சென்றதற்கு வணக்கம்; வருவதற்கு உழைப்பு' என்பது பொருள்.

# இப்படிச் சலவை செய்தால் அடித்துத் துவைப்பதனாலுண்டாகும் நாசத்தைத் தடுக்கலாம்





பழைய முறையில் ஆடைகளை அடித்துத் துவைத்துச் சலவை செய்வதால் துவாரங்கள், கிழிசல், கரையோரமாகத் தையல் விட்டுப்போதல் . . . முதலிய அநாவசியமான வீண் செலவிற்குரிய நாசம் ஏற்படுகிறது.

1

ஆடைகளைப் பாழ் படுத்தாமல் எப்படித் துவைத்துச் சலவை செய்யலாமென்று இப் படங்கள் உங்களுக்குக் காட்டுகின்றன. (1) சலவை செய்யவேண்டிய உடையை நன்றாக நனையுங்கள் — குழாய், தொட்டி, குளம், ஆறு அல்லது ஓடை ஆகிய இவற்றை நீங்கள் உபயோகிக்கலாம். அதனால் யாதொரு வித்தியாசமும் இல்லை. (2) நன்றாக உடை நனைந்தபிறகு ஸன்லைட் சோப்பை அதன்மீது முழுவதும் தேயுங்கள். (அழுக்கேறின பாகத்தில் ஸன்லைட்டைத் தாராளமாகத் தடவவும்.) (3) சோப் போடப்பட்ட உடை முழுவதும் பரவ கசக்கவும் (சப்பாத்தி செய்ய மாவை எப்படி நீங்கள் பிசைவீர்களோ அப்படிச் செய்யவும்). துணியின் இழையில் சோப் நுரை படும்படி அதை முழுவதும் கசக்கிப் பிழியுங்கள். முரட்டுத்தனமாக துணியைத் துவைத்து கசக்கவேண்டிய அவசியமே இல்லை. அழுக்குள்ள இடங்களிலெல்லாம் நுரை படும்படி தேயத்துக் கசக்கினால், ஸன்லைட்டின் சுயமாக வெளுக்கும் நுரை எல்லா அழுக்கையும் மெதுவாகப் போக்கிவிடும். இந்த சக்திவாய்ந்த நுரையிலுள்ள "சிறந்த" சோப் பட்டமாத்திரத்தில் அழுக்கு உடனே நீங்கிவிடுகிறது. ஆடையிலுள்ள அழுக்கு நீங்கிப்போய் நுரையிற் சேர்ந்துவிடுகிறது. ஆகையினாலே துணியை நுரையிலிருந்து அலசிக் கழுவும்போதே அழுக்கையும் நீங்கள் அகற்றிவிடுகிறீர்கள். (4) அழுக்கு இப்பொழுது அடங்கியிருக்கிற நுரையை ஆடையிலிருந்து போகும்படி நன்றாக அலசிச் சுத்தம் செய்யுங்கள்.

2 3 4



இந்த மிருதுவான ஸன்லைட் முறைப்படி துணிகளைச் சலவை செய்தால் அவை வெகுநாளைக்கு நீடித்துவரும்.





## ஸன்லைட் சோப்
## துணிகளைப் பாதுகாக்கிறது

874-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED




மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.




# லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை

LYK 81 G


லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்


உயர்தர
நகைகளுக்கு
பி.ஏ.ராஜுசெட்டியார் & பிரதர்
வைரம், தங்கநகை வியாபாரிகள்
கோயமுத்தூர்

# காலையில் எழுந்திருக்க



## இன்பமான வழி

நீங்கள் காலையில சுலபமாக எழுந்திருக்கிறீர்களா அல்லது எழுந்தபிறகு சோம்பலாகவும் மந்தமாகவும் இருக்கிறீர்களா? எழுந்தவுடன் சுறு சுறுப்பாக இருக்க ஒரு கப் டீ அருந்துவதுதான் சிறந்த வழி. இரவின் சோர்வை போக்கி, பகலில் செய்யவேண்டிய வேலைகளுக்கு உங்களை சுறுசுறுப்பாகவும் சுமுகமாகவும் இருக்கச் செய்வது இந்த ஒரு கப் டீ தான். இதை எல்லோரும் அனுபவிக்கலாம். சூடான டீ மலபந்தத்தை நிவர்த்திக்கும். அருந்தியவுடன் உடலுக்கும் மனதுக்கும் ஒருங்கே உற்சாகமளிக்கும்.

உலகெங்கும் கோடிக்கணக்கான மக்கள் காலையில் டீ அருந்தும் நற்பழக்கத்தை கைக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நல்ல டீ தயாரிக்கும் சில சுலபமான முறைகளை அனுசரிக்கத் தவறுவதால் டீ அருந்துவதின் பூரண பலனை அநேகர் பெறுவதில்லை. நல்ல முறையில் தயாரித்த சிறந்த டீயை அருந்துங்கள்.



## நல்ல டீ தயாரிக்கும் முறை

1. கெட்டிலில் டீ காய்ச்சக்கூடாது. டீ பாத்திரத்தை உபயோகியுங்கள்.
2. உலர்ந்த டீயை பாத்திரத்தில் போடும்போது பாத்திரம் ஈரமில்லாமல் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் நறுமணமுள்ள கஷாயம் கிடைக்கும்.
3. கப்புக்கு ஒரு டீ ஸ்பூன் விதமும், பாத்திரத்துக்காக ஒரு டீ ஸ்பூனும் டீ போடவும்.
4. புதிதாக காய்ச்சிய நீரையே உபயோகிக்கவும்; ஒரு தரம் காய்ச்சிய நீரையோ, அதிகமாகவோ அல்லது குறைவாகவோ காய்ச்சப்பட்ட நீரையோ ஒருபோதும் உபயோகிக்காதீர்கள். தள தள வென்று குமிழியிட்டு கொதிக்கும் நீர் தான் சரியாக காய்ச்சின நீர்.
5. கஷாயம் இறங்க குறைந்தது 5 நிமிஷ கால நேரம் வேண்டும்.
6. பாத்திரத்தில் இருக்கையிலேயே பால் சர்க்கரை சேர்க்காதீர்கள்; கப்புகளில் விட்ட பிறகு சேர்க்கவும்.

எந்தநேரமும்

# டீ

டீ அருந்தும்நேரம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது.

IK-246-A-TM

Printed and Published by Vai. Govindan at the Shakti Press Ltd., (Shanti Press) 115-E, Mowbrays Road, Royapettah, Madras
Managing Editor: Vai. Govindan. Editor: T. J. Ranganathan